Registered as a News Paper

விலை: 12.00

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly

பக்கம் - 16

நாதம்—14 வெள்ளி—16 13—19 ஜூன் 2003

## ரோக்கியோ கார்னிவெல்



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 13.06.2003

# சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்த மட்டுமே....!

ரோக்கியோ மாநாடு சமாதானம் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு சகாப்தம் ஆரம்பிப்பதைக் குறிக்கின்றது. இவ்வாறு சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளமையானது எத்தகைய அர்த்தத்தை மனதில் கொண்டு கூறப்படடது என்பதை அவரால்தான் விளக்க முடியும். கடன் வாங்கி பொருளாதார சுபீட்சத்தை உருவாக்க சகாப்தம் ஒன்றும் மகிழ்ச்சிக்குரிய விடயமல்ல... அதன் மூலம் சமாதானம் உறுதியாகி விடும் என்றும் எவரும் நம்பப்போவதுமில்லை.

'சமாதானம், என்ற வார்த்தையைப் பயன்படுத்தி (வெறும் வார்த்தையை மட்டுமே...) சர்வதேச சமூகத்திடம் சிறிலங்கா அரசு தனது பொருளாதார நெருக்கடியை தீர்க்க பெருந்தொகைநிதியைப் பெற்றுள்ளது என்றுதான் இதனைக் கூறவேண்டும்.

வெறுமனே யுத்தநிறுத்தமும், பாதை திறப்பும் வர்த்தகத் தொடர்பும் போக்குவரத்திற்கான வீதியமைப்பு நடவடிக்கைகளும் கட்டட நிர்மாணங்களும் மட்டும் தான் சமாதானத்தின் பெறுபேறுகள் என எவரும் அர்த்தம் கொண்டு விடமுடியாது.

'சிறிலங்கா சமாதானப் பாதையில் வெகுதூரம் கடந்துள்ளது. ஆனால் அவை தடைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது என்றும் ரணில் அங்கு கூறியுள்ளார். உண்மைதான் போரினால் வெல்லமுடியாத 'A-9, பாதையை- நெடுஞ்சாலையை சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகளின் அநுசரணை காரணமாக வெகுதூரம் கடக்க சமாதானம்

வழிவகுத்துத்தான் உள்ளது. ஆனாலும் அவர்கள் எதிர் கொள்ளும் தடைகள் யாவும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட தடைகளேயாகும்.

தாங்கள் ஏற்படுத்திய-தமிழர்களை பொறிக்குள் சிக்கவைக்க உருவாக்கிய அரசியல்-சட்ட இராணுவத் தடைகள் யாவும் இன்று அவர்களுக்கே தடையாக உருவாகியுள்ளமைதான் நகைப்பிற்குரிய விடயமாகும்.

அவர்களின் வியூகப் பொறிகளுள் இன்று அவர்களே சிக்கித் தவிக்கிறார்கள்.

சமாதானம் ஒரு முதிர்ந்த நிலையை எய்தியுள்ளதால் அதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியும் எனக்கூறும் ரணில் வெறும் வார்த்தைகளாக மட்டுமே அதனைக் கூறியுள்ளார் என்பதும் அவரின் நெஞ்சரித்த உண்மையாகும்.

சமாதானம் அதன் நிலையின் ஆரம்பக்கட்டத்தையே இன்றும் கடக்கவில்லை என்பதே இன்றைய யதார்த்தமாகும். பேச்சு வார்த்தைகள் தொடர்ச்சியென்பது சமாதானத்திற்கான அணுகுமுறையின் ஓரம்சம் மட்டுமே.


வெறும் பேச்சுக்கள் சமாதானத்தை கொண்டுவந்து விடாது அறிக்கைகளால் மட்டும் சமாதானத்தை உறுதிப்படுத்தி விடவும் முடியாது.

அது பல கட்டங்களையும் க~டங்களையும் துணிச்சலுடனும் மனத் தூய்மையுடனும் விவேகத்துடனும் கையாளப்பட வேண்டிய் கடக்க வேண்டிய விடயமாகும்.

வெறும் புனர்வாழ்வு புனரமைப்பு தொடர்பானதும் தமிழ் மக்களின் இயல்புவாழ்க்கைக் கான நிர்வாகம் தொடர்பானதுமான இடைக்கால நிர்வாகத்தையே ஒரு 'நிபந்தனையாக' விசுவரூபப்படுத்த முயலும் அரசு சமாதானத்தில் பெருமளவு தூரத்தைக் கடந்து விட்டதாகக் கூறுவது வேடிக்கை யாக உள்ளது.

இடைக்கால நிர்வாகம் சமாதான நகர்வின் அடுத்த கட்டத்திற்கான ஒரு தளம்மட்டுமே. இது ஒரு நிபந்தனையேயல்ல. இது அரசியலமைப்புக்கு அப்பாற்பட்ட ஒரு அங்கமே யாகும். இதற்கான அதிகாரங்கள் கூட சமாதான நடவடிக்கையின் அவசியம் கருதி பிரத்தியேகமாக உருவாக்கப்பட வேண்டியவையேயாகும்......

இதனையே புரிந்து கொள்ளத் தயங்கும் அரசின் சார்பில் ரணில் பேசியுள்ள ரோக்கியோ பேச்சின் ஷஅர்த்தம், சர்வதேச சமூகத்தை நம்பவைக்கும் அவசரத்தன்மையையும் அதிகப் பிரசங்கித் தனத்தையுமே கொண்டுள்ளது.




## தூரனின் பார்வை



# ரோக்கியோ மாநாடு- விடுதலைப்புலிகள்=?

மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கும், பரபரப்புக்குமிடையில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு ரோக்கியோவில் நடைபெற்று முடிந்துள்ளது.

சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா, 'தனக்கு இந்த மாநாடு பற்றித் எதுவும் தெளிவாகத் தெரியாது' என்று கூறி மாநாடு வெற்றிபெற 'ஆசி' வழங்குமாறு விடுத்த ஜப்பானின் கோரிக்கையை நிராகரித்த நிலையில் அவரின் எரிச்சலுக்கும், கோபத்திற்கும், புறக்கணிப்புக்கும் உள்ளான நிலையில் நடைபெற்று முடிந்துள்ள இந்த மாநாட்டில் ரணில் எதிர்பார்த்த நிதி நீண்டகாலக் கடன் அடிப்படையில் கிடைத்துள்ள போதிலும் அதற்கென நிதி வழங்கும் நாடுகள் நிபந்தனைகளையும் விதித்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த நிபந்தனைகளைச் சிறிலங்கா அரசு எந்த அளவில் நிறைவேற்றும் என்பதும் அதற்குச் சனாதிபதியினதும் அவரின் பின்னால் தற்போது தற்காலிகமாவேணும் அணிதிரண்டு நிற்கும் பேரினவாதக்கும்பல்களும் எந்த அளவு ஆதரவை வழங்கும் என்பதும் வேறுவிடயம். நிச்சயமாகச் சமாதானம் என்ற இலக்கில், அதனை எட்டுவதற்கான சகல வழிமுறைகளையும் கையாள அரச முயற்சிகளை மேற்கொள்ளும் அரசின் சர்வதேச சமூகத்திற்கான உத்தரவாதத்தை நிறைவேற்ற அவர்கள் எந்தவகையிலும் ஒத்துழைப்பாளர்கள் என எவரும் நம்புவதற்கில்லை.

சமாதான நகர்வுகளில் ரணில்'சாண்' அளவு ஏறமுயன்றால் அவரை 'முழமளவு' தள்ளிவிடும் நோக்குடன் தனது சமாதான எதிர்ப்பு நகர்வுகளை மேற்கொள்ளும் சந்திரிகாவின் நடவடிக்கைகள் ரணில் விரும்பியும், விரும்பாமலும் சர்வதேச அழுத்தங்களின் பாற்பட்டு மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள, சமாதான முயற்சிகளைச் சிதைக்கும் நோக்கத்தையே கொண்டதாக உள்ளதை விபரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

இருப்பினும், சிறிலங்கா அரசுக்கும் சரி, அரசை எந்தவகையிலாவது கைப்பற்றும் நோக்குடன், அதற்கு அச்சுறுத்தலாக இயங்கி வரும் நிறைவேற்று அதிகார சக்தியுடன் அணிதிரண்டுள்ள பேரினவாதிகளுக்கும் சரி, ஆட்சியை நடத்த சர்வதேச நிதிப்பிச்சை மிகமிக அவசியம் என்பதில் சந்தேகமில்லை.

கடன்பட்டுத்தான் 'கல்யாணத்தை' நடத்த வேண்டும் என்ற சுயவளமற்ற பரிதாபநிலையே இருதரப்பினருக்கும் உள்ளது. ஆனாலும், அந்தக் கடன் பிச்சை யாரால் பெற்றுக்கொண்டு வரப்படுகிறது என்ற பெருமையைத் தட்டிக் கொள்வதில் தான் இரு சாராருக்கும் கௌரவப் பிரச்சினை.

பொ.ஐ.முன்னணி ஆட்சி புரிந்த காலங்களில் யுத்தத்தைத் தொடர்வதற்கும் தமிழினத்தை அழிப்பதற்கும் 'பயங்கரவாதம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி, சமாதானத்திற்கான யுத்தம் என்ற தனது 'பேய்க்காட்டல்' சொற்றொடரை பிரச்சாரம் செய்து கொண்டு சர்வ தேச அளவில் கடன்களைப் 'பில்லியன்' கணக்கில் பெற்றுக் கொண்டபோதெல்லாம் சந்திரிகாவோ-அவரின் அரசோ அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணிலுக்கு அது பற்றி அவருக்குத் தெரிவித்தோ, அவரிடம் ஆலோசனை கேட்டதோ இல்லை...

அது சந்திரிகாவின் நிறைவேற்று அதிகார- சர்வாதிகார- அணுகுமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இப்போது அதேவிதமான அணுகுமுறையே மாறுபட்ட ஒரு தொனியுடன் ரணிலால் மேற்கொள்ளப்படுகிறது.

அது யுத்தத்தின் பேரால் பெறப்பட்ட நிதி,

இது சமாதானத்தின் பெயரால் பெறப்படும் நிதி,

அது யுத்தத்தின் பேரில்- தமிழினத்தின் மீதான போரைத் தொடரவும், தென்பகுதியை- அதாவது சிறிலங்காப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யவும் பயன்படுத்தப்பட்டது.

இது சமாதானத்தின் பேரில் 'வங்குரோத்து' நிலைக்குத் தள்ளப்பட்டுத் தள்ளாடிக் கொண்டிருக்கும் சிறிலங்காவின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், தென்பகுதியை மேலும் வலுப்படுத்தவும் பயன்படுத்தப்படப்போகின்றது.

-அவ்வளவுதான், ஆனால் இப்போது வழங்கப் படவுள்ள பெருமளவு நிதியுதவிக்கு 'சமாதான முன்னெடுப்பின் அவசியம், நிபந்தனையாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

நிபந்தனையை அரசு ஏற்றுக் கொண்டு - ரணில் அவர்கள் நிதி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் அது தொடர்பாகப் பேசுகையில் எவ்வகையிலும் சமாதானம் முன்னெடுக்கப்படும் என்று கூறினாலும் கூட, அவரின் ஏனைய நடவடிக்கைகள் அதனை நம்பவைப்பதாக இல்லை.

ரணில் அதிகாரமற்ற, ஆட்சிப் பலமற்ற,திடமான முடிவுகளை எடுக்கும் திராணியற்ற இன்னும் கூறப்போனால் இனப்பிரச்சினைக்கு,நிரந்தரமான நியாயமான தீர்வொன்றை பகிரங்கமாகவும், தெளிவாகவும் முன்வைக்கும் துணிவற்ற ஒரு சராசரி சிங்களப் பேரினவாதத் தலைவர்களில் ஒருவராகவே இன்னமும் உள்ளார் என்பதையே அவரின் அண்மைக் காலத் தீர்மானங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இடைக்கால நிர்வாகம் குறித்த அவரின் சமாளிப்புத் தன்மை கொண்டதான மாற்று யோசனைகள் உறுதியான அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான மனோதிடத்தை அவர் கொண்டிருப்பவராக இல்லை என்பதை உணர்த்திநிற்கின்றது.

அவர் சனாதிபதி சந்திரிகாவின் மிரட்டலுக்கு அடிபணியாதவர் போன்று தன்னைக் காட்டிக் கொள்ள முயன்றாலும் கூட அவர் தனது பதவி எந்த நேரத்திலும் அவரால் அபகரிக்கப்படலாம் என்ற அச்சத்தை உடையவராகவே உள்ளர்.

இந்த அச்சம் அவரைத் தீர்க்கமான முடிவெதனையும்-அதுவும் தமிழ் மக்களுக்கான உரிமைகள் மற்றும் சமாதான முன்னெடுப்புகள் குறித்த தீர்மானங்கள் எதனையும் மேற்கொள்ள அனுமதிக்கவே மாட்டாது.

இத்தகைய தீர்மானங்கள் எதனையும் இன்றைய சிறிலங்காவின் அரசியல் யாப்பின் வரையறை எல்லைக்குள் நின்று கொண்டு எடுத்தல் என்பது சாத்தியமேயில்லை.

இன்றைய அரசியல் யாப்பின் எல்லைகள் தமிழ் மக்களை ஏன் சிறுபான்மை இனங்கள் அனைத்தையுமே ஒரு அடிமைப் பொறிக்குள்

(15ம்பக்கம் பார்க்க...)

☞ ஊமைகள் பேசி, செவிடர்கள் கேட்டுப் புரிந்து கொள்ளக் கூடிய மொழி கருணை. - கிரிஸ்டியன்போவீ

# ரோக்கியோ கார்னிவெல்

கிடைக்கப்பெற்ற சில ஊர்ஜிதமற்ற தகவல்களின் படி கொழும்பிலுள்ள யப்பானியத் தூதரகம் கடந்தகிழமை வாரஇறுதி நாட்களிலும் வழமைக்கு மாறாகத்திறந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகள் கடைசி நேரத்தில் தமது மனதை மாற்றிக்கொண்டு ஜப்பானுக்கு வந்தாலும் வரலாம் என்ற எதிர்பார்க்கையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

அப்படியேதும் மனமாற்றம் நிகழ்ந்தால் கடைசிநேரத்தில் அவர்களுக்குரிய விசா ஏற்பாடுகளை செய்வதற்கு வசதியாக தூதரகம் திறந்திருந்ததாம். அதோடு அவர்களை அவசர அவசரமாக ஏற்றிக்கொண்டுபோக விமான நிலையத்திலும் ஏற்பாடுகள் இருந்தனவாம்.

ஆனால் புலிகள் ரோக்கியோவுக்குப் போகவில்லை.

அவர்கள் ரோக்கியோவிற்கு வருவார்கள் என்ற நம்பிக்கையில் தான், சில மாதங்களுக்கு முன்புவரை ரணில் விக்கிரமசிங்க இந்த ஆண்டின் நடுக்கூறோடு சமாதானம் திரும்பிச் செல்லவியலாத ஒரு வளர்ச்சியைப்பெற்றுவிடும் என்று அடிக்கடி கூறிவந்தார்.

ஆனால் எந்த ரோக்கியோ மாநாட்டை வைத்து அவர் அப்படிக்கூறினாரோ அதே ரோக்கியோ மாநாட்டையொட்டி சமாதானம் றிவேர்சில் போகக்கூடிய நிலைமைகள் அதிகம் வளர்ச்சி பெற்றமைதான் இதிலுள்ள சோகமான முரண்.

ரோக்கியோ மாநாடு சமாதானத்துக்கான சர்வதேச சமூகத்தின் பங்களிப்பை வெளிக்காட்டும் ஒரு முக்கிய சந்திப்பு. கடந்த 16 மாத கால சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை இது ஒரு முக்கிய சந்தி. ஆனால் அந்தச்சந்திவரை புலிகளை அழைத்துக் கொண்டுவர அரசாங்கத்தாலும் முடியவில்லை சர்வதேச சமூகத்தாலும் முடியவில்லை.

சமகாலத்தில் உலகில் அதிகம் சர்வதேச மயப்பட்ட ஒரு சமாதான முயற்சியாக இலங்கைத்தீவின் சமாதான முயற்சிகள் காணப்படுகின்றன.

பலஸ்தீனத்தில் அமெரிக்கா நேரடியாகத் தலையிட்டது. ஐரிஷ் பிரச்சினையிலும் அமெரிக்கா தலையிட்டது. ஆபிரிக்காவில் பெருமளவுக்கு ஐரோப்பிய நாடுகள், குறிப்பாக முன்பு அந்தந்த ஆபிரிக்க நாட்டில் கொலனிகளை வைத்திருந்த நாடுகள் தலையிடுகின்றன. இந்தோனேசியாவில் அசே சமாதான முயற்சியில் பெருமளவுக்கு யப்பான் தலையிட்டது.

ஆனால் இலங்கைத்தீவிலோ அமெரிக்கா, ஐரோப்பா, மற்றும் பன்நாட்டு நிறுவனங்கள் என்பவற்றோடு யப்பானும் ஓரளவுக்கு இந்தியாவும் என்று அனேகமாக எல்லா நடிகர்களும் மேடையேறியுள்ளார்கள் ஆனால் கதாநாயகர்களில் ஒருவராகிய புலிகளைத்தான் காணவில்லை.

புலிகள் இல்லையென்றான பின் அதை சமாதானத்துக்கான உதவிவழங்கும் மாநாடு என்று அழைப்பது அபத்தம் அது கொழும்புக்கு உதவி வழங்கும் ஒரு மாநாடாகச் சுருங்கிவிட்டது.

தமது விசுவாசிகளான ரணிலையும் மொறகொடவையும் பலப்படுத்துவதற்காக அவர்களுடைய எஜமானர்களான அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் சேர்ந்து வைத்த ஒரு விருந்து அது.

அதில் புலிகளையும் அழைத்து 'சமபந்தி' செய்யக் கேட்டது என்பது முன்பு தமிழ் மிதவாதிகள் சாதி ஒழிப்பு என்று சொல்லிக் கொண்டு செய்த சமபந்தி போசனம் போன்றதே.

புலிகள் போயிருந்தாலும் போகாவிட்டாலும் இதில் விளைவு ஒன்றுதான். ஏனெனில் மாநாட்டின் இலக்கு சமாதானத்தின் பெயரால் ரணிலைப்பலப்படுத்துவதே. அதன் மூலம் தமது வர்த்தக வழிகளையும் சந்தை வாய்ப்புக்களையும் குறைந்தது சில ஆண்டுகளுக்காவது பாதுகாப்பது.

புலிகள் இல்லையென்ற பிறகும் மாநாட்டை அவர்கள் நடத்திக் காட்டியதில் இந்தச் செய்தி தெளிவாக வெளிவந்துவிட்டது.

வரும் சனாதிபதித்தேர்தல் வரைக்கும் அதாவது வரப்போகும் மூன்று ஆண்டுகளுக்கு ரணிலைப்பலப்படுத்தும் விதத்தில் இந்த நிதி உதவிக்கான நிகழ்ச்சி நிரல் வரையப்பட்டுள்ளது.

இதில் சந்திரிகாவுக்கும் ஒரு செய்தி உண்டு. அதாவது ரணிலை அவர் நினைத்தபடி கவிழ்க்க முடியாது.

வழமையாக ஓராண்டுக்குத் தான் நிதி தரப்படும் ஆனால் இம்முறை மூன்று ஆண்டுகளுக்கு நிதிதரப்படுகிறது. இதன் மூலம் இலங்கைத்தீவு பற்றிய அவர்களுடைய நிகழ்ச்சி நிரல் எது வென்று தெரிந்துவிட்டது.

ஆனால் ரணிலைப் பலப்படுத்துவது என்பது சமாதானத்தைப் பலப்படுத்துவது ஆகிவிடாது. என்ற செய்தி அந்த மாநாட்டில் புலிகள் பங்கு பற்றாததன் மூலம் சொல்லப்பட்டுவிட்டது.

ரணிலைப் பலப்படுத்துவதன் மூலம் சமாதானத்தைப் பலப்படுத்தி விடலாம் என்பது ஒரு பகுதி உண்மை மட்டுமே. முழு உண்மை என்னவென்றால் - சமாதானத்தைப் பலப்படுத்தினால் தான் ரணிலைப் பலப்படுத்தலாம் என்பதே. சமாதானத்தைப் பலப்படுத்துவது என்றால் ரணிலை மட்டுமல்ல கூடவே புலிகளையும் பலப்படுத்தவேண்டும். ரோக்கியோ மாநாடு அதைச் செய்யத்தவறிவிட்டது.



நன்றி: டெய்லி மிரர்

எனவே ரோக்கியோ மாநாட்டை இனியும் சமாதானத்துக்கான நிதிஉதவி வழங்கும் மாநாடு என்று பொய் சொல்லித்திரிய முடியாது. மெய்யான அர்த்தத்தில் அது சர்வதேச அரங்கில் நிகழ்ந்த, ஹொலிவூட் நட்சத்திரங்கள் கலந்து கொண்ட ஒரு சமாதானக் கார்னிவெல் தான்.

ரணிலைப் பலப்படுத்துவதன் மூலம் சமாதானத்தைப் பலப்படுத்தி விடலாம் என்பது ஒரு பகுதி உண்மை மட்டுமே. முழு உண்மை என்னவென்றால் – சமாதானத்தைப் பலப்படுத்தினால் தான் ரணிலைப்பலப்படுத்தலாம் என்பதே. சமாதானத்தைப் பலப்படுத்துவது என்றால் ரணிலை மட்டுமல்ல கூடவே புலிகளையும் பலப்படுத்தவேண்டும். ரோக்கியோ மாநாடு அதைச் செய்யத்தவறிவிட்டது.

சிலசமயம் புலிகள் அதில் கலந்துகொண்டிருந்தாலும் கூட இப்போதுள்ள நிலவரங்களின்படி ஏதும் அதிசயங்கள் அற்புதங்கள் நிகழ்ந்திருக்கும் என்று நம்பஇடமில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

முதலாவது, உதவி வழங்கும் நாடுகளின் விசுவாசம் பற்றிய சந்தேகம்.

இரண்டாவது, அரசாங்கத்தின் விசுவாசம் மற்றும் அரச நிர்வாகக் கட்டமைப்பின் வினைத்திறன் போதாமை போன்ற பிரச்சினைகள்.

முதலாவது காரணத்தை விரிவாகப் பார்ப்போம். இந்த மாநாடு ரணில் - மொறகொட அரசைப் பாதுகாக்கும் நோக்கிலானது. இதை அவர்கள் சமாதானத்தின் பெயரால் செய்கிறார்கள். எனவே உதவிவழங்கும் நாடுகள் ரணிலுக்கு அடுத்தபடியாகத்தான் யாருக்கும் விசுவாசமாக இருப்பார்கள்.

அதோடு, இந்த உதவி வழங்கும் நாடுகள் ரோக்கியோவிலும் வொஷிங்டனிலும் கூடுவதற்கு முன்பு ஒரு தொடக்க நிலை மாநாடு ஒஸ்லோவில் நடந்தது வாசகருக்கு நினைவிலிருக்கலாம். புலிகள் பங்கு பற்றிய அந்த ஒஸ்லோ மாநாட்டில் முதலில் 70 மில்லியன் டொலர்கள் வாக்களிக்கப்பட்டது. ஆனால் இத்தொகை பின்னாளில் 40 மில்லியன்களாக குறைக்கப்பட்டுவிட்டதாகக்கூறப்படுகிறது.

மேலும், ஆப்கானிஸ்தானில் இப்படித் தரப்பட்ட நிதியுதவியில் சுமார் 15 வீதத்திற்குக் குறைவான நிதியே உரிய பயனாளிகளைச் சென்றடைந்தது என்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

இது தவிர, சமீபத்திய உதாரணம் ஒன்றின் படி, இந்தோனேசியாவில் அசே சமாதான முயற்சிகளுக்காகத் தரப்பட்ட நிதி உலக வங்கியில் வைப்பிலிடப்பட்டது. ஆனால் அங்கே சமாதானம் முறிக்கப்பட்டதையடுத்து இந்தோனேசிய அரசு உலகவங்கியிடம் அந்த நிதியை இடைநிறுத்துமாறு கேட்டுள்ளது.

அதாவது, சமாதானம் முறிக்கப்பட்டால் தரப்பட்ட நிதி பற்றிய முடிவை அரசாங்கமே ஒருதலைப்பட்டசமாக எடுக்கக்கூடிய நிலைமைகள் அங்கே இருந்தன.

இங்கேயும், ரோக்கியோ மாநாட்டு நிலவரங்களின் படி நிலைமைகள் அப்படித்தான் தெரிகின்றன. இது முதலாவது காரணம்.

இரண்டாவது காரணம் - தரப்படும் கடனை உரிய காலத்துள் உறிஞ்சவல்ல உரிய நிர்வாகக் கட்டமைப்புஎதுவும் இங்கே இல்லை என்பது.

இங்குள்ள அரச நிர்வாகக் கட்டமைப்பு எப்பொழுதும் கிடைத்த நிதியை உரிய வேகத்தில் உரியகாலத்துள் பயன்படுத்தத்தவறியதால் நிதியின் பெரும் பகுதி திரும்பிச் சென்ற அனுபவங்களே அதிகம்.

கிடைக்கும் புள்ளி விபரங்களின்படி தரப்படும் கடனில் 17 வீதத்துக்கும் 35 வீதத்துக்கும் இடைப்பட்ட அளவு நிதியே இதுவரை உறிஞ்சப்பட்டு வந்துள்ளது. இதுதான் சிறிலங்காவின் நிர்வாக இயந்திரத்தின் உச்ச உறிஞ்சுதிறன் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக இருந்த கலாநிதி நடீம் உய் ஹக் நாட்டைவிட்டுச் செல்லும் போது கூறியதை இங்கே சுட்டிக் காட்டலாம். "விசயம் நிதியுதவியல்ல சீர்திருத்தமே"

தவிர, மற்றொரு முக்கிய நடைமுறைப் பிரச்சினையும் உண்டு.

இப்பொழுதுள்ள அரச நிர்வாக இயந்திரம் அதிகம் இனப்பகையை பிரதிபலிப்பதாகக் காணப்படுகிறது. சிங்கள அதிகாரிகள் எப்பொழுதும் இனவிசுவாசத்தோடேயே நடந்துகொள்கிறார்கள். தமிழ் அதிகாரிகளோ இரண்டு எஜமானர்களுக்கிடையில் கிழிபடும் ஒரு நிலை. யாருக்கு விசுவாசமாக இருந்தால் பதவி உயர்வுகளைப் பாதுகாக்கலாம் என்ற பிரச்சினை. தவிர, சமாதானத்தின் நிச்சயமின்மையின் பாற்பட்ட பாதுகாப்புப்பற்றிய கவலைகளும் உண்டு. இவற்றுடன் எல்லா அரச அலுவலகங்களுக்கும் உரிய நோய்க் கூறான ஓர் அம்சம் றெட்ரேப் சிஸ்ரம். இதுவும் ஒரு மேலதிகத்தடையே.

இத்தகைய எல்லாக் காரணிகளும் சேர்ந்து தரப்படும் நிதிஉதவி உரியசனங்களைச் சென்றடைவதற்குத் தடையாகக் காணப்படுகின்றன.

இதை நிரூபிக்க, நிலவும் சமாதான காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை இங்கே கூறலாம்.

யுத்தநிறுத்தம் வந்து பாதைகள் திறக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது வாழைச் சேனையிலிருந்து மட்டக்களப்புக்கான புகையிரதப்பாதையும் திருத்தப்பட்டது. இப்பாதையைத் திருத்துவதற்கு குறிப்பிட்ட ஒரு தொகைப் பணம் ஒதுக்கப்பட்டது. ஆனால் அந்தப்பணம் மட்டக்களப்புப் புகையிரதப் பாதைக்கு செலவளிக்கப்படவில்லை. பதிலாக, சிங்களப்பகுதியொன்றில் பாவனைக் குதவாதது என்று கழித்து விடப்படும் ஒரு நிலையில் காணப்பட்ட தண்டவாளங்களைக் கழட்டி எடுத்து புதிதுபோல தோன்றும் படியாக அன்ரிக்குறேஸ் வர்ணம் பூசி மட்டக்களப்புக்கு கொண்டுவந்து பொருத்தி விட்டார்கள். அதேசமயம் ஒதுக்கப்பட்ட காசுக்கு ஒரு புதிய தண்டவாளத் தொகுதியை வாங்கி குறிப்பிட்ட அந்தச் சிங்களப் பிரதேசத்தில் கழட்டப்பட்ட தண்டவாளத்துக்குப் பதிலாக பூட்டியிருக்கிறார்கள்.

**நிலாந்தன்**

இப்படி மட்டக்களப்பில் பூட்டப்பட்ட பாவனைக்குதவாத தண்டவாளத்தில் புகையிரதம் ஓடிய முதல் நாளிலேயே தடம் புரண்டுவிட்டது. இதெல்லாம் நடந்தது சமாதான காலத்தில்

இந்நிலையில் தரப்படும் நிதியை சனங்களுக்கு விசுவாசமாகக் கையாளவல்ல, சனங்களுக்குப் பொறுப்புக்கூறவல்ல ஒரு நிர்வாகக் கட்டமைப்பு இல்லையென்றால் ஆப்கானில் நடந்ததுதான் இங்கேயும் நடக்கும்.

எனவே ரோக்கியோமாநாட்டின் பின்னரான சமாதான அரங்கில், ரோக்கியோ மாநாட்டின் வெற்றிகள் என்று அவர்கள் கருதும் எதையாவது பாதுகாக்க வேண்டும் என்று உதவி வழங்கும் நாடுகள் விரும்பினால் அவர்களுக்கு இப்பொழுது இரண்டு பிரதானதெரிவுகள் தான் உண்டு.

ஒன்று - கொடுக்கப்பட்ட கடன் அதற்குரிய நிபந்தனைகளுக்கேற்ப உரியசனங்களுக்குப் போய்ச்சேர்வதை உறுதிப்படுத்தும் ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பது.

மற்றது, புலிகளை தனிமைப்படுத்தா விதத்தில் முடிவுகளை எடுப்பது.

கடந்த 16 மாதகால சமாதான முயற்சிகளின் போது எந்தவொரு நாடும் இதுவரை புலிகளின் மீதான தடையை நீக்கவில்லை என்பது சமாதானத்துக்கான வலுச்சமநிலையை புலிகளுக்குப் பாதகமாகவே வைத்திருக்கிறது.

இப்படியொரு தடைகாரணமாகத் தான் வொஷிங்டன் மாநாட்டில் புலிகள் ஓரங் கட்டப்பட்டனர். அதன் தொடர்விளைவே இப்பொழுது நடந்து கொண்டிருப்பவை எல்லாமும்.

இப்பொழுதும் காலம் கடந்து போய்விடவில்லை. புலிகளின் மீதான தடையை அமெரிக்கா மீள்பரிசீலனை செய்யும் நாள் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. ஓராண்டுக்கு ஒருமுறை இப்படி தடை புதுப்பிக்கப்படுகிறது.

எனவே இதுவிசயத்தில் அமெரிக்கா எடுக்கப்போகும் சாதகமான முடிவு எதுவும் புலிகளை மேலும் சர்வதேச சமூகத்திற்கு பொறுப்புக் கூறவல்லவர்களாக மாற்றமுடியும்.

அந்தமுடிவு சமாதானத்தைப் பொறுத்தவரை ரோக்கியோ மாநாட்டை விடவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

அதாவது சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு எனப்படுவது ரணிலைப்பாதுகாப்பதற்காக மட்டுமல்ல சமாதானத்தையும் பாதுகாப்பதற்காகத்தான் என்று நிரூப்பிக்கக்கிடைத்திருக்கும் ஒரு முக்கிய சந்தர்ப்பம் அது.


அதோடு, முக்கியமாக, வொஷிங்டன் ரோக்கியோ மாநாடுகளைப் போல புலிகள் கலந்து கொள்ளாத சர்வதேச சந்திப்புக்கள் எதுவும் இனியும் நிகழ்வதைத் தவிர்ப்பதற்குரிய முன்னெச்சரிக்கை மிக்க முடிவுகளை எடுப்பதற்குக் கிடைத்திருக்கும் மிக அரிதான ஒருசந்தர்ப்பமும் அது.

# ஒன்றே குறி

ரணில் புலிகளுக்கு அனுப்பிய இரண்டாவது கடிதத்திற்கும் இடைக்கால நிர்வாகம் குறித்து ரோக்கியோவில் ரணில் பிரஸ்தாபித்ததற்கும் அடிப்படையில் எந்த மாறுதலும் இல்லை. சாரம் அரசியல் யாப்பை விலத்தி சிந்திக்க முடியாது; அது சட்டத் திற்கு முரணானது என்பதாகவே இருந்தது.

புலிகள் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை முன்வைத்து ரோக்கியோ மாநாட் டையும் பேச்சையும் இடைநிறுத்தியிருந்த சூழலில் ரணில் ரோக்கியோவில் நெகிழாத நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருப்பது நெகிழ்வு குறித்து ரணில் தன்மீது அழுத்தம் பிரயோகிக்கப்படவில்லை என்பதுடன் சர்வதேச நிலைமையில் தனக்கு ஸ்திரமான நிலை இருப்பதாக கிடைத்த நிதி உறுதி செய்திருக்கிறது என்று நம்பியதால் நிகழ்ந்திருக்க வாய்ப்பிருக்கிறது.

சர்வதேச சமூகம் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை புறந்தள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளவே



செய்கின்றன. ரணிலும் கொள்கையளவில் தான் உடன்படுவதாகவும் ஆனால் அரசியல் யாப்பு அதற்குத் தடையாக இருக்கிறது என்றும் கனவான் அரசியல் தனத்தோடு சர்வதேச சமூகத்தின் முன்நிலையில் வியாக்கியானங்களை முன்வைக்கிறார். சர்வதேச சமூகத்திற்கு இந்த வியாக்கியானத்தில் ஒரு மருட்சியிருக்கிறது. அதுவே ரணிலின் பலமும்.

தமிழ் மக்களை அனைத்தையும் இழந்து போக வைத்த அரச பயங்கரவாதத்திற்கு அல்லது யுத்தத்திற்கு இந்த அரசியல் யாப்பில்தான் ஜனநாயக அர்த்தம் கற்பிக்கப்பட்டது. இன்று சமாதானத்தில் தமிழ் மக்கள் எதையும் பெற்றுவிடாமல் தடுப்பதற்கும் அரசியல் யாப்பில்தான் அர்த்தம் கற்பிக்கப்படுகிறது.

ஆயின்; யுத்தத்தின் போதும் சமாதானத்தின் போதும் அரசியல் யாப்பின் பிரயோக நிலை ஒன்றுதான். யுத்தம் வெற்றியை நோக்காகக் கொண்டது. சமாதானம் சமரசத்தை நோக்காகக் கொண்டது ஆயின் இரண்டு நிலைகளுக்குமான யாப்பின் பிரயோகமும் வெவ்வேறானதாக இருந்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லாதபோது அவற்றின் நோக்கங்களும் ஒன்றுதான். யுத்தத்திற்கான பிரயோகம்தான் சமாதானத்திற்கும் இருக்கிறதென்றால் யுத்தத்திற்கான நோக்கம்தான் சமாதானகாலத் திலும் இருக்கிறதென்று அர்த்தம்.

சர்வதேச சமூகம் இத்தீவில் சமாதானத்தையே அவாவுகிறதென்றால் இது குறித்து ஒரு ஆழமான புரிதல் அவசியம்.

பேச்சின் வளர்ச்சிக்கு இப்போது தடையாக இருப்பது அரசியல் யாப்பு அல்ல. சிங்களத் தலைவர்களின் சமாதானத்திற்கான விசுவாசமும் சிங்கள மக்களின் மனப்பாங்கும்தான். இது சர்வதேச சமுகத்தால் விளங்காதவிடத்தும் விளங்கியதற்கான செயல் நிகழாத விடத்தும் சமாதானத்திற் கான தடைகளே வலுப்படுத்தப் படும். இது குறித்த புரிதலுக்காக, இடைக்கால நிர்வாகத்திற்கு இடம் கொடாத இலங்கை அரசியல் யாப்பின் புனிதம் பற்றியும் மீறாத சிங்கள அரசியல் தலைவர்களின் ஜனநாயகக் கற்புப் பற்றியும் பார்ப்போம்.

இது, 'சிங்கள மொழி நாடு, என்ற கனவை மெய்ப்பிப்பதற்காக 1956ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது அப்போதைய அரசியல் அமைப்பின் 29ஆவது சரத்து மீறப்பட்டது. சட்டத்தை மீறியவர்கள் குற்றவாளி என்றிருக்கும் போது சட்டத்தை மீறி பிறப்பிக்கப்பட்ட சட்டம் தமிழர்கள் மீது வன்மையாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அரசியல் யாப்பை மீறுவதற்கு ஊடகங்கள் விடாது; எதிர்க்கட்சிகள் எதிர்க்கும் நீதி மன்றம் அனுமதிக்காது என்றால் அப்போது இவையெல்லாம் எப்படி சிங்களச்சட்டத்தை சாத்தியப்படுத்தின.

வேடிக்கை என்ன வென்றால் அரசியல் யாப்பை மீறிய சட்டத்திற்கு எதிரான கோடீஸ் வரனின் வழக்கில் நீதிமன்றம் யாப்பின் மீறலுக்கு ஒத்துழைத்தது. அரசியல் அமைப்பை மீறியமை இலங்கை நீதித் துறையில் நிரபராதம் ஆயிற்று. இங்கு சட்ட ஒழுக்கம் சட்ட மீறல் என்பதெல்லாம் யாரால் யார் மீது என்பதில் தான் தங்கியிருக்கிறதேயன்றி அதற்கென்றொரு புனிதம் இருந்ததில்லை.

ஏன், 1949ஆம் ஆண்டு மலையக மக்களின் வாக்குரிமைப் பறிப்பு அரசியல் யாப்பை மீறி கொண்டு வரப்பட்டதுதான். தமிழர்களின் பாராளுமன்றப்பிரதிநிதித்துவம் குறைக்கப்படவேண்டும் என்றால் அரசியல் யாப்பின் மீறலும் இங்கு ஜனநாயக ஒழுக்கம்தான். இதைக் கொண்டு வருவதற்காக ஊடகத் துறைக்கோ எதிர்க்கட்சிக்கோ நீதிமன்றத்திற்கோ ஜனநாயக விழுமியங்களுக்கோ ஏன் ஐக்கிய தேசியக்கட்சி அஞ்சவில்லை. மீறியதற்கான கொந்தழிப்பு ஏன் நிகழவில்லை.

இலங்கை சுதந்திரம் பெற்ற ஒரு வருடத்தில் அரசியல் யாப்பை மீறும் கலாச்சாரத்தை தொடக்கி வைத்தவர்கள் இப்போது ஆட்சியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சிதான்.

**கு.கவியழகன்**

13ஆவது திருத்தச் சட்டத்தின்படி மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை இப்பொழுது மத்திய அரசாங்கம் பறித்திருக்கிறது; அல்லது சுவீகரித்திருக்கிறது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டம், தென்பிராந்திய அபிவிருத்தி அதிகார சபைச்சட்டம் என்பவை அரசியல் யாப்பின் 13ஆவது திருத் தத்தை மீறிய சட்டங்களுக்கான சில உதாரணங்களாகும்.

அரசியல் யாப்பில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஒருவர் ஆயுதம் வைத்திருப்பதைத் தெரிந்தும் அதனை சொல்லாமல் இருப்பது தண்ட னைக்குரிய குற்றமாகும். ஆயின, புலிகளுடன் கைகுலுக்கிக் கொண்ட புலிகளுடன் கூடிக்குலவுகின்ற இலங்கையின் அரசியல் தலைவர்களும் அதிகாரி களும்குற்றவாளிகளே. ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் கூடக் குற்றவாளிகளே. இதுவும் சட்ட மீறலே இதுவும் யாப்புமீறலே.

சரி, இன்னொரு விந்தையான விடயம் இருக்கிறது. இலங்கை அரசியல் யாப்பின்படி இதுவொரு சனாதிபதி ஆட்சி முறைமை நாடாகும். ஆனால் இப்பொழுது நடைமுறைப் படுத்தப்படுவதோ. வெஸ்ட் மினிஸ்ரர் ஆட்சிமுறைமை. அப்படிப்பார்த்




தால் அரசியல் யாப்பின் படியே அரசியல் நடக்கவில்லையே.

சனாதிபதி லொத்தர் சபையைப் பறித்தார். அப்படியானால் அவரால் எல்லா அமைச்சுக்களையும் பறிக்க இயலும். ஏன் பறிக்கவில்லை? பறித்த லொத்தர் சபை சனாதிபதியிடும் கட்டளைகளை நிறைவேற்ற வில்லை. ஏன் நிறைவேற்ற வில்லை? அரசியல் யாப்பின் படி எப்படி அரசியல் நடக்கிறதெனலாம்.

இப்பொழுது புரிந்துணர்வு உடன்பாடு உட்பட சர்வதேச நாடுகளுடன் நிகழும் ஒப்பந்தம் அனைத்திலும் அரசின் தலைவரோ அரசாங்கத்தின் தலைவரோ பாராளுமன்றத்தின் தலைவரோ (அவையனைத்தும் சனாதிபதி) கையெழுத்திடவில்லை. பிரதம மந்திரியே கையெழுத்திடுகிறார் அரசியல் நடக்கவில்லையா? யாப்பின்படி ஆட்சிமுறைமையே மாறிவிட்டதே.

இவையெல்லாவற்றையும் விட்டு



விட்டாலும் கூட சூடான உரப்பான உதாரணம் இருக்கிறது. இந்தப் புரிந்துணர்வு உடன்பாடே அரசியல் யாப்பிற்கு வெளியில் தான் நிகழ்ந்திருக்கிறது. வெற்று மடியோடு ஆசனம் ஏறிய ரணிலுக்கு சட்டிகிலுக்குவதற்காக புலிகளுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் தேவையாக இருந்தது. யுத்தத்தின் தொடர் தோல்வியும் பொருளாதாரப் பின்னடைவும் சிங்கள மனப்பாங்கில் யுத்தநிறுத்தத்தை அவாவியது. சமாதானப்பாடலைப் பாடிவராத இலங்கைத் தெருப்பாடகனுக்கு பாத்திரத்தில் எதையிடவும் சர்வதேச சமுகம் தயாராக இருக்கவில்லை. இந்தப் பின்னணியில் புரிந்துணர்வு உடன்பாட்டை சாத்தியம் ஆக்கினார் ரணில் .

மொத்தமாகப் பார்த்தால் அரசியல் யாப்பை மீறுவது இலங்கை யில் புதினமல்ல. அரசியல் யாப்பின்படி இலங்கையில் அரசியல் நடப்பது மரபுமல்ல. உலகிலும் சமாதானத் தீர்வுக்காக இடைக் கால ஏற்பாடுகள் அரசியல் யாப்பிற்கு வெளியில் நிகழ்ந்த உதாரணங்கள் கொசோவர் சூடான் உட்பட பல நாடுகளில் உண்டு.

இப்படியிருக்க இப்பொழுது அரைநூற் றாண்டு கால இன முரண்பாட்டுக்கு கால் நூற்றாண்டு கால யுத்தத்திற்கு தீர்வு காணமுற்படும் போது புலிகள் ஒரு ஜன நாயக நீரோடத்தில் கலக்கும் பொருட்டும் யுத்தத்தில் சிதிலமாகிப்போன தமிழ் மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்பி நம்பிக்கை மனோபாவத்தை வளர்க்கும் பொருட்டும் இடைக்கால நிர்வாகம் அவசியப்பட்ட போது அரசியல் யாப்பு குறுக்கறுத்து நிப்பாட்டப்பட்டிருக்கிறது.

இங்கு அரசியல் யாப்பு ஜனநாயக அர்த்தத்தில் குறுக்காக நிற்கவில்லை. இராஜதந்திர அர்த்தத்தில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. இது சமாதான கால ஆயுதப் பிரயோகம்.

வீஷ்மரின் முன்னால் சிகண்டி நிறுத்தப்படுகின்றாள். என்றால் வீஷ்மரை வீழ்த்துவதற்கான யுத்தத்திற்கு வழி சமைத்து தயாராக அர்ச்சுனன் ஒழிந்திருக்கிறான் என்றே அர்த்தம்.

அரசியல் யாப்பு தமிழ் மக்களின் மீது நிகழ்த்துகின்ற யுத்தம் நிறுத்தப்படாதபோது துப்பாக்கிகளைத் தொடர்ந்து மௌனிக்க வைப்பது முடியாது போகும்.

இத்தீவில் சமாதானத்தை விரும்பும் சர்வதேச சக்திகள் புரிந்து கொள்ள வேண்டியது இதுதான்:- சமாதானத்திற்காக புலிகள் அழுத்தம் பெறும் போது சிங்கள மனோபாவம் யுத்தத்தில் அடைய முடியாதவற்றிக்காக சமாதான காலத்தை பிரயோகிக்கவே தூண்டும். அழுத்தத்தை அரசு பெறும்போது யுத்தப் பிரயோகமும் சமரசத்தை அவர்களுக்கு நிர்ப்பந்திக்கும்.

# கதிர்காமர் என்ன மார்க் அன்ரனியா?



கடந்த வாரம் கொழும்பிலிருந்து வெளிவருகின்ற ஒரு தமிழ் பத்திரிகையொன்றிற்கு முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் தற்போது சனாதிபதி சந்திரிகாவின் நம்பிக்கைக்குரிய ஆலோசகராகவும் இருக்கும் லக்ஸ்மன் கதிர்காமர் ஒரு செவ்வியினை அளித்திருந்தார்.

இந்த செவ்வியில் தனது வழமையான பாணியில் பல கேள்விகளுக்கு புலி எதிர்ப்புக் கருத்துகளோடு பதிலளித்து தனது குள்ளத்தனத்தைக் காட்டியிருக்கிறார்.

அதாவது லக்ஸ்மன் கதிர்காமர் எதிர்க்கட்சி உறுப்பினராக அரசியல் சஞ்சாரம் செய்தாலும் கூட ஒரு முக்கிய காலகட்டத்தில் கதிர்காமர் ஒரு தமிழர் என்பதைக்கொண்டே தமிழின விடுதலைக்கு எதிரான சர்வதேச கருத்தியியல் வியுகத்திற்கு ஒரு முக்கிய தளகர்த்தாவாக சந்திரிகாவால் பயன்படுத்தப்பட்டவர்.

ஆனால் லக்ஸ்மன் கதிர்காமரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் அளித்த பதிலில் ஏனோ ஜூலியஸ் சீசரும் மார்க் அன்ரனியையும் என் நினைவிற்கு வருகின்றனர்.

நாம் எனி லக்ஸ்மன் கதிர்காமரிடம் என்ன கேள்வி கேட்கப்பட்டது எனப்பார்ப்போம்.

கேள்வி இதுதான்.

**விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திக்க சந்தர்ப்பம் ஒன்று கிட்டினால் சந்திப்பீர்களா?**

இந்தக் கேள்வியினை செவ்விகண்டவர். கதிர்காமர் சந்திரிகாவின் கடந்த கால அரசியல் நயவஞ்சக பாசறையின் முக்கிய தளபதிகளில் ஒருவர் என்பதாலோ அல்லது கதிர்காமர் தமிழர் எனச் சொல்லிக் கொண்டே தமிழினத்திற்கு துரோகம் இழைத்தவர் என்பதாலேயோ இத்தகைய ஒரு கேள்விக்கு முகம்கொடுக்க முடியுமா? என்றரீதியில் கேட்டிருக்கக்கூடும்.

ஆனால் கதிர்காமர் தன்னுடைய பேச்சு வன்மை யால் தான் ஒரு மார்க்அன்ரனி என்பது போல பதிலளித்து தனக்குள் ஒரு மேதாவித் தனத்தைக் காட்டியிருக்கிறேன் என நினைத்துக் கொண்டிருக்கிறார் போலத் தெரிகிறது.

கதிர்காமரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் அளித்த பதில் இதுதான்.

**ஆம் விருப்பம் தான் ஆனால் பிரபாகரன் என்னுடன் பேச விரும்பமாட்டார். ஏனென்றால் பிரபாகரன் ஒரு தியாக சிந்தனையுடனான மிகக் கட்டுப்பாடு கொண்டவர். அவர் பண ஆசைப் பிடித்தவரல்ல. இப்படி வேறு ஆசைகளும் அவருக்குக் கிடையாது. இப்போது பாருங்கள் மில்லியன் கணக்கிலான உதவிகள் கிடைக்கும் உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தைக் கூட அவர் பெரிதாக கவனத்தில் எடுக்கவில்லை. இங்கு பெறப்படும் உதவிகள் மக்களின் புனர்வாழ்வுக்கே என்றாலும் பிரபாகரன் அதனைக் கையாளும் விதம் மிக நேர்த்தியாகத் தான் இருக்கிறது.**

**ஊழல், சீரகேடுகள் நிறைந்து போயுள்ள தற்போதைய காலத்தில்இந்த மனிதன் (பிரபாகரன்) ஒரு சிறந்தவராகவே காணப்படுகிறார். அதனை நாம் மதிக்க வேண்டும். எனவே இப்படியான ஒருவர் இப்போது உடனடியாக மக்களுக்கு செய்ய வேண்டிய விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். தமது இயக்கத்திற்கு முன்னுரிமை கொடுக்காமல் மக்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். மக்களை மீளக்கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும.**

என கதிர்காமர் பதிலளித்துள்ளார்.

**சிறி.இந்திரகுமார்**

**கதிர்காமர் எப்போது, தான் மட்டும் மேதாவி என்ற நிலையிலிருந்து விடுபடப் போகிறார். தமிழர்கள் ஒன்றும் முட்டாள்கள் இல்லை என்பதை எப்போது உணர்ந்து கொள்ளபோகிறார்.**

இது எப்படியிருக்கிறதென்றால் எமக்கு ஜூலியஸ் சீசரையும் மார்க் அன்ரனியையும் நினைவிற்கு கொண்டு வரச் செய்யவில்லையா.

ஐட்ஸ் (Ides of march) சம்பவத்தின் போது கொல்லப்பட்ட ஜூலியஸ் சீசரிற்காக ஜூலியஸ் சீசரின் நம்பிக்கைக்குரிய நண்பனான மார்க் அன்ரனி ஒரு இரங்கல் உரையாற்றுகிறான். எப்படியென்றால் ஜூலியஸ் சீசர் ஒரு பேராசைக்காரன்தான் என்பது போலவும் அவன் எல்லாவற்றிற்கும் ஆசைப்பட்டவன் போலவும் கூறி ,ஆனால் அவையெல்லாம் மக்களிற்கே வழங்கினான் எனவும் அவன் மக்களிற்கே கொடுத்தான் என்பது போலவும் மிகத்தந்திரமாகவும் இராச தந்திரமாகவும் பேசினான்.

அதன் விளைவு ஜூலியஸ் சீசரைத் கொன்றவர்களிற்கு எதிராக பெரும் கலவரமும் மக்களின் எதிர்ப்பும் கிளம்பியது.

இவ்வாறு தலைவர் பிரபாகரனைப் போற்றுவது போல தூற்றிவிட்டதாக நினைத்து விட்டார். மார்க் அன்ரனி கைக்கொண்ட உத்தியை தானும் கையாண்டதாக பெருமை கொள்கிறார்.

கதிர்காமர் இந்த ஜூலியஸ் சீசர் நாடகத்தைத்தான் அந்த செவ்வியின்போது நடித்து இருக்கிறார். கதிர்காமர் ஒரு நல்ல நடிகன் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அவர் ஏற்ற பாத்திரம் தான் அவருக்கு பொருத்தமாக இல்லை.

மார்க் அன்ரனியைப் போல கதிர்காமர் தலைவர் பிரபாகரனிற்கு எதிராக எவரையும் அவரால் கிளர்ந்தெழ வைக்கமுடியாது ஏனென்றால் கதிர்காமர் மார்க் அன்ரனி அல்லவே.பதிலாக தலைவர் பிரபாகரனும் புருட்டசின் கூட்டமல்லவே.

ஆனால் வேண்டு மென்றால் தலைவர் பிரபாகரன் ஜூலியஸ் சீசராக இருக்கலாம். அவர் எல்லாவகையிலும் தமிழ் மக்களை ஒரு காட்சிப்பொருளாகக்காட்டி தென்னிலங்கைக்குள் சுருட்டிக் கொள்ள நினைக்கும் நிதியையும் நிதியின் பெயரால் விலைபேச முனையும் தமிழரின் உரிமையையும் அல்லவா தடுக்க முயல்கிறார்.

இது என்ன கதிர்காமரிற்கு தெரியாத சங்கதியா? அவருடைய வாதத்திறமை அவரது சட்டத் தொழிலிற்கும் சந்திரிகாவின் விசுவாசத்திற்கும் மட்டுமே பயன்படலாம்.

மாறாக தமிழரின் சிந்தனைக்குள் அது செயலாகாது காலாவாதியான அதிர்ஷ்ட இலாபச்சிட்டையைப் போல, அவரது அரசியல் வாழ்வின் கனவைப் போல இது இருக்கும்.


கதிர்காமர் எப்போது. தான் மட்டும் மேதாவி என்ற நிலையிலிருந்து விடுபடப்போகிறார். தமிழர்கள் ஒன்றும் முட்டாள்கள் இல்லை என்பதை எப்போது உணர்ந்து கொள்ளபோகிறார்.

ஐ.நா. செயலர் கொபி அணானுக்கு அடுத்ததாக ஐ.நாவின் பொதுச்செயலராக வரகனவு கண்டவருக்கு அது முடியாது என்றாகிவிட்டதால் இப்போது மார்க் அன்ரனி போல இருக்கலாம் என நினைக்கிறாரோ.

ஐயா கதிர்காமரே நீர் மார்க் அன்ரனியாக முடியாது ஆனால் தலைவர் பிரபாகரன் ஜூலியஸ் சீசராகலாம்.

---

# மார்ஸ் எக்ஸ்பிரஸ் - பயணம்



செவ்வாய்க் கோளுக்கான விண்கலப்பயணங்களில் 3வது சக்தி களமிறங்கியுள்ளது. அந்த சக்தி ஐரோப்பிய நாடுகளின் ஐரோப்பிய விண்ணாய்வு மையம் (ESA)


மார்ஸ் எக்ஸ்பிரஸ் என்ற விண்கல செலுத்துகை மூலம் ஈசா பிறேகோள் விண்கல பயணத்தில் களமிறங்கியுள்ளது. ஏற்கனவே இதில் அமெரிக்காவும், ரஷ்யாவும் ஈடுபட்டன.

மார்ஸ் எக்ஸ்பிரஸ் செவ்வாய்க் கோளை வலம்வரும் கலம். அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பீகிள்-2 கலம் செவ்வாயில் தரையிறங்கும்.

ரஷ்யாவின் சோயிஸ் றொக்கெட் மூலம் மார்ஸ் எக்ஸ்பிரஸ் செலுத்தப்பட்டது. கடந்த 2ம் திகதி (யூன்2) புறப்பட்ட 1மணி நேரம் 32 நிமிடத்தில் அதுபூமியில் கற்றுப் பாதைகளிலிருந்து செவ்வாய்க்கான பயணப் பாதைக்கு திரும்பியது.

படம்-4 பீகிள்-2
அகலம்-640MM
உயரம்-230MM
நிறை 68.8 கி.கி
ஸ்ரியோ கமரா/ கல்துழைப்பான்
நிறமாலை மானி /நுணுக்குக் காட்டி
எக்ஸ்கதிர்/
றோலோகை/
சூரியமின்கலம்

பீகிள்-2ன் றோலோகை செவ்வாய் மண்ணை எடுத்து மிக அண்மையாக நுணுக்கு காட்டியில் பார்க்கும் கல் துழைப்பான் செவ்வாய் பாறையை குடைந்து மாதிரியை எடுத்து ஆராயும் மாதிரியில் செவ்வாயில் உயிரினம் உள்ளதா என அது ஆராயும் இது 6 மாதங்களாக இயங்கும்.




படம் 2
மார்ஸ் எக்ஸ்பிரஸ் செலுத்துவா






ஆராயத் தொடங்கும்.

எக்ஸ்பிரஸ் செவ்வாயை சுற்ற ஆரம்பிக்குமுன் பீகிள்-2 ஐ தரையிறக்க சுழற்றுகின்றது.




கனமான ரஷ்யாவின் சோயுஸ். உயரம் 43.5 ஆக எக்ஸ்பிரஸ்
றொக்கட்- கட்டடம்-2
றொக்கட்-கட்டடம்-1
மார்க்ஸ் எக்ஸ்பிரஸ் வரைபடம்
பூமி- சூரியன்-செவ்வாய்.
மார்க்ஸ் எக்ஸ்பிரஸ் செவ்வாயை




படம்-1
பீகிள்-2 செவ்வாயின் வளிமண்டலத்துடன் உராய்ந்து எரிந்து தரையிறங்கும்- புனைவரைபடம்.
படம்-3
மார்ஸ் எக்ஸ்பிரஸ் வரைபடம்.

த.அருவி

# நறுக்கென...

## பலமற்ற பிரதமரின் வலுவற்ற விளக்கம்



செயற்படுத்த முடியாத விடயங்கள். வலியுறுத்தப் படுகின்றது; அரசு சட்டத்துக்கு அமையவே நடக்கவேண்டியுள்ளது. என்று சமாதானப் பேச்சுக்களின் இன்றைய நிலை குறித்து சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விபரிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலை தொடர்பாக விளக்குகையில்....அரசு சட்டத்திற்கு அமைய நடக்க வேண்டியுள்ளதை விடுதலைப்புலிகள் புரிந்து கொள்ளவேண்டும் என்று ரணில் கூறியுள்ளமையானது, அவரின் பொறிக்குள் சிக்கிய நிலையை , இயலாத்தன்மையை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

சிறிலங்காவின் அரசியல் சட்டங்கள் பேரினவாத சிந்தனையாளர்களால், பேரினவாதிகளின் நலன்களுக்கான, பேரினவாதக் கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவைகளே...

சும்மா பெயருக்கு சிறிலங்கா சோஷலிஸக் குடியரசின் அரசியல் யாப்பு என்று கூறப்பட்டாலும் அது உண்மையில் பௌத்தசிங்கள சோஷலிஸக் குடியரசு ஒன்றின் அரசியல் யாப்பேயாகும்.

அது சிறிலங்காவின் சிறுபான்மையினங்கள் அனைத்தினதும் நலன்களை எந்தவகையிலும் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்ட ஒன்றல்ல.

அதன் எல்லைக்குள் நின்று கொண்டோ, அதன் சட்டவிதிமுறைத்தளத்தில் நின்று கொண்டோ..... சமாதானம் பற்றிப்பேசவோ தீர்வுக்கான நகர்வுகளை மேற்கொள்ளவோ முடியாது என்பதை பிரதமர் ரணில் புரிந்து கொள்ள வேண்டும்.


ஒரு நாட்டின் அமைதி நிலைக்கும், சமாதான நகர்வுகளுக்கும் தடையாக அந்த நாட்டின் அரசியல் சட்ட விதிகள் இருக்குமாயில் அதற்கு அப்பால் நின்று நாட்டின் நலன் கருதி தீர்வுகளை மேற்கொள்ளும் வலிமை அரசுக்கு இருக்க வேண்டும்.

ஆனால் ரணிலால் அது முடியாது. அந்த வல்லமை அவருக்கு இல்லை. அதுவே அவரின் இந்த விளக்கத்திற்கு காரணமாகியுள்ளது.

தீர்வுகளுக்கு ஒத்துழைக்காத- பிரதமரை பதவி கவிழ்கக் காத்திருக்கும் சனாதிபதி அரசியல் யாப்பின் அதிகாரங்களை கைக்குள் வைத்திருக்கும் மட்டும்-

அரசியல் சட்ட விதிகளுக்குள் நின்றபடி பிரதமரால் சமாதான முன்னெடுப்புகளில் தீர்க்கமான முடிவுகள் எதனையும் எடுக்க முடியாது என்பதையே ரணிலின் அறிவிப்பு தெளிவுபடுத்துகிறது.

## 'அறிவிப்பு'களுக்கு புகழ்பெற்ற அமைச்சர் பேராசிரியர் பீரிஸ்



நாடாளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்த நிலையியல் சட்டத்தில் விரைவில்திருத்தம் கொண்டு வரப்போவதாக அமைச்சரவைப்பேச்சாளரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் புதிய அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு சட்டத்திருத்தம், அரசியல்யாப்பு மற்றும், ஆகியவை குறித்து அமைச்சர் பீரிஸ் எத்தனையோ 'விரைவில் வருகிறது' பாணியிலான அறிவிப்புகளை வெளியிட்டு விட்டார். எல்லாமே அறிவிப்புகளுடன் அடங்கிவிடுவது தான் பரிதாபகரமான விடயம்.

ஆனாலும் அவரது அறிவிப்புகள் சில உண்மைகளையும் வெளிப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

சந்திரிகா ஆட்சிக்காலத்தில் 'அதிகாரப்பரவலாக்கல், தீர்வுப்பொதி என்று கூறிக்கொண்டு அலைந்தார். அப்போது அதிகாரம் ஓரிடத்தில் குவிந்துள்ளது, அது பரவலானால்தான் தீர்வு ஏற்படும் என்ற கருத்தியல் உண்மை வெளிப்பட்டது. அவ்வளவுதான் நடைமுறையில் எதுவுமே சாத்தியமாகவில்லை.

சமாதானம், அரசியல், சமஷ்டி -இடைக்கால நிர்வாகம் நிர்வாகக் கட்டமைப்பு என்று என்னென்னவோ பற்றி அவ்வப்போது அறிக்கைவிடுவார். அத்துடன் அந்த 'விரைவில் வெளிவருகிறது' என்ற அறிக்கை கிடப்பில் போய்விடும்.

இப்போது நாடாளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்த சட்டத்திருத்தம் வரப்போகிறது என்றுள்ளார்.

இதன் மூலம் சிறிலங்காவில் நாடாளுமன்ற ஜனநாயகம் என்பது பலவீனமான நிலையில் உள்ளது என்ற உண்மையை அமைச்சர் வெளிப்படுத்தினாலும் அதற்கான சட்டத்திருத்தத்தை அமைச்சரால் கொண்டுவரமுடியுமா என்பது சந்தேகமே.....

நாட்டின் மிக முக்கியமான, அவசியம் தேவைப்படுகின்ற சமாதான முயற்சிகளுக்கு இடையூறாக உள்ள சட்ட மூலங்களில் திருத்தம் கொண்டுவந்து சமாதானத்தீர்வுக்கான வலுவானதளத்தை அமைக்க முடியாமல் அல்லாடும் அமைச்சரால் ஜனநாயகத்தை வலுப்படுத்த முடியுமா?

ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவமே சமாதான- சகவாழ்வு என்பது தான் அதற்கான சட்ட அடிப்படைகளில் மாற்றம் கொண்டுவரத்தயங்கும் 'அரசின்' அமைச்சரின் 'விரைவில் வருகிறது' என்ற பாணியிலான அறிவிப்புகள் ஒரு மூன்றாந்தர அரசியல்வாதியின் வாக்குறுதிகள் மட்டுமே... என்பதில் சந்தேகமே இல்லை.

## 'வெளி'யுறவும் உள் உறவுகளும்



'இன்னொரு யுத்தத்தை இலங்கை மக்கள் விரும்பவில்லை. அவர்கள் யுத்தத்தின் கொடுமைகளை நன்கு அறிந்து வைத்துள்ளனர். அவர்கள் சமாதானத்தைப் பேணுவதில் தீவிரமாக உள்ளார்கள்'- இவ்வாறு சிறிலங்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினரும், லண்டன் சர்வதேச அபிவிருத்தி இராஜாங்கச் செயலாளருமான ஸெலீகீபலை சந்தித்துப் பேசிய போது கூறியுள்ளார்.

டிரோன் மக்களின் விருப்பத்தையும், சமாதானம் மீதான அவர்களின் தீவிரத்தையும் கூறியுள்ளமை அதாவது- வெளிப்படுத்தியுள்ளமை பாராட்டத்தக்கது தான். அரசின் விருப்பமும், சமாதானம் மீதான சிறிலங்காவின் ஏனைய எதிர்க்கட்சிகள், அமைப்புக்கள் பேரினவாதக் கருத்தியலாளர்கள், இனவிரோத பௌத்த துறவிகள் போன்றோரின்- ஆர்வமும் எந்த அளவில் உள்ளது என்பதையும் டிரோன் தெரிவித்திருந்தால் அவரின் நேர்மையை மேலும் அவர் நிரூபித்திருக்கமுடியும்.


இராணுவத்தை வலுப்படுத்தவும், முப்படைகளுக்கான பயிற்சி நெறிகளை, சமாதானம் பேசும், அல்லது சமாதானத்தை வலியுறுத்தும் நாடுகளின் அனுசரணையுடன் தீவிரப்படுத்தவும் போராயுதங்களை வாங்கிக் குவிக்கவும் காட்டும் தீவிரத்தில் ஒரு சிறிதளவேனும் சமாதானத்தை மேம்படுத்த, அரசியல் தீர்வொன்றிற்கான அடிப்படை நகர்வுகளையே முன்னெடுக்க ஆர்வம் காட்டுகின்றதா?

இதற்கு வெறுமனே வார்த்தை ஜலங்களாலான உறுதி மொழிகளை மட்டும் அரசு கூறி அதனையே பரபரப்பாகப் பிரச்சாரமும் செய்து வருவதைப் பார்க்கையில், எந்தத் தீர்வையும் முன்வைக்கும். அதனை செயல்ரீதியில் அமுல்படுத்தும் விசுவாசமான ஆர்வம் அரசுக்கு இல்லை என்பது அண்மைக்கால அதன் செயற்பாடுகள் மூலம் தெளிவாகியுள்ளது.

சமாதானமும் தேவை, இனவாதிகளையும் திருப்பதிப்படுத்த வேண்டும் என்ற அரசின் இரட்டைநிலை, அமைதிக்கு உத்தரவாதமளிப்பதாக இல்லை...

பாலுக்கு காவலாகவும் பூனைகளுக்கு தோழனாகவும் இருப்பதென்பது சாத்தியமற்ற விடயம் என்பதை மான்புமிகு சிறிலங்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் புரிந்து கொள்வது அவசியமாகும்.

**செங்குட்டுவன்**



## மதுவடி மயிலர்

*செய்தி :- இலங்கைக் கடலில் மீன்பிடிக்க இந்திய மீனவருக்கு அனுமதி வழங்க ஒப்பந்தம் செப்டம்பரில் கைச்சாத்து*

மயிலர் :- எங்கட கடலிலை எங்கட மீனவர் மீன்பிடிக்க தடை, நெருக்குவாரம், அச்சுறுத்தல் ஆனால் அந்நியருக்கு அனுமதி உரிமைக்குத்தடை, ஆக்கிரமிப்புக்கு அங்கீகாரம்...பிச்சைஎடுக்கவே கஷ்டப் படுகுதாம் பெருமாள் அதை பிடிங்கித்தின்ன அதிகாரம் காட்டுதாம் அனுமார்....

*செய்தி :- படையினருக்கு அதிக அதிகாரங்கள் குற்றங்களை பெருக்கவே உதவியுள்ளது...தடுப்பதற்கு அமைச்சரவையில் விசேட திட்டம்....*

மயிலர் :- இது வெள்ளம் தலைக்குமேலை போய் மூச்சுத்திணறுற நேரம் அணை கட்ட மண்வெட்டி வேண்ட திட்டம் போட்ட மாதிரித்தான் பாருங்கோ... படையினரை பாதாள உலகக்கும்பலுகளாக்க பயிற்சி கொடுத்து விட்டு பதைபதைக்கிறதிலை என்னபயன்? வினையை விதைச்சவை அறுக்கத்தானே வேணும்....

*செய்தி :- நிமலராஜன் கொலைவழக்குத் தொடர்பாக நெப்போலியனுக்கு பிடியாணை.*

மயிலர்:- அந்த ஒறிஜினல் நெப்போலியன்றை முடிவு கென்ஹெலினா தீவிலை நடந்தது....இந்த டூப்ளிக்கெற் நெப்போலியன்றை கூத்துக்களின் ஆரம்பம் நெடுந்தீவிலை தான் பாருங்கோ....உந்த பிடியாணை மிரட்டலெல்லாம் இந்த நெப்போலியன்றை சரிவராது பாருங்கோ... துணைப் படைக்காறரை, பொலிஸ்படை பிடிக்குமே...! இவரைப் பிடிக்கவும் இவருக்கான தீர்ப்பை வழங்கவும் ஒரு படை இருக்கவே செய்யுது...அது சரியான தருணத்திலை சரியானதீர்ப்பை வழங்கு மெண்டெல்லே சனங்கள் முணுமுணுக்கினம்....

*செய்தி :- எனது காணியில் படையினர் திடீரென முகாமிடுகின்றனர்; கண்காணிப்பு குழுவினரிடம் பொதுமகன் முறையீடு...!*

மயிலர் :- படையென்றால் ஆக்கிரமிக்கத்தான்.

அடுத்தவன் காணியைத் தான் அவங்கள் ஆக்கிரமிப்பாங்கள்....அவங்களுக்கேது எங்கடை ஊரிலை சொந்தக்காணி....முகாமமைக்கிறது அவங்கடை பொழுது போக்கு முறை ப்பாடு செய்கிறது எங்கடை பொழுது போக்கு.... எல்லாவற்றையும் கண்ணைமூடிப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அறிக்கை விடுறது...கண்காணிப்பு குழுவின்ரை பொழுது போக்கு.... இப்பிடியே காலம் போகுது பாருங்கோ....!

*செய்தி :- அரசு சட்டத்திற்கு அமையவே நடக்க வேண்டியுள்ளது என்கிறார் ரணில்...*

மயிலர்:- நியாயபூர்வமான கோரிக்கை நிறைவேற்றாதே எண்டு சொல்லுற சட்டம் எங்களுக்கு சரிவராது பாருங்கோ...சட்டம் சரியா நீதியா இருந்தா ஏன் இவ்வளவு சோலி... இவ்வளவு சண்டை..... சமாதானத்திற்கு சரிவராத சட்டங்களுக்கு அமைய நடக்கிற தலையெழுத்து எங்களுக்கில்லைப் பாருங்கோ...

*செய்தி :- பொ.ஐ.முன்னணியின் தீர்வு யோசனைகளை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்கிறார் ஜே.வி.பி யின் விமல் வீரவன்ச.*

மயிலர் :- ஆரையேன் தீர்த்துக்கட்டுற யோசனை என்றால் இந்தச் சாயம் போன சிவப்புத் தோழர்கள் ஏற்றுக் கொள்ளுவினம் என்கிறது தெரிந்த விடயம் தான் பாருங்கோ.... விடாக்கண்டரும் கொடாக்கண்டரும் கூட்டுச் சேர்ந்தா இப்பிடித்தான் இருக்கும்... அவை ஒரு போதுமே பொதுசனத்தோடை ஐக்கியப்பட்டு முன்னணிக்கு வராயினம் பாருங்கோ...!

பகுதி -II



# தொடர்கதை

## அத்தியாயம்-01

இதுவரை.........

போலந்திலிருந்து இடம் பெயர்ந்து அமெரிக்காவுக்கு வந்த கௌசக்குடும்பத்தவர்கள் மிஸிஸ் மக்கின்ரயரின் எஸ்ரேற்றில் குடியமர்த்தப்படுகிறார்கள். இதற்கு கத்தோலிக் கப்பாதிரியார் உதவுகிறார். ஏற்கனவே அங்கு வேலை செய்யும் சோட்லி குடும்பம் அதனால் பாதிக்கப்படுகிறது. கௌசக போல் வேலை செய்ய திராணியற்றவனாக சோட்லியிருக்கிறான். போலந்தில் கௌசக் போல் பெரும்பாலானோர் கத்தோலிக்கர். அமெரிக்காவில் சோட்லி போல் பெரும்பாலானோர் புரட்டஸ்தாந்து மதப் பிரிவினர். கதை முழுவதும் மதவேற்றுமைகள் வருகின்றன. சோட்லி குடும்பத்தவர்களை வெளியேற்ற மிஸிஸ் மக்கின்ரயர் யோசிக்கிறார் என்பது மிஸிஸ்சோட்லிக்கு தெரிந்து விடுகிறது. அதற்கு முன்பே சோட்லி குடும்பத்தவர்கள் அங்கிருந்து வெளியேறிவிடுகிறார்கள். ஏற்கனவே இருதய நோயாளியாக இருந்த மிஸிஸ் சோட்லி காரிலேயே இறந்து விடுகிறாள். பின்...

# இடம் பெயர்ந்தவன்

பிளானறி ஓ கொணரின்

தமிழில்
சு.மகேந்திரன்

அந்த வயதான நீகிரோவிடம் "அவர்கள் இல்லாமலேயே எல்லாவற்றையும் எம்மால் கொண்டு செல்ல முடிந்திருக்கிறது தானே" என்றாள் மிஸிஸ் மக்கின்ரயர். கன்றுக்குட்டிகளுக்கான தொழுவத்தடியில் அவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். நீகிரோ அதனைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். கையில் இருந்த துடைப் பத்தால் மூலை ஒன்றிலிருந்த சோள அடிக்கட்டையை தட்டி எடுத்துக்கொண்டும், நனைந்து தோய்ந்து அசிங்கமாக இருந்த அகன்றவர்கள் அவர்கள் விலக்கிவிடப்படத்தான் வேண்டியவர்கள் என்பதாலேயே அவளை விட்டு விலகிச்சென்றவர்கள். சோட்லி குடும்பத்தவர்கள் அவர்களைப் போல் குரூரமானவர்கள் அல்ல. மிஸிஸ் சோட்லி ஒரு நல்ல பெண்ணும் கூட. அவள் போனதால் ஒரு உற்ற சகவாசத்தை மிஸிஸ் மக்கின்ரயர் இழந்திருந்தாள்.

"கறுப்பர்களோ அல்லது வெள்ளையர்களோ எல்லோருமே வ்ருவதையும் போவதையும் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோம்" என்றாள் மண்வெட்டியால் எடுத்துக்கொண்டிருந்த கிழவன், அதை நிறுத்திவிட்டு 'நானும் நீங்களும் மட்டும் தான் இன்னும் இங்கிருக்கிறோம்' என்றான்.

அஸ்ரர் பேசிய தோரணையில் இருந்து எதனை அவள் விளங்கிகொள்ள வேண்டுமென அவன் விரும்புகிறான் என்புது அவளுக்கு விளங்கியது.

உடைந்திருந்த சீலிங்கிலிருந்து சூரிய ஒளி பாணங்களாகப் புகுந்து அவளது உடலில் மூன்று வெவ்வேறான இடங்களில் பட்டுக்கொண்டிருந்தது. மண்வெட்டியை இரு கைகளாலும் கையின் அரைவாசியை இந்த உபயோகம் அற்றவர்களுடன் மடத்தனமாக போக்கிவிட்டேன்" என மிகுந்த கோபத்துடன் கூறினாள். "ஆனால் இப்போது அவற்றில் எல்லாமிருந்து மீண்டு விட்டேன்".

"கறுப்பர்கள் ஆனாலும் வெள்ளையர்களானாலும் எல்லாம் ஒன்றே" என்றான் கிழவன்.

"அவற்றை எல்லாம் கடந்து



பகுதி ஒன்றைச் சுட்டிக்காட்டிக்கொண்டும் இருந்தாள் மிஸிஸ் மக்கின்ரயர். இங்கு வாழ்ந்த குடும்பங்களில் இடம்பெயர்ந்தவர்களை ஒதுக்கி விட்டுப்பார்த்தால் சோட்லி குடும்பத்தவர்களையே சிறந்தவர்கள் எனச் சொல்லலாம். சோட்லி குடும்பத்தவர்கள் போய்ச் சேர்ந்து விட்டார்கள் எனத் தெரிந்தவுடன், தான் துரத்தாமலே தானாகவே அவர்கள் போய்ச் சேர்ந்ததை இட்டு மகிழ்ச்சி அடைந்தாள். ஒருவகை நிம்மதி அது. வேலையில் இருந்து முன்பெல்லாம் அங்கிருந்து மிஸிஸ் மக்கின்ரயர். 'நீதிபதி கூறுவது போல் பையை ஒரு (சிற்றுண்டி) சாப்பிடவும் வைத்திருக்கவும் ஒரே சமயத்தில் முடியாது' என மீண்டும் கூறினாள். அத்துடன் இடம்பெயர்ந்தவர்களில் அவள் திருப்தியும் அடைந்திருந்தாள். அதனால் இவர்கள் வருவதையும் போவதையும் பார்த்துக்கொண்டு இருக்கிறோம் என்றாள் மறுபடியும்.

தீவனம் போடும் தட்டுகளில்இருந்தவற்றை கெட்டியாக அவன் பிடிப்பதைப் பார்த்துக் கொண்டு இருந்தாள். அவனது உருக்குப் போல மந்த உடம்பு மண்வெட்டியுடன் சேர்ந்திருந்தது. அவள் தனக்குள் "நீ எனக்கு முன்பே இங்கு வந்திருக்கலாம், ஆனால் நீ இங்கிருந்து போன பின்பும் கூட நான் இங்கு தான் இருப்பேன்" எனக்கூறிக் கொண்டாள். "எனது வாழ்க் விட்டேன்" என்றாள் மிஸிஸ் மக்கின்ரயர். ஒரு கறுத்தத்துணியை மேலாடையின் மேல் கூரிய முனைப போலாக்கி அணிந்திருந்தாள். அதனை கழுத்தை நோக்கி சடுதியாக எறிந்தாள். இருபது வருடங்களுக்கு முன் இருபது டொலர்களுக்கு கொடுத்து வாங்கிய அகன்ற விளிம்புடைய வைக்கோலிலான கறுத்தத் தொப்பியை இப்போதெல்லாம் வேனிற்கால தொப்பியாக அணிந்து கொள்கிறாள்.

(தொடரும்)

---

# தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு சுவாமி விபுலாநந்தர் ஆற்றிய சேவைகள்

பேராசிரியர்
இ.பாலசுந்தரம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

மகாத்மா காந்தியின் கோட்பாடுகளால் கவரப்பட்ட சுவாமி விபுலாநந்தர் காந்தி அடிகளின் ஆதாரக் கல்வித் திட்டத்தில் வலியுறுத்தப்பட்ட தொழிற்கல்விக்கும் தமது பாடசாலைகளில் முக்கியத்துவம் அளித்தார். இதன் மூலம் மாணவரின் திறமைகளை வளர்த்தெடுத்து அவர்களைச் சமுதாயத்தின் வளர்ச்சிக்குப்பங்களிக்கும் வகையிலான தொழிற்கல்வியை சுவாமிகள் ஊக்கப்படுத்தினார்.

அவர் பத்திரிகை ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளின் மூலமாகவும், அரசாங்கத்துக்கு அவர் எழுதிய கல்வி அறிக்கைகள், விண்ணப்பங்கள் மூலமாகவும் கல்வி ஆராய்ச்சிக்குழு, பாடவிதானச்சபை, தேர்வுத் திணைக்களம் ஆகியவற்றில் உறுப்பினராக இருந்த போதும் கல்வித் துறைக்கு ஆக்கபூர்வமான அறிவுரைகளை வழங்கி, அவற்றைச் செயற்படுத்தினார். தேசியக் கல்வி நாட்டுக்கு அவசியம் என்பதை சுவாமிகள் வற்புறுத்தி வந்தார். கல்வி கற்பிக்கும் பொறுப்பையும் பள்ளிக்கூடங்களை அமைக்கும் பொறுப்பையும் அரசு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும், அவ்வகையில் உருவாகும் தேசியக் கல்வியே தேசிய உணர்வையும் விடுதலை உணர்வையும் இளஞ் சமுதாயத்திற்கு ஏற்படுத்தும் என்றும் அடிகளார் உறுதியான நம்பிக்கையோடு பத்திரிகைகளில் எழுதி வந்ததோடு, அரசுக்கும் எடுத்துரைத்தார்.

கல்வி அவரவர் சமய பண்பாட்டுச் சூழலிலே இடம்பெற வேண்டும் என்பது சுவாமி விபுலாநந்தரின் கல்விக்கோட்பாடாக இருந்தது. அத்துடன் வள்ளுவர் கூற்றுக்கிணங்க "கற்றதனாலாய பயனென் கொல் வாலறிபன் நற்றாள் தொழாரெனின்'' என்ற கல்விப் பயன்பாட்டையும், அவர் மிக வலுவாகக் கடைப்பிடித்தார். சுவாமி விபுலாநந்தர் வாழ்ந்த காலத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆங்கிலேயர் ஆட்சியும், ஆங்கிலக் கல்வியும் உச்சநிலை பெற்றிருந்த காலம். பட்டம் பதவிகளுக்காகத் தமது மதம், பண்பாடுகளைத் தூக்கி எறிந்துவிட்டு, மதம் மாறிக் கொண்டிருந்த காலம். நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்



சொல்லுதமிழ் எங்கே சுருதி எங்கே? என்று பாடப்பட்டதை அறிவோம். சுவாமி விபுலாநந்தர் கிழக்கிலங்கையிலும் யாழ்ப்பாணத்திலும் மலையகத்திலும் பாடசாலைகளை அமைத்து வறியவர்களுக்கும், சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்கும் ஆதரவளித்துக் கல்வியூட்டியமையால் தமிழும் பண்பாடும் வளம் பெற்றன. சமூகத்தின் பல நிலைப் பட்டவர்களும் படித்து சமூகத்தில் உயர்நிலை அடையக் கூடியதோர் வாய்ப்பும் கிடைத்தது. சுவாமிகளுடைய கல்விச்சிந்தனைக எின் பரிசோதனைக்களமாகச் சிவாநந்த வித்தியாலயம் விளங்கிற்று.

சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் பெண்கள் கல்வி கற்கும் வாய்ப்பு மிகமிக அரிதாகவே இருந்தது. பெண்கள் கல்வி சமுதாய வளர்சசிக்குப் பெரிதும் தேவையானதொன்று என்பதை நன்கு புரிந்து கொண்ட சுவாமி விபுலாநந்தர், பெண்கள் கல்வி கற்பதற்காகத் தனியான பாடசாலைகளை ஏற்படுத்தினார். அவற்றுள் காரைதீவில் அமைக்கப்பட்ட சாரதா வித்தியாலயம் மிகப்பெரியதாகும். பெண்களின் கல்வி முக்கியத்துவம் பற்றி சுவாமி விபுலாநந்தர் வருமாறு கூறுகின்றார்-

"நமது நாட்டில் எழுத வாசிக்கத் தெரியாத பல பெண்கள் இருக்கிறார்கள். ஆடவர் பலர் இருக்கிறார்கள். இவர்களுக்கு அறிவமுது ஊட்டுதல் எவ்வாறாகும்.? இதற்கு ஓர் வழியுண்டு. கற்றலைப் போலவே கேட்டலும் சிறப்புடையது. முன்னாளில் ஔவைப் பாட்டியார் ஏழைகள் அளித்த கூழ் அமுதையுண்டு அவர்களுக்கு அறிவமுதத்தை ஊட்டி வைத்தாரல்லவா?........ ஔவையார் செய்த கைங்கரியத்தைச் செய்வதற்கு அறிவாலும் வயதாலும் முதிர்ந்த அன்னைமார் முற்பட்டு வரலாகாதா?''

தொண்டர் சேவைகள் பற்றி இப்போது பெரிதும் பேசப்படுகிறது. அதற்காக விருதுகளும் வழங்கப்படுகின்றன. ஆனால் சுவாமி விபுலாநந்தர் தம் காலத்தில் பெண் கல்விக்கான தொண்டர்களை வரவழைத்த செய்தியானது சுவாமிகள் எத்தகு முற்போக்குச் சிந்தனைகளுடன் அக் காலத்திற் செயற்பட்டார் என்பதைக் காட்டுகின்றது.

சுவாமி விவேகானந்தரின் கல்வித் தத்துவங்களின் அடிப்படையிலேயே சுவாமி விபுலாநந்தரின் கல்விச் சிந்தனைகள்உதயமாகின. நல்லொழுக்கம், ஆளுமை, மனவலுமை, தன்னம்பிக்கை என்பனவற்றை வளர்க்கும் கல்வியையே சுவாமி விவேகானந்தர் போதித்தார். விபுலாநந்தரது கல்வி முறையில் உடல் வளர்ச்சி, உளவளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி என்பன முக்கியத்துவம் பெற்றிருந்தன. தான் திருந்தினால் தரணி திருந்தும். இல்லம் திருந்தினால் இராச்சியம் முற்றும் திருந்தும் என சுவாமிகள் அடிக்கடி கூறிக் கொள்வார் என அவரிடம் படித்த மாணவர் கூறக் கேட்டிருக்கிறோம்.

இலங்கையில் பல்கலைக்கழகம் அமைப்பதற்குரிய ஒழுங்குகள் நடைபெற்ற காலத்தில் எத்தகைய பல்கலைக்கழகம் ஈழத்தில் அமைய வேண்டும் என்று ஒரு கட்டுரையை அடிகளார் What type of University of Ceylon we need : என்ற தலைப்பில் 25.08.1941 இல் Hindu Organ என்ற பத்திரிகையில் எழுதியிருந்தார்கள். மேலும், "நாம் எதிர்நோக்கும் சர்வ கலாசாலை இலக்கியத்திலும் ஏனைய கலை ஞானங்களிலும் தேசிய இலட்சியங்களை வளர்த்தல் வேண்டும். ஏனைய நாட்டிலுள்ள கலைஞானிகள் இங்கும் ஏதாவது கற்றுக்கொண்டு திரும்பக் கூடியதாக இங்கு வரவேண்டும் என்ற கருத்துக்களை எழுதினார்.. (30.10. 1938)

சுவாமி விபுலாநந்தர் மேற்கொண்ட துறவு வாழ்க்கை அவரது கல்விப்பணிகளுக்கு மேலும் உறுதுணையாக அமைவதாயிற்று. அவர் சார்ந்த இராமகிருஷ்ணமிஷன் கோட்பாடுகளும் சாதி மத பேதங்களைக் கடந்து செயற்பட அவருக்கு வாய்ப்பளித்தது. மாணவர்கள் சகிப்புத் தன்மையுடனும் எவரிடத்தும் அன்பு உடையவராகவும் பழக வேண்டும் என்பது சுவாமி விபுலாநந்தரின் கொள்கையாகும். சுவாமிகள் தமிழையும் சைவத்தையும்

வளர்க்கப் பெரிதும்பாடுபட்ட அதேவேளையில், சகல மதத்தவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகினார். சுவாமிகளை நமது சமுதாயத்திற்கு மாபெரும் மேதையாகவும் கற்றோர் போற்றும் பேரறிஞராகவும் உருவாக்கிய பணியில் ஒரு பங்கினை மட்டக்களப்பு அர்ச். மிக்கேல் கல்லூரி பெறுகின்றது என வணக்கத்துக்குரிய

லோப்பு அடிகளார் கூறுவதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற தத்துவத்தின் அடிப்படையில் பணிபுரிந்தவர் சுவாமி விபுலாநந்தர். இதனையே புனித அருளப்பரின் 4-20-21 வாசகங்களும் உணர்த்துகின்றன. பின்னாளில் பாரதியார் கண்ட கனவும் அதுவேயாகும். ■



காதலித்தவனை கலியாணம் செய்ய நினைத்த ஒரு காரணத்துக்காக தன்னை ஒதுக்கிவைத்த அப்பாவையும் சகோதரர் களையும் அவள் வெறுத்தாள். அம்மா பாவம் என நினைத்துக்கொண்டாள்.

'இப்பதானே ராசாத்தி உனக்கு பதினேழு வயது...படிச்சு...ஒருவேலை தேடி.... ஆறுதலா செய்யலாம்...இப்ப ஊர் சிரிக்கும்....' அம்மாவின் அறிவுரை அவளுக்கு பொருத்த மான தாக அப்போது தெரியவில்லை.

# தடுப்புகளில்லா ஓடங்கள்

ஆதிலட்சுமி சிவகுமார்

காற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்கத் திராணியற்றது போலத் தென்னை மரங்கள் ஓவென்று இரைந்து கொண்டிருந்தன. வயல்வெளிக்கு அப்பால் ஆற்றங்கரையில் நரிகள் ஊளை யிட்டுக் கொண்டிருந்தன. மூலைக் குள் சிக்கனவிளக்கின் மெல்லிய ஒளி ஊசலாடிக் கொண்டிருந்தது. அவளுக்குச்சரியான. பயமாக இருந்தது. கவலையாகவும் இருந் தது. ஆறுமாத காலமாய் ஒவ் வொரு இரவும் இப்படித்தான் அவளுக்கு பயத்துடனும் கவலை யுடனும் கழிந்து கொண்டிருந்தது.

பக்கத்து வீடு கூட சற்றுத்தூரத்தான் இருந்தது. தென்னந் தோப்பினூடாக நடக்கவேண்டும். முன்வளவுக்குள் இருந்தவர்கள் சொந்த ஊருக்குப்போய்விட்ட தால் - வீடு பாழடைந்து வெறிச் சோடியிருந்தது.

பாயின் ஓரத்தில் அவள் படுத்திருந்தாள். அருகில் நான்கு வயது மகன் அகிலனும் இரண் டரை வயது சுகிர்தாவும் அயர்ந்த தூக்கத்தில் இருந்தார்கள். இப் போதும் அவள் ஏழரை மாத கருவை சுமந்து கொண்டு தான் இருக்கிறாள்.

'எல்லாரும் ஊருக்குப் போறாங்கள்.... நானும் ஒருக்காப் போய் நம்மட தாய் தகப் பனை....இனசனத்தைப் பாத்திட்டு வரலாமெண்டு யோசிக்கிறன் சித்திரா...'

'.......'

'என்ன யோசிக்கிறாய் சித்திரா...? சொல்லன்....'

'தனியவா போப் போறீங் கள்.....?'

'ஏன்...? தனியப் போனா.... உன்னை கைவிட்டிட்டு அங்க நிண்டிடுவன் எண்டு பயப்பிடுறியா...?'

அவன் தமாசாகத் தான் கேட்டான்.

'அப்பிடியில்லை:.... குழந்தையள் ரண்டும் சின்ன துகள்... இப்பவும் அம்பது நாளா ச்சு.... இந்த நேரத்திலை... நீங்களும் வெளிக்கிட்டா.... கையிலயும் ஒருசதம் இல்லை...' துயரில் தோய்ந்ததாய் அவள் குரல். அவன் அவளுக்கு நெருக் கமாக வந்து அமர்ந்தான்.

'இஞ்ச பார் சித்திரா.... நான் ஊருக்குப் போனா.... என்ர பங்குக்காணி இருக்கு... அதை வித்து காசா கொண்டு வரலாம்... உனக்கு ஒரு தோடு... சின்னதா ஒரு செயின்... சுகிர்தாவுக்கு தோடு...ம்...இனி உண்டா கியிருக்கிறதும் பொம்பிளைப் பிள்ளையெண்டா... அதுக்கும்...'

'நீங்கபோனா காசோடை வருவியள்...சரி... பயணம் போற துக்கு காசுக்கு எங்க போறது...? விடிஞ்சா பாணுக்கு கூட காசி ல்லை...'

'நம்மட ராசகிளி அன்ரி இருக்கிறாவெல்ல....அவயிட்டை சீட்டுக்காசு இருக்கும்.... ஆயிரம் ரூபா கேட்டுப்பார்.... இண்டைக்கு ஆறாம் திகதி வாற முதலாம் திகதி வட்டியோடை குடுப்பம்...'

அவன் அவளுடைய முகத்தையே பார்த்துக்கொண்டி ருந்தான். அவன் முகம் மிகவும் களைத்துப்போயிருப்பதாக அவ ளுக்குத்தெரிந்தது. நாலைந்து நாட்களாய் சரியான சாப்பாடும் இல்லாதிருந்தது.

'எங்கட கஸ்டத்துக் குள்ளை இதுவேறை...' வயிற் றைத் தொட்டு அவள் சலித்துக் கொண்டாள்.

'அப்பிடியெல்லாம் சொல் லாத...நான் ஒருக்கா ஊருக்குப் போயிட்டுவந்தா எங்கட கஷ்டம் துலைஞ்சிடும்.... எனக்கு நம்பி க்கை இருக்கு...' அதன் பிறகு அவள் எதுவும் கதைக்கவில்லை.

அவளுக்கு இப்போது மிகவும் களைப்பாயிருந்தது. அவளைத்தெரிந்தவர்கள் அவளு க்காக இரக்கப்பட்டார்கள். அவன் போய் அறுபத்து மூன்று நாட்க ளுக்கு மேலாகிவிட்டது. குழந் தைகளுக்குச்சரியானபசி.

அவள் கிளினிக் போன போது அவளுக்கு போதிய சத் தில்லை என்று கூறிசத்தான குளி சைகளும், சத்துணவும் கொடுத் தார்கள். 'அவளால் சாப்பிட முடி யாதிருந்தது.

சீட்டுக்கார இராசகிளி அக்காவுக்கு அவன் மீதிருந்த நம்பிக்கையில் வாங்கிக் கொடு த்த பணத்துக்கு மாறிமாறி தவணை சொல்லி ஏராளமாய்ப் பேச்சும் வாங்கி முடிந்து விட்டது.

'திருப்பித்தர வக்கில்லா தனி... ஏன் வாங்கினனி...?' இராச கிளியக்காவின் வார்த்தைகள் குத்திக்குதறின.

'அவர் எப்பிடியும் வந்தி டுவாரக்கா... வந்தவுடனை தாறன்...'

'ஓ...அவன் வருவன்...நீ பாத்துக்கொண்டிரு... அவன் அங்கபோய் இத்தறுதிக்கு வேற கலியாணம் முடிச்சிருப்பான்...'

அந்த வார்த்தைகள் அவள் நெஞ்சைப்பிளப்பது போலிருந்தன. அவள் அழுது கொண்டு படுத்திருந்தாள்.

'ம்....போனவர்....போய் ரெண்டு. மாதமாச்சு...ஒருவரிக் கடிதமாவது போட்டிருக்கலாம் தானே...அப்பிடி அங்க என்ன வெட்டிப்புடுங்கிற வேலையே....'

அவள் அசதியில் கண் ணயர்ந்திருக்க வேண்டும். படலை யடியில் யாரோ அழைப்பது கேட்டு எழுந்து வந்தாள்.

'அக்கா...இது... இந்திர குமாரின்ர வீடே...'

'ஓமோம்....அவர் ஊருக் குப் போட்டார்....'

'சயிக்கிள் ஒண்டு வாங் கினவரக்கா....ரெண்டாயிரத்தி நானூறு ரூபாக்கு இன்னும் காசு தரேல்லை...' எ....எனக்கு அப்படி யொண்டும் தெரியேல்ல

'நீங்கள் ஆர்....?'

'நான் அவற்ற மனுசி...'

'அவர் வந்தாச் சொல் லுங்கோ.... உடனை காசைக் கொண்டு வந்து தரட்டாம்.... இல்லாட்டி...'

அவளுக்கு தலை சுற்று வது மாதிரி இருந்தது. படலை யடியில் அப்படியே உட்கார்ந்து கொண்டாள்.

அவள் இரண்டு குழந்தை களையும் கூட்டிக் கொண்டு நடந் தாள். தெருவில் புழுதிகிளப்பிக் கொண்டு வாகனங்கள் பறந்தன. அவனுடைய உறவினர்கள் யாரோ வள்ளிபுனத்தில் இருப்பதாக கூறியிருக்கிறான். ஒருமுறை மாடு ஒன்று கொண்டு வருவதற்காக அந்த உறவுக்கார ஐயா அவர்கள் வீட்டுக்கு வந்திருக்கிறார். அங்கு போய் அவனுடைய விலாசத்தை வாங்கி ஒரு கடிதம் போடலாம் என அவள் நினைத்துக் கொண்டு புறப்பட்டிருந்தாள்.

கிரவல் தெருவில் குறு னிக் கற்கள் கால்களில் அழுத்து வதால் குழந்தைகள் நடக்கக் கஷ்டப்பட்டன.

'அம்மா.... ஊக்குங்கோ...' பெண்குழந்தை சிணுங்கிக் கொண்டு நின்றது.

அவளுக்கு அழுகையும் அவன் மீது ஆத்திரமுமாய் வந்தது, அடி எடுத்து வைக்க முடி யாமல் தொடைகள் வலி எடுத்தன. அவள் மிகுந்த சிரமத்தோடு பாடசாலைக்கு முன்னாலிருந்த ஒழுங்கையில் இறங்கி நடக்கத் தொடங்கினாள். வீதி ஓரத்து வேலிகளில் பூவரசுகளும், ஆத்திமரங்களும் குளிர்மைப் பரப்பின.

அந்த உறவினரின் வீட்டைக்கண்டு பிடித்தபோது நண்பகலாகிவிட்டிருந்தது. அவள் தயங்கித்தயங்கி உள்ளே போன போது அவர் கள் அவளை அன்பாக அமர வைத்தார்கள். குழந்தைகளுக்கும் அவளுக்கும் உணவு கொடுத் தார்கள்.

அவர்களின் வீட்டில் துள்ளி ஓடும் பசுக்கன்றுடன் குழந் தைகள் விளையாடினார்கள்.

அவள் அவர்களிடம் அவன் ஊருக்குப்போனதைக் கூறி, அவனுடைய முகவரியைத் தருமாறு கேட்டாள். அந்த ஐயா நாடியைச்சொறிந்தபடி சில வினாடிகள் யோசித்தார்.

'பிள்ளையளையும் என் னையும் விட்டிட்டு அரை நிமிசம் கூட அவர் இருக்கமாட்டார்... போனவருக்கு என்ன நடந்துதோ...' அவள் விம்மி விம்மி அழுதாள்.

'பிள்ளை...நான் உண்மை யைச் சொல்லுறன்....' அவள் அழுவதை நிறுத்தி ஐயாவின் முகத்தைப்பார்த்தாள்.

'உன்ர புருஷன் எங்கட ஊருமில்லை.... எங்கட உறவு மில்லை.... எங்கட வயலில் வேலைக்கு வந்ததிலை சும்மா பழக்கம் தான்...' எங்கோ உயர த்தில் இருந்து தொப்பென்று தரையில் விழுந்து சிதறிப்போன மாதிரியான உணர்வு அவளை அழுத்தியது. அவள் அழக்கூட முடியாதவளாய் அதிர்ந்து போய் அமர்ந்திருந்தாள். ஐயா சாப்பிட்டு முடிந்து மீண்டும் வயலுக்குப் போய் விட்டார். ஐயாவின் மனைவி ஓய்வாக அமர்ந்திருந்




தாள். ஏறிய நெற்றியில் விரலால் குங்குமம் தொட்டு பொட்டு வைத்திருந்தாள். சிடுசிடுப்பற்று அமைதியாகவும் அன்பாகவும் தெரியும் அந்த அம்மாவின் உப சரிப்பு அவளுக்கு இதமாயிருந் தது.

'பிள்ளை....இந்த நேரத் திலை கடுமையா யோசிக்கப் பிடாது... நீ ஒருக்கால் மதவடி யிலை இருக்கிற சாத்திரியா ரிட்டை போ...அவர் மைபோட்டுப் பாத்து உண்மையைச்சொல்லு வார்...முந்தி எங்கட மூத்தவள் கலியாணத்துக்கெண்டு ஜேர்மனிக் குப் போய்.... ஆறேழு மாதமாய் ஒரு தொடர்பும் இல்லை... அந்தச் சாத்திரியாரிட்டைத் தான் மை போட்டுப்பாப்பிச்சனாங்கள்...'

'உண்மை சொன்ன வரோ...?'

'ஓ.... மூண்டு கிழமைக் குள்ளை பதில் கிடைக்கும் எண்டவர்...பத்து நாளைக்குள்ளை பதில் வந்திட்டுது...'



'நிறையக் காசு கேப் பாரே அம்மா... என்னட்டை ஒண்டும் இல்லை...'

'காசெண்டு அவர் வாங் கிறேல்லை... ஏதாவது பொருளாக் கொண்டு போய் தட்டிலை வைச் சால் சரி பிள்ளை...' அவர்கள் வீட்டிலிருந்து அவள் புறப்பட்ட போது அம்மா அவளுக்கு ஒரு பையில் அரிசிதந்திருந்தா. நன்றி யோடு அதை வாங்கிக்கொண்டு அவள் புறப்பட்டாள்.

வெயில் கொளுத்தி எரித் துக் கொண்டிருந்தது. நிலத்தி லிருந்து கிளம்பிய சூடு காற் றுடன் கலந்து அனலாய் வீசியது. வழியில் வெறுமனே லான்மாஸ்ரர் ஒன்று வந்து கொண்டிருந்தது. அவருக்கு இப்போது உணவருந் திய களை. கையைக் காட்டி லான்ட்மாஸ்ரரை மறித்தாள்.

'எங்கையக்கா போறி யள்...?

இடம் சொன்னாள்.

'ஏறுங்கோ...'

குழந்தைகளை ஏற்றிவிட்டு தானும் ஏறி அமர்ந்து கொண்டாள். குழந்தைகள் பயத்தில் அவளை இறுகப்பற்றிக்கொண்டிருந்தன.

தென்னந் தோப்பினூடாக அவள் நடந்து கொண்டிருந்தாள். பெண்குழந்தை தோளில் உறங்கி விட்டிருந்தது.

எதிரே சீட்டுக்காற இராச கிளியக்கா வந்துகொண்டிருந்தா. அவவைக்கண்டதும் அவளுக்கு தொண்டைத்தண்ணீர் வற்றிவிட்ட மாதிரி இருந்தது.

'இஞ்ச சித்திரா.... உன் னட்டத்தான் போட்டு வாறன்... புருஷன் காறனும் விட்டிட்டுப் போட்டான்....நீ எங்கை திரி யிறாய்...?'

'அவற்ற சொந்தக்காற ரிட்ட போட்டு வாறன்....'

'சொந்தக்காறரோ....அவையிட்டை வாங்கி என்ர காசைத்தாவன் சீட் டெடுத்த ஆக்களுக்கு நான் காசு குடுக்கிறேல்லையே...'

'எப்பிடியும் தருவன்..... நாலைஞ்சு நாள் பொறுங்கோ...'

'ம்....நீ தருவாய்...'

இராசகிளியக்கா விறு விறுவென்று போனா. அவளுக்கு நடக்க முடியாமல்கால்கள் பின் னிக்கொண்டிருந்தன. குழந் தையை மறுதோளுக்கு மாற்றிக் கொண்டு நடந்தாள்.

இரவு முழுவதும் அவ ளுக்குத்தூக்கம் வரவில்லை. நேரத்தோடு எழுந்து சாத்திரியார் வீட்டுக்குப் போகவேண்டும் என் கின்ற தவிப்பு அவளை உலுப்பிக் கொண்டிருந்தது.

அந்த ஐயா வீட்டில் அவள் மீது இரக்கப்பட்டுத் தந் திருந்த அரிசியை அவள் அப்ப டியே சாத்திரியாருக்கு காணிக்கை கொடுப்பதற்காக கட்டி வைத் திருந்தாள்.

எங்கோதூரத்தில் சேவல் கூவியது. நேரம் பார்ப்பதற்கு அவளிடம் கடிகாரம் இல்லை. காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு ஏதாவது கோயில் மணி அடிக்கிறதா என்று பார்த்தாள். மூசி வீசும் காற்று எதையும் சும ந்து வருவதாயில்லை.

திடீரென்று அம்மாவின் நினைப்பு வந்தது. அம்மா ஒரு போதும் மணிக்கூடு பார்த்து எழும்புவதில்லை. ஆனால் நான்கு மணிக்கு சரியாக எழுந்து விடு வாள்.

காதலித்தவனை கலியா ணம் செய்ய நினைத்த ஒரு காரணத்துக்காக தன்னை ஒதுக்கி வைத்த அப்பாவையும் சகோதரர் களையும் அவள் வெறுத்தாள். அம்மா பாவம் என நினைத்துக் கொண்டாள்.

'இப்பதானே ராசாத்தி உனக்கு பதினேழு வயது... படி ச்சு...ஒருவேலை தேடி.... ஆறு தலா செய்யலாம்...இப்ப ஊர் சிரிக்கும்....' அம்மாவின் அறிவுரை அவளுக்கு பொருத்தமானதாக அப்போது தெரியவில்லை

பதினேழு வயதில் அவ னுடன் ஓடிப்போய் இருபத்தொரு வயதில் மூன்று குழந்தைகளுக்கு தாயாக நிற்கும் தன்னை நொந்து கொண்டாள். அவன் ஊரிலுள்ள அரைக்கும் ஆலை ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தான். அவனுடைய கிராமத்தை ஒரு நாளிரவு சுற்றிவளைத்த இராணு வத்தினர் பெரிது சிறிது பாராமல் எல்லோரையும் வெட்டியும், அடித்

தும் படுகொலை செய்தபோது - அவன் மட்டும் எப்படியோ தப்பி இங்கு ஓடிவந்ததாக சொல்லியிருக்கிறான். அவன் கூறிய உருக்கமான கதைகள் பல அவன் மீது ஏற்பட்ட இரக்கமும் அன்பும் அவளை உறவுகளை வெறுத்தும் அவனை அடையச் செய்தன.

உறவுகள் உதாசீனம் செய்தபோதும், மூத்தவன் பிறந்த சில மாதங்களில் அவன் வேலையிழந்து... அதனால் வறுமைப் பட்டபோதும் இவன் இருக்கிறான் என்கின்ற தைரியத்தில் இருந்தவள், இப்போது எல்லாமான அவனே பிரிந்துவிட்டபோது துடித்துத் துவண்டு போனாள். அவன் வருவான் என்ற நம்பிக்கையை விட வந்துவிட வேண்டும் என்கிற ஏக்கமே அதிகமாயிருந்தது.

அவள் இப்போது நடந்து கொண்டிருந்தாள். மூத்தவனை நடத்திக் கொண்டு, இளையவளை தோளிற் சுமந்து கொண்டு நடந்து கொண்டிருந்தாள். மழைவெள்ளம் ஓடும் வீதியாதலால் மணல் நிறைந்திருந்தது. கால்கள் புதையப் புதைய அவள் நடந்து கொண்டிருந்தாள். சந்தியில் இருந்த தேநீர்க்கடையில் வெளிச்சம் தெரிந்தது. கடைக்கு முன்னால் புளியங்குளம் பஸ்ஸிற்காக இரண்டுபேர் பயணப்பைகளுடன் காத்திருப்பது தெரிந்தது. முகங்கள் சரியாகத் தெரியவில்லை.

பாலத்தைக் கடந்து ஒழுங்கையில் இறங்கி சந்தடியின்றி அந்த மை பார்க்கும் ஐயாவின் வீடு நோக்கி நடந்து. கொண்டிருந்தாள். பனை மட்டைகளால் வேலி அடைக்கப்பட்டிருந்த வீட்டின் வளவுக்குள் ளிருந்து நாயொன்று ஓடிஓடிக் குரைத்தது. பயத்தில் மூத்தவன் நடக்கத் தயங்கினான். அவனை கையில் பிடித்து இழுத்துக் கொண்டு நடந்தாள்.

ஒரு வீட்டு விறாந்தையில் பெற்றோல் மக்ஸ் எரிந்து கொண்டிருந்தது. வெளிச்சம் வீதியிலும் படர்ந்திருந்தது. வேலியோரமாய் ஒரு இளைஞன் சைக்கிளில் சாய்ந்து நின்று கொண்டிருந்தான்.

'அண்ண...மைபோட்டுப் பார்க்கிற வீடு...'


'இது தான்... உள்ளே போங்கோ...' என்றான் அவன். அவள் தயங்கித் தயங்கி உள்ளே போனாள். விறாந்தையில் பத்துப் பெண்கள் வரையில் காத்திருந்தார்கள். வாழைக்குலை, பலாப்பழம், உரப்பை மூட்டை, மரக்கறிகள், தேங்காய்கள் என ஒவ்வொருவரும் கொண்டு வந்த காணிக்கைப் பொருட்கள்' விறாந்தையில் பரப்பிக்கிடந்தன. அவளும் தன் அரிசிக் காணிக்கையை வைத்தாள்.

சுவரில் பதிக்கப்பட்டிருந்த மணிக்கூடு நேரம் நான்கு முப்பதை காட்டிக் கொண்டிருந்தது. உள்ளிருந்து சாம்பிராணிப் புகை வாசம் காற்றோடு கலந்து வந்து நாசிகளில் நுழைந்தது. அவள் அங்கு கூடியிருந்த பெண்களில் ஒருத்தியாய் அமர்ந்து கொண்டாள். ஒவ்வொருவரது முகத்திலும் ஏதோவோர் துயரத்தின் அல் லது பிரச்சினையின் சாயல் வெளித்தெரிந்தது.

விடிவதற்குள் இன்னும் நிறையப் பெண்கள் தமது பிரச்சினைகளின் காரணம் அறிய அல்லது தமது துயரங்களுக்கு ஆறுதல் தேடஇங்கு வந்து சேர்வார்கள் என அவர் பலரிடம் கதைத்ததில் தெரிந்து கொண்டாள்.

மூடிய திரைச்சீலைக்குப் பின்னால் இருந்து மைபோடுபவர் முதலாவது ஆளை அழைத்தார். ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண் தான் சுமந்து வந்த காணிக்கைப் பொருட்களுடன் உள்ளே நுழைந்தாள். சித்திரா உரப்பையில் தான் சுமந்து வந்த அரிசியை தன்னருகில் இழுத்து தனது முறைக்காக காத்துக் கொண்டிருந்தாள். ●

## நினைவில் நிலைத்த முன்னுரைகள்



**நூல்களுக்கு முன்னுரைகள் அதில் நுழை வதற்கான தலைவாசல் போன்றவை.**

**சில நூல்களின் முன்னுரைகள் அந்த நூலில் உள்ளடக்கத்தைவிடவும் அற்புதமாக அமைவதுண்டு.**

**சிலரது முன்னுரைகள் அருமையான இலக்கியமாகி மனதில் ஆழவேரூன்றி விடுவது முண்டு.....**

**சில முன்னுரைகள் நூலின் தரத்துக்கும், நூலாளரின் தரத்திற்கும் உரைக்கல்லாக அமைவதுண்டு....**

**அத்தகைய முன்னுரைகள் அர்த்தமுள்ள தேடலில் அலையும் வாசகருக்கு அற்புத அனுபவமாகவும் அமையும்.....**

**அத்தகைய சில முன்னுரைகளின் வரிசையில் 'அறிவுமதி' என்ற தன் கவிதைத் தொகுதிக்கு அவரே எழுதிய முன்னுரையின் பிரதான பகுதிகள்.... இதோ....**

# தாய்மொழிக்கே திரும்புகிறேன்

அறிவுமதி

'அடமழ காலத்துல பீக்கம்பூ எதிர்பார்த்துத்தான் ஒலவைப்போம்' என்கிற தென்பாதி அத்தையின் பதிவுக்குரல் வழியே இருட்டிக் கொண்டு வருகிறது என்வானம். மிருதுவாய் சிதறி.. கெட்டித்து இறங்குகிறது மேகம்.

கருவேலமரம் அசைந்து அசைந்து மழைவாங்க....மானம் பாத்தமண்ணின் வெப்பப் பெருமூச்சு புகையாய்ப் படர்ந்து உயரும். வண்டித்தடங்கள் கண்ணாடிக் கோடுகளாய் நீண்டு... வானம் உறிஞ்சி நீலம் தெறிக்கும். கறம்புப் புற்களில் அடை அடையாய்ப் பற்றிக் கிடக்கும் கரையான் சட்டெனக் கரையும். ஒழுங்கைக் கிளுவைகள் ஒழுங்காய் குளிக்கும். மண்ணுக்குள் தூங்கும் நத்தைகள் காரைச்செடிக்குத் தவ்வி அசையும். கொட்ட முத்துச் செடி பிடித்து ஏறிய அவரையின் பூக்கள் மழைக்கு மழையூட்டும்.

மழைகுடித்த மதர்ப்பில் வரகு, தினை,சோளம், கேழ்வரகு, கொள்ளு, நரிப் பயிறு, பச்சைப் பயிறு, பெரும்பயிறு, மொச்சை, உளுந்து, வேர்க்கடலை (மல்லாக் கொட்டை), கம்பு, துவரை, புளிச்சக்கீரை, வெள்ளரி, கொமுட்டி என விளைந்து விளைந்து கொடுத்த கொல்லைக் காடுகளின் பிள்ளைநான்.

காய்ப்பு காய்க்காத கைகளும், பாடல் பூக்காத உதடுகளும் எம் மண்ணில்... எம் நாட்களில் ஏது? சடுகுடு, ஆறாள் பாரி, எட்டாள்பாரி, கோட்டிப்புள் என இளைய நாட்களில் எம்தெருக்களில் சிதறிக் கிடந்த விளையாட்டுக்களிலும் கொழித்துக் கிடந்தன பாடல்கள். அழிஞ்சிமரத்தின்கீழ் வேல்களோடு அமர்ந்திருக்கும் வீரனார்முன் அருள்வந்து ஆடி... ஈர உடையோடு... வீரமுத்துத் தாத்தா ஓங்கி ஓங்கிக் கொடுவாளால் வெட்டிய ஆடுகள், பன்றிகள், கோழிகளின் குருதித் துளிகள் உடம்பில் பட்டுத் தெறிக்க வளர்ந்தவன் தான் நான்.

கூட்டுக்குடும்ப வாழ்க்கையில் வீட்டுத்தெய்வங்களுக்குப் படைத்து முடிக்காமல் எந்தப் பொருளிலும் கைவைக்க முடியாது. படைக்கும் நேரத்தில் அனைத்துப் பேரன் பேத்திகளும் வரிசையில் நிறுத்தி வைக்கப் படுவோம். சூடத்தட்டோடு நிற்கும் தாத்தா ஒவ்வொரு பேரன் பேத்தியின் நெற்றியிலும் திருநீறு இட்டு வாழ்த்துவார். அதற்கு நடுவே சட்டென சாமிவந்து எவர் சிக்கிறோமோ அவருக்கு அடியுடன்தான் திருநீறு கிடைக்கும்.

வரிசையிலிருந்து நழுவப் பார்த்தால் அம்மாக்கள் விடமாட்டார்கள். பயம் கலந்த அந்தச் சூழலிலும் வரிசையாக மாட்டப் பட்டிருக்கும் சாமிப்படங்களுக்கு காட்டப்படும் தீபாராதனை பக்கத்தில் மாட்டப்பட்டிருக்கும் அண்ணா, கலைஞர், பேராசிரியர், நாவலர், ஆசைத் தம்பி, சிற்றரசு, இராமாமிர்தத்து அம்மையார் ஆகியோரது படங்களின் பக்கம் போகையில்களுக்கெனச் சிரிப்பேன். அம்மா வாயைப் பொத்துவார்.

படிக்காத அம்மா.படித்த அப்பா.

அம்மாதந்தவை - தாலாட்டு, தெம்மாங்கு .கும்மி, நலுங்குப்பாட்டு, ஒப்பாரி, சொலவடை, பழமொழி, புதிர், வசவுகள், கதைகள், அப்பா தந்தவை - நம்நாடு, திராவிடநாடு, முரசொலி முத்தாலம், தென்னகம், தென்றல், இனமுழக்கம், கலைமன்றம், நடிகன்குரல், விடுதலை. அப்பாவால் அறிமுகப்படுத்தப்பட்ட இயக்க இதழ்களும், நூல்களும், தலைவர்களின் உரைகளும்.... தமிழுக்காகவே வாழ... தமிழர்களுக்காகவே போராட என்னைத் தூண்டின. கால்சட்டை நாட்களிலிருந்து இன்றுவரை எமது எழுத்துகளும், செயல்களும் அந்தக் கொள்ளையில் இம்மியளவும் பிசகாமலேயே சென்று கொண்டிருக்கின்றன.

என்னவேதனை... சாமியாடும் தாத்தாவின் பேரனாய்... களுக்கெனச் சிரிக்கையில் அன்று அம்மா, வாயைப் பொத்தினார்கள். இன்று தந்தை பெரியாரின் பிள்ளையாய்.... எம் இனத்திற்காக, மொழிக்காக, ஈழத்திற்காகக் குரல் கொடுக்க முனைந்தால்... எந்த இயக்கம் எனக்குள் இன உணர்வையும் மொழி உணர்வையும் ஊட்டியதோ அந்த இயக்கமே வந்து என் வாயைப் பொத்துகிறது. அடிமைகளாய் இருக்கின்றோம் என்பதை உணவித எம்முன்னோர்கள் அடிமையாய் வாழச் சம்மதித்ததில் வியப்பில்லை. ஆனால் அடிமைகளாய் இருக்கின்றோம் என்பதை இவ்வளவுத் தெளிவாக உணர்ந்தபிறகும் அடிமைகளாய் வாழ்வதில் உள்ள வலியை எவ்விதம் சொல்ல?

ஏதோ ஒரு பகுதியில்...காட்டினூடே புதியசாலையும், புதிய போக்குவரத்துச் சூழலும் உருவாக...அந்தப் பகுதியில் வாழ்கிற பெண்பறவைகள்.... அந்தச் சூழலுக்கு அஞ்சி அஞ்சி... தம் இணைகளை அழைக்கும் இயல்புக்குரலை மறந்தனவாம். துணைகளின் அழைப்புக் குரல்களைக் கேட்காத ஆண்பறவைகள்.... தம் இணைகள் தேட மறந்து... அந்தப் பறவையினமே இன்று அழிந்து கொண்டிருக்கிறதாம்! தமிழின், தமிழினத்தின் நிலையும் இன்று இதுதானே!

இந்தச் சூழலில்தான் எனது கவிதைச் சுவடுகளைத் தொகுத்துப்பார்க்கிறேன். நாட்டுப்புற பாடல் மரபுகளில் பிறந்த நான் இன்று புதுக்கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன். எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களை எதிரிகளின் மீதே பயன்படுத்த முனையும் போராளிகளின் மனநிலையில் மட்டுமே இந்தப் புதுக்கவிதை வடிவத்தை இப்போது நான் ஏற்கின்றேன்.

உழைப்பின் உடல் அசைவுகளது அதிர்வுகளில் வேர்பிடித்து இசைவழிய வளர்ந்தது எம் கவிதை மரபு. மௌனவாசிப்பு என்கிற பம்மாத்து எம்மை மயக்கியது. இன்று மயக்கம் தெளிந்து விட்டது. அப்பாவின் எழுத்து தமிழ் வழியே சென்று கண்ட உண்மை, எம் எழுத்து தமிழ் நீண்ட நெடுநாட்களாகவே எதிரிகளின், துரோகிகளின் ஏவல் மொழியாகவே பயன்பட்டு வந்திருக்கிறது பயன்பட்டும் வருகிறது என்பதுதான்.

எழுதப்படிக்கத் தெரியாத அம்மாவின் பேச்சுத்தமிழுக்குள்தாம் எம் இனமரபிற்கான கவிதைக் கூறுகள் இருக்கின்றன. எனவே எம்தாயின் தாலாட்டுகளை.... தெம்மாங்குகளை.. கும்மிகளை.. நடவுப்பாடல்களை.... ஒப்பாரிகளை.. புதிர்களை.. சொல் வடைகளை.. வசவுகளைத் தேடிப்புறப்படுகிறேன். ஆம்.... மீண்டும் என் தாய்மொழிக்கே திரும்புகிறேன். ■




## பிரியமுள்ள நிலவுத்துண்டு

காற்று அலைக்கிற போதுகளில்
நெற்றியில் விழுகிற கேசங்களை
விரலிடுக்குகளால் கோதிவிடுகையில்
ஒரு நிலவுத்துண்டு
கிழக்கே உதிக்கிறது
முற்றத்தில் நிமிர்ந்து நிக்கிற
செவ்விளையின் கீற்றுகளுக்கிடையே
காகமிருக்கிற பொழுதுகளை
பொட்டு நிலவின் பின்னொளியில்
அம்மாவிற்கு நான் காட்டிய
அந்த முற்றத்து மணல் வெளி
இப்போதும் என் நெஞ்சில்
கனவுபோல முளைக்கிறது
ஒரு தூசிப்படலத்தின் பின்னால்
மறைந்து கழிகிற வாகனங்களை
ஓராயிரம் தடவை கடந்து கடந்து
மிதித்துவருகிற எனது சயிக்கிளுக்கு
எந்தப் பிரஞ்ஞையுமில்லை யென்று
யார் சொன்னது...
ஏத்தங்கள் தாண்டியும்
பள்ளங்களில் விழுந்தும்—உடம்பு
இறச்சியாய் நோக
மனங்கிடந்து பிழிகிறது —எனினும்
மெல்லிய கிறீச் சொலியுடன்
காற்று அலைக்கும் பொழுதில்
அம்மாவின் ஒட்டிய வயிறும்
பூஞ்சிப் பூஞ்சிப் பாக்கிற
அப்பாவின் கண்களும்
என்பின்னால் வளர்ந்து நிக்கிற
சகோதரிகளின் வாழ்வும்
எப்போதும் இருந்துவிட்டு வருகிற
அந்தப் போராளிகளின் நினைவும்
நெஞ்சைமுட்ட— மிடுக்குடன்
கிழக்கே போகிறது
எனது சயிக்கிள்...
இன்னும் தெளிவாய்
சற்றே மேலெழுந்து வருகிறது
பிரியமுள்ள நிலவுத்துண்டு.

முல்லைக்கமல்

## இதையும் ஒரு முறை பாருங்கள்

*மீண்டும் –*
*மனிதங்கள் மரந் தாவுகின்றன.*
*சபிக்கப்பட்ட வாழ்வியலினின்று*
*மீளெழுந்து,*
*விடிவெள்ளி நோக்கி நகரும்*
*மனிதங்களில்,*
*அரக்கத்தனம் அரைந்தேறுகின்றது,*


*'இணையும் கரங்கள்*
*இனியேன் தடைகள்'*
*ஒப்பந்தமிட்டு*
*ஓரிரு நாட்களிலே....*
*பத்திரிகை ஒன்றிலிருந்த*
*சொற்பதம்*
*இது என்றுமே அற்புதமாகையில்...*
*ஏன் இந்த அனர்த்தம்..?*

*இனவாதமே...!*
*இதற்குப் பதில் சொல்லிப்போ...!*
*எத்தனை அம்பாறைகள்*
*இன்னுமுன் நினைவகத்தில்*
*குற்றுயிராய்க்*
*குருதி வெளியேறித் துடித்திறந்த*
*ஒரு அப்பாவியின்*
*மகள் சாபமிட்டால்,*
*அதையும் ஏற்றுப் போ..!*

*அந்தரிக்கையில்*
*கை கொடுத்த அயலவரே...!*
*இதையும்*
*ஒரு முறை பாருங்கள்.*
*இங்கு மனிதங்கள்*
*சாகின்றன.*
*மனிதர்கள், மனிதர்களாகாததால்*
*மனிதங்கள் சாகின்றன.*

நா.தீபா



# விதி

அது ஒரு அழகிய கிராமம். அக்கிராமத்தில் பல உயிர்களை எடுத்தவாறு வந்துகொண்டு இருந்தான் காலன். காலன் வரும் வழியில் ஓர் அணில் அங்கும் இங்குமாக ஓடித்திரிந்தது. அது ஓடித்திரிவதைக் கண்டகாலன் அணில்பிள்ளையே கணக்கின் படி இன்று உன் ஆயுள் முடிகிறது நான் ஓர் இடத்திற்குப் போய் வருகின்றேன் போய்வருமட்டும் இவ்விடத்திலையே நில். வந்து என் வேலையைச் செய்கிறேன் என்றான். அப்போது அணில் நடுங்கியவாறு நின்றது. அந்தவழியால் வந்த ஒரு தேவதை அணில் நடுங்கியவாறு நிற்பதைக்கண்டு அணிலாரே ஏன் நடுங்குகிறாய் என்று கேட்டது. அதற்கு அணில் காலன் கணக்கின்படி எனது ஆயுள் முடிகிறதாம் வந்து கவனிக்கிறாராம் அது வரையும் என்னை இவ்விடத்தில் நிற்கட்டாம் என்றது. அதைக் கேட்ட தேவதை அணிலாரே கவலைப்படாதே நான் உன்னை ஏழுகடல் தாண்டி ஏழுமலை தாண்டி அங்குள்ள ஒரு மரப்பொந்தில் வைத்துவிட்டு வருகிறேன், என்று விட்டு மிகவும் வேகமாக ஏழுகடலையும் ஏழுமலையையும் தாண்டி மரப்பொந்தினுள் வைத்துவிட்டு அடுத்த நிமிடம் தேவதை அணில் முன்பு நின்ற இடத்திற்கு வந்தது. அப்போது காலன் மிகவும் வேகமாக வந்து எதையோ தேடியவாறு நின்றான். அங்கே தேவதை நிற்பதைக்காலன் கண்டுவிட்டு தேவதையே இவ்விடத்தில் அணில் ஒன்று ஓடித்திரிந்தது கண்டீர்களா என்றான். அதற்கு தேவதை ஏன் அணிலைத் தேடுகிறாய் என்று கேட்டது இன்று அதற்கு ஆயுள் முடிகிறது. அது தான் அது இவ்விடத்தில் நின்றது அதனால்தான் அதை உன்னிடம் கேட்கிறேன் என்றான் காலன் அப்போது தேவதை சிரித்துவிட்டு இனி நீ இன்று அணிலின் உயிரை எடுக்க முடியாது என்றது. அதைக் கேட்டகாலன் "ஆ" அப்படியா அது தான் பார்த்தேன் அந்த அணிலிற்கு இவ்விடத்தில் இருந்து ஏழுகடல் தாண்டி ஏழுமலை தாண்டி ஒரு மரப்பொந்தினில் தான் அதன் ஆயுள் எழுத்தின்படி முடிகிறது. இது எவ்வாறு இங்கு நிற்கும் என்று நினைத்தேன் எழுத்தின் படி இந்நேரம் அணிலின் ஆயுள் முடிந்துவிடும் என்று காலன் சொல்லி நிலம் நடுங்கும் படி வாய்விட்டுச் சிரித்தான். இதைக்கேட்ட தேவதை மனம் வருந்தி 'அது விதியின் செயல்' என்று விதியில் பழியைப் போட்டவாறு சென்றது.

**பூ.நிரஞ்சன்**

# வாரம் ஒரு குறள்



உலகில் அஞ்ச வேண்டிய பொருட்கள் உள்ளன. அதே போல அஞ்ச வேண்டிய செயல்களும் உள்ளன. ஆனால் அஞ்சத் தேவையில்லாத பொருட்களுக்கெல்லாம் நாம் அஞ்சி அஞ்சிச் சாவை வரவழைக்கின்றோம். இது எந்த வகையில் நியாயமாகும். இந்த் நிலை வளருமானால் நாம் எமக்குரிய உரிமைகளைக் கூடப் பெறமுடியாத நிலை ஏற்படும். ஆகவே எல்லாவற்றிற்கும் அஞ்சி வாழப் பழகிக் கொள்ளாது அஞ்ச வேண்டியவற்றிற்கு மட்டும் அஞ்சி வாழப் பழகுதல் வேண்டும். அதுவே அறிவுடையவர்களுக்கும் அழகாகும். இதையே வள்ளுவர்,

**"அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில"**

என்று விளக்கியுள்ளார்..

# பாதுகாப்பு

*கணவாய்க்கு மை பாதுகாப்பு*
*பாம்புக்கு விசம் பாதுகாப்பு*
*ஆமைக்கு அவயவங்களை உள்ளிழுக்கும்*
*தன்மை பாதுகாப்பு*
*மாட்டுக்கு கொம்பு பாதுகாப்பு*
*தேனீக்களுக்கு கொட்டும் கொடுக்குப்பாதுகாப்பு*
*நண்டுக்கு வெட்டும் கால்பாதுகாப்பு*
*முள்ளம் பன்றிக்கு சிலிர்க்கும் முட்கள் பாதுகாப்பு*
*புலிக்கு பதுங்குதல் பாதுகாப்பு*
*சிங்கத்திற்கு கூரிய நகங்கள், பற்கள் பாதுகாப்பு*
*யானைக்கு தும்பிக்கை பாதுகாப்பு*
*மரத்திற்கு, தாவரங்களுக்கு முட்கள் பாதுகாப்பு*
*பூமிக்கு ஓசோன் படலம் பாதுகாப்பு*
*பூமியில் வாழும் எல்லா உயிரினங்களுக்கும் தாவரங்களுக்கும்*
*இறைவன் பாதுகாப்பு*

**மு. ரகுபாலன்**

# பொது அறிவு

01. உலகில் பெரிய விமானநிலையம் எது?
    கெனடி விமான நிலையம் (அமெரிக்காவிலுள்ளது)
02. உலகின் பெரிய தீவு எது?
    கிறீன்லாந்து.
03. உலகிலே மிகப்பெரிய கடல் எது?
    தென்சீனக்கடல்.
04. உலகில் மிகப்பெரிய துறைமுகம் எது?
    நியூயோர்க் (அமெரிக்காவிலுள்ளது)
05. உலக அன்னையர் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
    மே.10
06. உலக தந்தையர் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
    யூன்.20
07. உலக வங்கி எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
    1945ஆம் ஆண்டு.
08. உலகின் பெரிய மீன் பண்ணைகள் எத்தனை? அவை எவை?
    நான்கு பண்ணைகள்.

I. வடகீழ் பசுபிக் மீன் பண்ணை,
II. வடமேல் பசுபிக் மீன் பண்ணை,
III. வடமேல் அத்திலாந்திக் மீன் பண்ணை,
IV. வடகீழ் அத்திலாந்திக் மீன் பண்ணை.

**ஜெயூரன்,**
**மு/விசுவமடு.ம.வி**

## விஞ்ஞான விளக்கம்

# கப்பலின் வேகம் எவ்வாறு அளக்கப்படுகிறது

கப்பல் செல்லும் வேகத்தை 'நொட்'(Knot) என்னும் கடல் துறை நீட்டலளவையால் அளக்கிறார்கள். ஒரு 'நொட்' என்பது ஏறத்தாழ 1850மீ. ஆகும். பழங்காலத்தில் மாலுமிகளுக்குக் கப்பலின் வேகத்தையளக்கக் கருவிகள் இல்லை. அவர்கள் இதற்குப் பெரிய கட்டையைப் பயன்படுத்தினர்

ஒரு பெரிய கட்டையை நீளமான கயிற்றால் கட்டி, கயிற்றின் மறுமுனையைக் கப்பலில் கட்டினர். கப்பல் செல்லும் போது மரக்கட்டையை நீரில் போட்டு, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எவ்வளவு நீளமான கயிறு நீரில் இறங்குகிறது என்பதை வைத்துத் தூரத்தைக் கணக்கிட்டனர். பின்னர் நீளமான கயிற்றில், சமதூரங்களில் முடிச்சுகளைப் (Knots) போட்டு, எத்தனை முடிச்சுகள் நீரில் இறங்குகின்றன என்பதைப் பார்த்து தூரத்தையும், எடுத்துக் கொள்ளும் நேரத்தையும் வைத்து வேகத்தைக் கண்டறிந்தனர். இதனால் முடிச்சு அல்லது நொட் என்பது மணிக்கு எவ்வளவு வேகம் என்பதைக் கணக்கிடும் அலகு ஆயிற்று.

இப்பொழுது, வேகத்தைக் கணக்கிட, அறிவியல் தொழில்நுட்பம் வாய்ந்த கருவிகள் பயன்படுகின்றன. கடலின் தூரத்தை இப்பொழுதும் 'நொட்' அளவு எண்ணிக்கையில் குறிப்பிடுகின்றனர்.

## நகைச்சுவை


**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**



"அம்மா மாடு வாங்க லோன் கேட்டு வந்திருக்கிறீங்களே எப்பிடிக்கட்டுவீங்கள்?"

"முன்னைய மாட்டுக் கயிறு இருக்குது அதைப் போட்டுக் கட்டுவேனுங்க."

# தேடிக்கண்டு பிடியுங்கள்




**எந்தப் பட்டம் யாருடையது.**

## குறுக்கெழுத்துப் போட்டி 24

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | 05 | |
| | 08 | | | | 12 |
| | 14 | | | | |
| 19 | | | | | |
| 25 | | | | | |
| | | 33 | | | |

### இடமிருந்து வலம்

01. சீமெந்து தொழிற்சாலை உள்ள இடம் இறுதிஎழுத்தை இழந்துள்ளது.
08. கல்வித் தெய்வம்.
14. பாம்புக்குப் பகை.
19. திருமால் இறுதி எழுத்தை இழந்துள்ளது.
25. திக்குறி குழம்பி உள்ளது.
33. இல்லை என்பதற்கு எதிரானவை.

### மேலிருந்து கீழ்

01. மாலைக்கு எதிரானது.
02. கேட்பதற்கு இனிமையானது குழம்பி உள்ளது.
05. சூரியன் தலைகீழாக உள்ளது.
12. அற்புதம் குழம்பி உள்ளது.
19. கல்லறை குழம்பி உள்ளது

### குறுக்கெழுத்துப்போட்டி இல.22 இன் விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. தசரதன். | 01. தகப்பன். |
| 07. கத்தி. | 02. சத்தம். |
| 15. கறையான். | 12. நிறைகுடம். |
| 19. பட்டம். | 15. கட்டில் |
| 28. மடம். | |
| 32. பல்லக்கு. | |

### குறுக்கெழுத்துப்போட்டி இல.22 இன் பரிசுக்குரியவர்

**கி.சரிதா, தரம் -10,**
**கொக்குளாய்.அ.த.க.**
**பாடசாலை, புதுக்குடியிருப்பு**

### குறுக்கெழுத்துப்போட்டி இல.22 இன் பாராட்டுக்குரியவர்கள்.

01. இ.யசோதன், மறவன்புலோ வடக்கு, சாவகச்சேரி.
02. யோ.யூட்வின்சன், தரம் -7 கிளி/இந்துக்கல்லூரி.
03. வ. துசித்தா, இல.39குருமன்காடு, வவுனியா.
04. மா.தயாநிதி, பாலிநகர், வவுனிக்குளம்.
05. ப.ஜசி,கரியாலை நாகபடுவான், முழங்காவில்.

இளையவர்களே! ☞
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.24
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

# ஏன் இந்த உலக தரிசனம்?

சிங்கள கவிஞன் ஒருவரின் ''ஜோர்ஜ் புஷ்ஷிற்கு'' எனும் தலைப்பிலான கவிதை வரிகள் இவை.

*ஜோர்ஜ் புஷ்,*
*இதோ*
*சிவப்பு நீல கோடுகளாலும்*
*நட்சத்திரங்களாலுமான தட்டில்*
*என்னுடைய பச்சிளங் குழந்தையைப்*
*படைக்கின்றேன்*
*கடும் பசி கொண்ட*
*அன்பிற்குரிய*
*அமெரிக்கர்களே*
*இதனை*
*மைக்ரோவேவ்*
*குண்டுகளால்*
*சமைத்து உண்ணுங்கள்*
*சமைப்பதற்கு*
*முன்பு ஒரு புட்டிப்*
*பால் பருகுங்கள்*
*சுவை சற்று அதிகமாகும்*
*நெருப்பில் சுட்டு உண்ணுவது*
*காட்டு மிராண்டித் தனமாதலால்*
*சமைத்து உண்பதே நாகரீகம்...*



என்று நீள்கிறது அந்தக் கவிதை அமெரிக்காவைப் பற்றிய ஏகோபித்த மனவெழிச்சி அடி மனதிலிருந்து வெளிப்படும் எண்ணக்கரு பல்வேறு மொழி மனங்களிலும் இவ்வாறு தான் ஆழப்பதிந்துள்ளது.

போரியல் மோகத்தில் நீண்ட இடை வெளிக்குப் பின் இடம் பெற்ற பாரிய போர் வளைகுடாப் போர். இப்போரை ஆரம்பிப்பதற்கு முன்பு போருக்கான முஸ்தீபுகள் மேற்கொண்ட போது உலகின் கண்களெல்லாம் போர் பற்றிய தொடர் நடவடிக்கையினை அவதானிப்பதிலேயே இருந்தது. போர் விமானங்கள் தயாரடுத்தல், போர்க் கப்பல்கள் கடலெல்லைகளில் நிறுத்துதல் போன்ற நடவடிக்கைகள் என்பவற்றை உதைபந்தாட்ட போட்டியில் கோல் இறக்கும் தறுவாயில் ஏற்படுகின்ற உணர்வோடு உலகம் பார்த்தது. இறுதியில் போர் நடந்தது. உயிரழிவுகளும் சொத்தழிவுகளும் திட்டமிட்டவாறு ஏற்பட்டே முடிந்தது.

இப்போரின் பின் வீரமாக போராடிய பல அமெரிக்க அங்கவீனமான படையினர் தங்களது நோய்களை கூட கவனிக்க முடியாத நிலையில் சொந்த அரசாலேயே கைவிடப்பட்ட நிலையில் நொந்து போயுள்ளனர். இது வளைகுடாப் போரில் ஈடுபட்ட படைகள் மட்டுமல்ல வியட்னாம் போரில் ஈடுபட்ட படைகளும் இதனுள் அடங்குவர். இவர்கள் மட்டுமல்ல இவர்கள் உட்பட 35 மில்லியன் மக்களும் அமெரிக்க நாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றார்கள்.

இது இவ்வாறிருக்க 1890ஆம் ஆண்டு தொடக்கம் 1999வரையான காலப்பகுதி வரை 128 நாடுகளுடன் அமெரிக்கா போர்புரிந்துள்ளது. செப்ரம்பர் 11. பின்லாடனின் தாக்குதலின் பின் அல்கொய்தா அமைப்பின் மீதான தாக்குதல் சமீபத்திய ஈராக் மீதான தாக்குதல்களும் சேர்ப்பின் இது இன்னும் அதிகம்.

ஈராக்கில் போர் தொடங்குவதற்கு முன்பு ஈராக் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடையினால் ஈராக்கிய பச்சிளம் குழந்தைகள் கூட அத்தியாவசியமான பொருள்கள் இன்றியும், மருந்துகள் இன்றியும் செத்து மடிந்தது.

ஆனால் உலகில் அதிகூடியளவு போருக்காக செலவிடும் நாடும் அமெரிக்காதான் ரஷ்யாவை விட ஆறுமடங்கு அதிகமாக போருக் காகவே செலவிடும் அமெரிக்காவின்,நடப் பாண்டிற்கான இராணுவ பட்ஜெட் 369.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாம்.

சமீபத்தீய ஈராக்கிய போரின் பின் இயல்பு வாழ்வையே இழந்து சின்னாபின்னமாகிப்போயுள்ள நிலையில் ஈராக்கிய மக்கள் இன்று ஏனோ தானோ வென்று வாழ வேண்டிய நிலைக்கு அமெரிக்கா வால் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ஈராக்மீதான போரின் பின்பும் அமெரிக்காவின் போருக்கான அல்லது உலக நாடுகளை தன்வசப்படுத்தலுக்கான முயற்சி தொடர்ந்த வண்ணமே உள்ளது.

ஏனென்றால் ஈராக் போரின் பின்னான அமெரிக்காவின் அசைவுகள் இவ்வாறு சிந்திக்கத் தூண்டு கோளாய் அமைந்துவிட்டது. சென்ற மாதப்பகுதிகளில் அமெரிக் காவின் உலக நாடுகளுக்கான பரவலான விஜயங்கள் பரபரப்பாக அவதானிக்க வேண்டிய விடயமாகவும் மாறியுள்ளது. இராஜதந்திர நகர்வுகள் முடுக்கிவிடப் பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாக தென்னாசியா விற்கான விஜயமொன்றை அமெரிக்க பிரதிராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேஜ் மேற் கொள்ள, மறு கட்டமாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் மத்திய கிழக்கிற்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இவை ஒரு புறம் நடக்க மறுபுறத்தில் அமெரிக்காவின் ஆசிய பிராந்தியங்களுக்கான வெளி நாட்டமைச்சர் கிறிஸ்டினா றொக்கா இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சிறிலங்கா, ஏன் யாழ்ப்பாணத்திற்கும் விஜயமொன்றை மேற்கொண்டார். இவ்வாறான விஜயங்களின் போது அமெரிக்க பாதுகாப்புத்துறை செயலாளர் றொனால்ட் ரம்ஸ்பீல்டும் முக்கிய பங்கை வகித்துள்ளார்.



இவ்வாறு ரிச்சட் ஆர்மிரேஜின் தென்னி னாசிய விஜயத்தின் போது. இந்திய பாகிஸ் தான் பாதுகாப்புதுறை அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இவ்விரு நாடுகளுக் கிடையில் இருக்கும் பிணக்கினைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தம் வகிக்கும் எண்ணம் இல்லை என்றும் ஆர்மிரேஜ் ஊடகமொன்றிற்கு வழங்கியுள்ள செவ்வியில் தெரிவித்துள்ளார்.

கொலின் பவல் மேற்கொண்ட விஜயத்தின் போது இஸ்ரேல் பாலஸ்தீன ஆகிய அவ்விரு நாடுகளுக்கிடையில் உள்ள பிணக்கினைத் தீர்க்க முயன்றுள்ளாராம்.

அடுத்ததாக கிறிஸ்டினா றொக்கா மேற் கொண்ட விஜயத்தின் போது ஆசிய நாடு களோடு சிறிலங்காவிற்கும் குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கும் தனது விஜயத்தை மேற்கொண்டுள்ளார். இதற்கு முன்னரும் கிறிஸ்டினாறொக்கா யாழ்ப்பாணம விஜயம் செய்த போது பலாலிப் பகுதியை உன்னிப் பாக அவதானித்து தனக்குள் உள்வாங்கப்பட்டிருப் பதானது குறிப்பிடத்தக்கது.

இந்த விஜயங்களின் போது கொலின் பவல் சிரியாவுக்கும் சென்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் பாரூக் அப் ஷாராவை சந்தித்தும் கலந்துரையாடியுள்ளார் ஈராக்கிற்கு அடுத்ததாக அமெரிக்காவின் இலக்கு சிரியா மீது இருந்தமையும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதே.

இதனை விட சென்ற வாரம் சிறிலங்காவின் அமெரிக்க தூதரக அதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டு பல பகுதிகளுக்கு சென்று பல விடயங்களை தங்களது அவதானத்திற்கு உள்வாங்கியிருக் கின்றனர்.

இந்த விஜயங்கள் அனைத்தும் ஈராக் மீதான யுத்தத்திற்கு பின்பு இடம் பெற்றுள்ள இராஜதந்திர நகர்வுகள்.

இவ்வாறான நகர்வுகளின் பின்னணி என்ன? உலக நாடுகள் சிலவற்றின் மீதான தாக்குதல் முன்னேற்பாடா? அல்லது உலக நாடுகளை தனது பிடிக்குள் வைத்திருப்பதற்கான உளவு நகர்வா? அல்லது உண்மையான அமைதிக்கான விஜயமா?

**எஸ்.வீ.ஆர்.கஜன்**

எது எவ்வாறாயினும் ஒன்றை மட்டும் உறுதியாக கூற முடியும் "சோழியன் குடுமி சும்மா ஆடாது"

மீண்டும் அந்த சிங்கள கவிஞனின் கவிதையின் இறுதி வரிகள் நினைவுக்கு வருகின்றது.

*குழந்தையின் ஈரலிலிருந்து*
*அருமையான கறி ஒன்று சமைக்கலாம்*
*இந்த எலும்புகள்*
*முள்ளு சூப்புக்கு நன்றாய் இருக்கும்*
*பொரித்த மூளை*
*கடிப்பதற்கு நன்று*
*ஆனால்*
*அதனுடைய இதயத்தை பற்றி மட்டும்*
*நீங்கள் கவனமாய் இருக்க வேண்டும்*
*அங்கே*
*புற்று நோய்க்குரிய யுரேனியம்*
*இருக்கலாம்*

## பன்முகம் - 23

# அரங்க நடிகன்



1997 - 1998 ஆம் ஆண்டுகளில் தமிழகம் சென்று படிப்பதற்கான ஒரு வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. இதற்கான புலமைப் பரிசிலுக்கு உதவியவர் இன்றைய மட்டு நகர் திருமலை ஆயரும், அன்றைய யாழ் ஆயரின் செயலாளருமாக இருந்த அருள்திரு. கிங்சிலி சுவாம்பிள்ளை அவர்கள், வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்கான பயிற்சிகளைப் பெறச்சென்ற எனக்கு திண்டுக்கல்லில் உள்ள காந்தி கிராமம் கிராமிய பல்கலைக்கழகத்தில் புதுடில்லி தேசிய அரங்கக்கல்லூரியால் கொடுக்கப்பட்ட மூன்று மாததீவிர அரங்கப் பயிற்சியில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டியது.

கேரளாவில் இருந்து திரைப்பட உப நடிகர்கள் மற்றும் தமிழகம், கேரள அரங்க நடிகர்கள் இன்னும் பாடசாலை ஆசிரியர்கள் என பல்வேறு தகைமையில் உள்ளவர்கள் இப்பயிற்சியைப்பெறுவதற்காக தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். எனது அரங்க அனுபவங்கள், தமிழகத்துக்கு நான் சென்றிருந்த நோக்கம், அத்துடன் நான் ஒரு வெளிநாட்டுக்காரன் என்ற காரணங்களுக்காக எனக்கும் முன்னுரிமை கொடுத்து என்னையும் வரச் செய்திருந்தனர்.

தேசிய அரங்கக்கல்லூரியின் அதிபரும் திரைப்பட இயக்குநருமான திரு.பி.வி.கரந் அரங்கக்கல்லூரியின் விரிவுரையாளர்களான பன்சிக்கவுஸ் (காஷ்மீர்) ஜமீல் அகமட் (பங்களாதேஷ்) காலிகட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் இராமனுஜன் போன்றவர்கள் பிரதான விரிவுரையாளர்களாகவும். இத்துறைசார்ந்த இன்னும் பலர் பகுதி நேர விரிவுரையாளர்களாகவும் பயிற்சியாளர்களாகவும் வந்துசென்றனர்.

இந்தப் பயிற்சிக்காலத்தில் நான் பெற்ற இரண்டு அனுபவங்கள் என் மனதில் நிரந்தரமாகவே இடம் பிடித்துக்கொண்டன. ஒரு அரங்க நடிகன் எத்தகைய உன்னதமானவன் என்பதை எனக்கு வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன.

ஒரு கவிதையை, சிறுகதையை அரங்க ஊடகமாக்குதல் பயிற்சியின் போது எமது குழுவினருக்கு தி.ஜானகிராமனின் "அக்பர் சாஸ்திரி" சிறுகதை வழங்கப்பட்டது. அதில் பிரதான பாத்திரமான அட்வொக்கேற் அக்பர் சாஸ்திரியாகநான் நடிப்பதற்கு பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தேன். எமது பயிற்சி நடைபெறும் இடத்துக்கு விரிவுரையாளர் ஜமால் அகமட்வந்தார். என்னை அழைத்தார். அவர் என்னிடம் நான் நடிக்கும் பாத்திரம் பற்றிய வினாக்களைக் கேட்டார்.

உங்கள் பெயர்? பதவி?வயது?சமயம்?படிப்பு? திருமணமானவரா? எத்தனை பிள்ளைகள்? உங்களுக்குப் பிடித்தமான சாப்பாடு? உங்களுக்கு பிடித்தமான உடை? உங்களுக்குப் பிடித்தமான பொழுதுபோக்கு? உங்களுக்குப் பிடித்தமான நண்பர்? உங்களிடமுள்ள விசேட குணங்கள்? உங்களுக்குப் பிடிக்காதவை? உங்கள் ஊர்? உங்கள் சகோதரர்? உங்கள் வீட்டுச் சூழல்.... இப்படியே தொடர்ச்சியான பல கேள்விகள். என்னால் சில வினாக்களுக்கு மட்டுமே பதில் கூற முடிந்தது. பெரும்பாலானவைக்குப் பதில் கூற முடியவில்லை. என்னைச் சுற்றிவர சகமாணவர்கள் நான் பதில் கூறமுடியாமல் திணறுவதைப்பார்த்து ஏளனம் செய்வதுபோன்ற உணர்வு எனக்குள். இவர் என்னை வேண்டுமென்றே அவமதிக்கின்றார் என்று எனக்குத் தோன்றியது. அதிலும் என்னிலும் வயதில் குறைந்தவரான ஒருவர் என்னிடம் இப்படியெல்லாம் கேட்டு அவமதிப்பதை சகிக்க முடியாமல் இருந்தது. எனவே நான் அவர் வினாக்களுக்கு விடை கூறுவதை நிறுத்திக்கொண்டேன். அவரோ என்னை விடுவதாயில்லை என்பொறுமை எல்லைகடக்கவே "நான் உங்கள் வினாக்களுக்குப் பதில் சொல்ல விரும்பவில்லை நீங்கள் என்னை வேண்டுமென்றே அவமதிப்பதற்காக நான் பதில் சொல்ல முடியாத, தேவையற்ற கேள்விகளைக் கேட்கிறீர்கள்" என்றேன்.

எனக்குவந்த கோபத்தைக் கண்டு அவர் சிரித்தார். பிறகு பரிவுடன் கூறினார். "நீங்கள் கோபிக்கக்கூடாது ஒரு நடிகன் தான் ஏற்று நடிக்கும் பாத்திரத்தை உணர்வு பூர்வமாக நடிப்பதற்கு அப்பாத்திரத்தின் எல்லாப்பக்கங்களையும் தெரிந்துவைத்திருக்கவேண்டும். எங்கள் நாட்டில் தனது மேடை அனுபவத்தைவைத்து எல்லாப்பாத்திரங்களையும் தானாக மாற்றி நடித்து அப்பாத்திரத்தைக் கொலைசெய்து விடுவார்கள். ஆனால் நடிகன் பாத்திரமாக மாறவேண்டி அப்பாத்திரம் பற்றிய இத்தகைய வினாக்களுக்கு விடைகளையும் தெரிந்துவைத்திருக்கவேண்டும். வெளிநாடுகளில் நடிகர்கள் அப்பாத்திரங்களை அறிந்துகொள்வதற்கு மிகவும் செலவு செய்து படிப்பார்கள். எம்நாடுகளில் எமக்கு எல்லாம் தெரியும் என்று ஏற்கும் பாத்திரத்தையே தாமாக மாற்றி விடுவார்கள். "இது உங்களுக்கு நல்ல அனுபவம். அதற்காகவே இக்கேள்விகளைக் கேட்டேன்" என்றார். அவரது அந்த விளக்கத்தின் பின்னர் நான் எனது அறியாமைக்காக வருந்தி மன்னிப்புக்கேட்டுக்கொண்டேன்.

இரண்டாவது நிகழ்வு, எமக்குப்பயிற்சி முடிந்து சான்றிதழ் வழங்க யாரை அழைப்பது என்று எம்முடன் விரிவுரையாளர் பன்சிக்கவுஸ் ஆலோசித்த போது எம்மில் சிலர் அன்றைய முதலமைச்சரும், நடிகருமான திரு.எம்.ஜீ.ஆரை அழைப்போமென்றனர். உடனே அந்த காஷ்மீர் காரனின் முகம் கன்றிச்சிவந்தது. "ஒரு அரங்க நடிகனுக்கு சான்றிதழ் வழங்கும் தகைமை ஒரு சினிமா நடிகனுக்கோ, அரசியல் வாதிக்கோ இல்லை. ஏனெனில் சுய அர்ப்பணிப்புடன், கணத்துக்கு கணம் தன் உணர்வுகளை மாற்றி நடிக்கும் அரங்க நடிகன் இவர்களைவிட மிகவும் சிறந்த கலைஞன்" என்று கூறிய அவர் யாரோ ஒரு வயது சென்ற தெருக்கூத்து அண்ணாவியாரை ஒரு கிராமத்தில் இருந்து தெரிவுசெய்து அவர் மூலம் எமக்கு சான்றிதழ்களை வழங்கச்செய்தார். இச்சம்பவங்கள் ஒரு அரங்க நடிகனின் மேன்மையை எனக்கு அடிக்கடி நினைவு படுத்தும் நிகழ்வுகளாகவே ஊடுருவி நிற்கின்றன.


**நாவண்ணன்**

உழைக்காமல் ஒய்வு எய்த இயலாது; போரிடாமல், வெற்றியை ஈட்ட இயலாது. - தாமஸ் ஏ கெம்பிஸ்

# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அன்னதான சபை (வரையுள்ளது)

ஆரம்பம்-1960

## விசேட அறிவித்தல்



"Amuthasurabhi"
A/c No.1247985001
Commercial Bank
180/1/31,People's park,
Shopping Complex,
Colombo-11,

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் திருவருளினால் **1960** ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அன்னதான சபை அமுதசுரபி என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்குச் சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்துவருகின்றது. இவ்வாண்டுடன் **44** ஆவது ஆண்டில் பிரவேசிக்கின்றோம்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச்சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும் அமுதசுரபி மண்டபத்திற்கு வந்து பணி செய்யும் அடியார்களுக்கும், தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும், அன்னதானத் தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெற, பணம், பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தருமசீலருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையினரின் மனமுவந்த பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாண்டு ஆனி 14 ஆம் நாள் 29.06.2003 ஞாயிற்றுக்கிழமை அம்பாளின் மகோற்சவம் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி 08.07.2003 செவ்வாய்க்கிழமை மஞ்சத் திருவிழாவும், 12.07.2003 சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், 13.07.2003 ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும், 14.07.2003 திங்கட்கிழமை பூங்காவனமும் நடைபெற இருப்பதால் அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் பதினாறு (16) நாட்களும் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானம் செய்துள்ளது. ஆகவே தருமசீலர்களாகிய தங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப்பெற்ற உத்தம தொண்டர்கள் வருவார்கள். அவர்களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம்,பொருள் முதலியவற்றைக் கொடுத்துச் சபையின் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். மேலும் பணம் அனுப்ப விரும்பும் அடியார்கள் மேற்கூறப்பட்ட வங்கிக் கணக்கிற்கும், பணத்தை அனுப்பலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**முக்கிய குறிப்பு-** இவ்வாண்டு அமுதசுரபி புதிய மண்டபத்தில் இந்து அறநெறிப் பாடசாலையும் இந்து கலாச்சார நூலகமும் **18.03.2003** இல் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

**மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் அண்ணலார்**
**அயார் தமை அமுது செய்வித்தல்**

— நன்றி —

தொடர்புகளுக்கு:-
த.சிவானந்தன்
தலைவர்
"சாஸ்தாஹ"
133,5ஆம் குறுக்குத் தெரு.
கொழும்பு-11
தொ.பே: 094-1-438991, 384757


கு.சாந்தலிங்கம்
செயலாளர்
அமுதசுரபி மண்டபம்
நயினாதீவு-02

கு.சிறிஸ்காந்தராசா
பொருளாளர்
மிக்மிலன் புத்தகசாலை
195,Olcott Mawatha,
Colombo-11
T.P.449565

(சி-7967)


## உங்கள் வாகனங்களை சரியான முறையில் சேர்விஸ் செய்திட
## ELGI வாகன சுத்திகரிப்பு இயந்திர சாதனங்கள்

நீண்ட கால பாவனைக்குரியவை தர உத்தரவாதம் கொண்டது




**"ELGI"பாரம் தூக்கிகள்**
**(HYDROLIC HOIST)**

4 தொன் — 4,000 Kg
8 தொன் — 8,000 Kg
16 தொன் — 16,000 Kg

**காற்று தாங்கிகள்**
**(AIR COMPRESSORS)**

500 Lit
420 Lit
300 Lit

**வாகனம்**
**கழுவும் இயந்திரங்கள்**
**(VEHICLE WASHING PUMPS)**

**கிறீஸ்**
**அடிக்கும் இயந்திரங்கள்.**
**(GRBASE PUMPS)**

**இவை தவிர:-**

- இரண்டு சக்கர வாகனங்களுக்கான (மோட்டார் சைக்கிள்) தனியான பாரம் தூக்கிகள்
- மூன்று சக்கர வாகனங்களுக்கான (ஆட்டோ) தனியான பாரம் தூக்கிகள்.

உலகத் தரம் வாய்ந்த உறுதியான **ELGI** சுத்திகரிப்பு சாதனங்களின்
உதவியுடன் உங்கள் வாகனங்களை இலகுவாக சேர்விஸ் செய்யுங்கள்.

✪ 75 வருடகால பொறியியல் அனுபவத்துடன் கூடிய விற்பனைக்கு பின்சேவை.

✪ தாராள உதிரிப்பாகங்களின் கிடைப்பனவு

✪ உத்தரவாதத்துடன் கூடிய சேவை

சகல விதமான கட்டட நிர்மாண வேலைகளும் எம்மால் மேற்கொள்ளப்படும்.
(இலங்கையில் **Mi-1** தரத்தில் உள்ள ஒரேயொரு தமிழ் நிறுவனம்)

(3316)

**விபரங்களுக்கு**
**நீங்கள் நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஒரே இடம்**

Since 1922

## சாமுவேல் சன்ஸ் அன் கம்பனி லிமிட்டெட்

412, 414, ஆஸ்பத்திரி வீதி(பஸ்நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்

தொலைபேசி-
021-222665



# வரலாறு தந்த துயரம்

## ஈராக்கிய குடிமகனின் வாக்குமூலம் - 04

அங்கு நீதிமன்றங்கள், பொலிஸ் என்று எதுவுமில்லையா? ஒரு நாட்டின் சமூகக் குற்றங்களை எப்படிக்கையாள்வது.

இந்தக் கேள்விக்குக்கிடைத்த பதிலோ தலையைப் பிய்த்துக்கொள்ளும் ஆச்சரியத்தைத் தந்தது.

*"அவையெல்லாம் மிகநேர்த்தியாக நடக்கின்றன. பொலிசோ நீதிமன்றமோ அல்லது வங்கிகள் ஏனைய அரச அலுவலகங்களோ எதுவானாலும் சரி நான் போன மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும் போது எங்கள் நாட்டில் அவை யெல்லாம் நேர்த்தியாகத்தான் இயங்குகின்றன. உங்களுக்குத் தெரியுமா அங்கே எந்த அரச அதிகாரியும் லஞ்சம் வாங்க முடியாது.அதற்கான கட்டுப்பாடுகள், கண்காணிப்புகள் மிகக்கடுமையாக கடைப்பிடிக் கப்படுகின்றன."*



"அரச அதிகாரிகளுடன் உங்களுக்குச் செல்வாக்கு இருப்பதாகச் சொன்னீர்களே அது எப்படி?" நான் கேட்டேன்.

சிரித்துவிட்டு என்னைப் பார்த்தார். *"ஏன் கேட்கிறீர்கள்"*

"சும்மா ஆர்வத்தில்"

*"நான்பல நாடுகளுக்கும் சுத்தித்திரிபவன். எனது தொழில் அப்படி. இது மிகச்சிலருக்கே உள்ள வாய்ப்புத்தான். உங்களுக்குத் தெரியும் ஈராக்கிற்குள் எந்தச் சாமான்களையும் கொண்டு செல்ல அமெரிக்கர்கள் தடைபோட்டிருக் கிறார்கள். எலக்ரோனிக் சாமன்கள் உள்ளே கொண்டு சென்றால் ஈராக்கில் அதன் கிராக்கி மிக அதிகம். அரசாங்க அலுவலகர்களுக்கு நட்போடு அவர்கள் வீட்டிற்குச் செல்லும்போது இப்படியான பொருட்களை அன்பாகக் கொடுப் பேன். நட்பு மேலும் பலப்பட்டுவிடும். இது என்ன லஞ்சமா?"* என்றார் சிரித்துக்கொண்டு.

"இல்லை ஒருபோதும் கிடையாது" என்றேன் சிரித்தவாறே.

'வேறுநாடுகளுக்குப் போய் இருக்கக் கூடிய வாய்ப்பிருந்தும், ஏன் நீங்கள் சதாமின் ஆட்சிக்குள் சிறைப்பட்டீர்கள்?' இது என்னிடமிருந்த முக்கியமான கேள்வி. நான் இதை முன்னரே அவரிடம் கேட்டு விடத்துடித்தேன். இதுகுறித்து எனக்கு மிகவும் குழப்பமாகவும் இருந்தது. இந்தக் கேள்விக்கு அவர் தந்த பதிலில் நான் அடைந்த முரணான அதிர்ச்சியை இதோ உங்களுக்கும் தந்து விடுகின்றேன்.

*"சிறைப்பட்டிருந்தோம் என்று ஏன் சொல்லுகிறீர்கள்.அங்கு எங்களுக்கு நிறைய சுதந்திரம் இருக்கிறது, வசதிகளும் இருக்கின்றன. மற்றைய அரபு நாடுகளைவிடவும் அங்கு பொது வசதிகளும் தனிமனித சுதந்திரத்துக்கும் வாய்ப்புகள் அதிகம். அதைவிட அது எங்களுடைய மண் இன்னொரு மண்ணில் போய் எங்களுடைய வாழ்வை ஓட்டிக்கொள்வது கஷ்ரமாக இருக்கும். அப்படி வாழமுடியாது இல்லையா?"* என்கிறார்.

கதைத்துக் கொண்டிருக் கும் போது அவரது ஒரே ஒரு மகன் றிச்சட் வந்தான். நான் அழைக்கவும் மிகவும் ஒட்டுறவோடு வந்து மடியில் இருந்து கொண்டான். தலையில் ஈரமாக இருந்தது. ஏன் தலை துடைக்கவில்லையா? என்று தகப்பனிடம் கேட்டேன்? றிச்சட் தகப்பனிடம் நான் என்ன கேட்கிறேன் என்று ஈராக் மொழியில் கேட்டறிந்து கொண்டான். அவர் சொன்னார்

*"ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை 'பைப்'பில் போய் தண்ணியை கையில் அள்ளி தலையில் வாத்துக்கொள்கிறான்."*

"காய்ச்சல் தடிமன் வருவதில்லையா" என்று கேட்டேன்

"*இல்லை*" என்றார்.

"ஏன் உங்கள் நாடும் இங்கு போன்று உஷ்ணமாகத்தானே இருக்கும்?"

*"இதைவிட மிக அதிகம். அங்கே எல்லா அலுவலகங்களும் ஏ.சி தான். வீட்டிலும் ஏ.சி தான். இவரை நான் வெளியில் இறங்கவே அனுமதிப்பதில்லை."*

"உங்களுடைய உரையாடல்கள் எனக்கு மிகவும் வியப்பாகவும் ஆர்வமாகவும் இருக்கிறது என்று மெய்யாகவே எனது உணர்வைச் சொன்னேன்."

'*ஆ...உண்மையாகவா*" என்றார்.

இப்படியெல்லாம் நிர்வாகத்தை நடத்துவதற்கு சதாமுக்கு ஒரு ஆதரவு சக்தியில்லாமல் செய்துவிடமுடியுமா? இது அவர் என்னுடன் உரையாடிக்கொண்டிருக்கும் போது என்னுள் எழுந்த கேள்வி; கேட்டேன்.

*"பக்தாத்நகரில் இருபத்தைந்திற்கும் ஐம்பது வீதத்திற்கும் இடையானவர்களின் ஆதரவு அவருக்கு உண்டு. அங்கு எந்தப் பக்கம் திரும்பினாலும் சதாம்ஹுசைனின் கட்டவுட்களைத் தான் காணலாம். 1991 குவைத் சண்டைக்கு முன்புவரை அவருக்கு ஓரளவு பரவலான ஆதரவு இருந்ததுதான். ஈரானுடனான யுத்தம் ஈராக்கில் அவருக்கு*



*அங்கீகாரத்தைப் பெற்றுத்தந்தது. அவரால் தான் ஈராக் அன்று மரியாதையுடன் இருந்தது. அவரொரு வீரன். அன்று அமெரிக்கா மறைமுகமாக ஈரானுக்கு உதவாமல் விட்டிருந்தால் யுத்தத்தில் எப்பவோ நாங்கள் வென்றிருப்போம். சதாமால் நிச்சயமாக அது முடியும்."*

இப்படிக் கூறும் போது அவர் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராக இருந்தார்.

நானோ புரிந்துகொள்ளமுடியாத ஆச்சரியம் மிக்க தகவல்களால் நிறைந்து கொண்டிருந்தேன்.

ஈராக்கியர்களின் தேசப்பற்றுறுதி என்பது வேறு. சதாம் மீது அவர்களின் வெறுப்பென்பது வேறு. இரண்டும் இணையும் போது இவற்றிற்கிடையில் ஏற்படும் சமரசம் என்பது வேறு. இப்படி எனக்குள் எண்ணினேன்.

'குவைத் யுத்தத்தின் பின் எப்படி அவரது ஆதரவு மோசமாகச் சரிந்தது.?' இது நான் கேட்கவேண்டிய கேள்வியல்லவா; கேட்டேன்.

(அடுத்தவாரமும் வரும்)

பிரவீன்

---

# நேர்நோக்கு

## சமாதானத்துக்கு ஆதரவானவையல்ல

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி க்குமிடையே புரிந்துணர்வு உடன்பாடொன்றை ஏற்படுத்தி ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைத்து தேர்தலொன்றில் போட்டியிட்டு வெற்றியீட்டி ஆட்சியைக்கைப் பற்றும் கனவில் அவ்விரு கட்சிகளும் உள்ளன. ஆனால் இதற்கு வேறு என்னென்ன முட்டுக் கட்டைகள் உள்ளன என்பது குறித்து சரியான தகவல்கள் வெளிவராவிட்டாலும் இனப் பிரச்சினைக்கு தீர் வொன்றை முன்வைப்பது தொடர்பாக பிரதான முரண்பாடு காணப்படு வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முரண்பாடு குறித்து மேலும் தெரிய வருவதாவது. 1999ஆம் ஆண்டில் சந்திரிகா அரசாங்கம் பாராளு மன்றத்தில் பிரேரணையாகச் சமர்ப்பித்த தீர்வுத் திட்டத்தை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைக்கிறது.

இந்தத் தீர்வுத்திட்டமானது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது ஆட்சிக்காலத்தின் முற் பகுதியில் முன்வைத்த தீர்வுப் பொதியின் சிதைவடைந்த ஒரு வடிவமாகும். இதுகுறித்து அவர் 99 ஆம் ஆண்டுக்குப் பின் பிரஸ் தாபிப்பதை கைவிட்டிருந்தார்.

ஆனால் இன்று சமாதான முயற்சிகளுக்கு எதிரான அவரது செயற் பாட்டை நியாயப்படுத்த மீண்டும் கையிலெடுத்துக் கொண் டுள்ளார். அதாவது முன்னர் தமது "சமாதானத்துக்கான யுத்தத்தை" நியாயப்படுத்த முன்வைத்த தீர்வுப் பொதியை இன்று சமாதானத்திற்கு எதிரான தனது நடவடிக்கை களுக்கு வலுச்சேர்க்க பயன்படுத்த முனை கின்றார்.

இத்தீர்வுப் பொதியை என்றோ தமிழர் தரப்பு நிராகரித்து விட்டது. அதுமட்டு மல்லாது பொது சனஐக்கிய முன்னணிக்குள் பல மட்டங்களிலும் எழுந்த எதிர்ப்புகள் காரணமாகவே அவரால் அதனைப் பாராளுமன்றத்தில் சட்டமாக்க முடியாது போனது.

எதுவித முன்னேற்ற கரமான அம்சங்களுமில்லாத இந்தத் தீர்வுத் திட்டத்தைக் கூட ஏற்க ஜே.வி.பி. தயாராக இல்லை அப்படியானால் ஜே.வி.பி. இந்தப் பிரச்சினைக்கு தீர்வாக எதனை முன்வைக்கிறது?

ஜே.வி.பி.யைப் பொறுத்த வரை எந்தப்பிரிவினருக்கும் என விசேட சலுகைகள் வழங்கும் தீர்வு எதனையும் முன்வைக்கக் கூடாது என்பதே அதன் நிலைப்பாடாகும்.

இது வடக்கு கிழக்கிற்கு எதுவித அதிகாரப் பங்கீட்டை அல்லது அதிகாரப் பரவலாக் கலைக் கூட முற்றாக நிராகரிக்கும் ஒன்றாகும்

கொள்கை ரீதியாகப்பார்க் கும்போது எந்த வொரு பிரி வினருக் கும் விசேட சலுகைகள் வழங்கப் படக் கூடாது என்பது நியாயமான ஒன்றாகக் கூடத் தென்படலாம். ஆனால் நடைமுறை ரீதியில் இலங்கையில் வாழும் சிங்களமக் கள் அனுபவிக்கும் உரிமைகளை ஏனைய மக்கள் அனுபவிக்கின்றார் களா? என்ற கேள்வி எழும் போது தான் ஜே.வி.பி.யின் இந்தக் கொள் கையிலுள்ள நயவஞ்சகத்தன்மை புலப்படும்

அவ்வாறாயின் சிங்கள மொழிக்கும், பௌத்தத்திற்கும் அரசியலமைப்பு ரீதியாக வழங்கப் பட்டுள்ள முதன்மையை இல்லா தொழித்து இலங்கையில் வாழும் சகல இன மொழி, மதங்களுக்கும் அரசியலமைப்பு ரீதியாக சம உரிமை வழங்குவதற்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்குமா? அல்லது அதற்காகப் போராட ஜே.வி.பி. முன்வருமா?

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள் என்றுமே தமக்கு விசேட சலுகைகள் அல்லது ஏனைய இனங்கள் அனுபவிக்கும் உரிமை களுக்கு மேலாக என்றுமே கோரிய தில்லை. ஆனால் அவர் களின் உரிமைகள் பெரும்பான்மையினத் தால் அல்லது ஆட்சியாளர்களால் பறிக்கப்பட்ட போது தான் அவர்கள் பிரிந்து போவது பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டார்கள்.

தமது உரிமைகளைக் கேட்டு போராடியபோது வன்முறை மூலம் அதனை ஒடுக்கமுற்பட்ட போது தான் அவர் ஆயுதமேந்திப் போராடி தம்மீதான வன்முறை களுக்குப்பதிலடி வழங்கி அவற்றை முறியடித்தார்கள்.

இன்றும் கூட ஆட்சி யதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இனவாத நடவடிக்கைகளில் இரு பிரதான கட்சிகளும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. மூன்றாவது பிரதான கட்சியாகவும். ஆட்சி பீட மேறும் கனவுடனும் இருக்கும் ஜே.வி.பி கூட இவற்றுக்குச் சற்றும் சளைக்காத வகையில் இனவாதச் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டுவரு கின்றது.

சிறிலங்கா மீளமுடியாத பொருளாதார நெருக்கடியி லிருந்து மீள்வதாயின் சமாதானம் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதே ஒரேவழி என அனை வராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்ட நிலையிலும் கூட இவர்கள் தமது செயற்பாடுகளிலிருந்து மாறிக் கொள்வதாக இல்லை.

அதேவேளை 1987 இல் சமாதானம் செய்யப் போவதாக கூறிக் கொண்டுவந்த இந்தியாவை மூர்க்கத் தனமாக எதிர்த்த ஜே.வி.பி இன்று இந்தியாவுடன் இணக்கப் போக்கைக் கடைப்பிடிக் கிறது. அனால் இன்று சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் நோர்வேயை காரசாரமாக விமர்சிக் கிறது.

இவ்வாறான நடவடிக் கைகள் எல்லாம் தமிழ் மக்களைப் பொறுத்து புதுமையானவை யல்ல. ஏனெனில் சமாதான முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் மீதல்ல சமாதான நடவடிக்கைகள் மீதே இச் சிங்களக் கட்சிகளுக்குப் பகமையுணர்வு உள்ளது என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை என்றோ புரிந்து கொண்ட விடயமாகும்.

அதேவேளை இன்று ஆளும் கட்சி யென்றாலென்ன எதிர்க்கட்சிகளென்றால் என்ன அவர்களின் நடவடிக்கைகள் சமாதானம் நோக்கியதாக அமைய வில்லை.என்பதும் வெளிப்படை யானதாகும்.

# இங்கும் நிஷா ஷர்மாக்கள் தேவை

**எங்கள் மண்ணிலும் சீதனத்தை சட்டம் போட்டு தடுக்கும் முயற்சி நடந்தது. ஆனாலும் அதுவெற்றி பெறவில்லை. என்னதான் பெண் விடுதலை என்று பேசினாலும் சீதனம் கொடுக்கும் பெண்களும் வாங்க நினைக்கும் ஆண்களும் தாமாக முன்வந்தால் ஒழிய, இதனை ஒழிக்கமுடியாது.**

வின்சென்ற் புளோறன்ஸ்

நிஷா ஷர்மாவை எங்களில் ஒருவருக்கும் தெரியாது. புதுடில்லியைச் சேர்ந்த 21 வயது இளம் பெண்ணான அவள் ஒரு மென்பண்ட பொறியியல் மாணவி (Software Engineering Student)

இந்திய ஊடகங்கள் ஒரே இரவில் அவளை பிரபலசினிமா கதாநாயகிகளின் மட்டத்துக்கு உயர்த்தி விட்டிருக்கின்றன. அவளைப் பற்றிய செய்திகள் ஊடகங்களில் பரபரப்பாக அலசப்படுகின்றன .வீட்டிலிருந்தபடியே பத்திரிகைகள், வானொ லிக்கு பேட்டிகள் வழங்குகின்றாள். தொலைபேசியில் தொடர்ந்து பாராட்டுக்கள் குவிகின்றன. கடிதங் கள் மலையாகக்குவிகின்றன.

இவளுக்குக்கிடைத்த புகழை வாய்ப்பாகப்பயன் படுத்த முனைந்த அரசியல் கட்சியொன்று அடுத்த தேர்தலில் தங்கள் சார்பில் போட்டியிடும்படி கேட்டிருக்கிறார்கள்.

இவையனைத்தும் கிட்டுவதற்கு அவள் செய்த சாதனை தான் என்ன? ஆசிய சமூகங்களில் குறிப்பாக இந்தியாவில் தலைவிரித்தாடும் சீதன அரக்கனுக்கு ஒரு மரண அடி கொடுத்ததுதான் அவளது சாதனையாகும்.

வழமையாக நிகழ்வது போல் திருமண முகவர்கள் ஊடாக அவளுக்கு அவளது பெற்றோர்கள் மாப்பிள்ளை தேடினார்கள். கடைசியாக கணனி போதனாசிரியரான ஒருவரை தெரிவுசெய்தார்கள். திருமணத்துக்கு நாளும் குறித்தாயிற்று. திருமணப் பேச்சுக்களின்போது தனக்கு எதுவும் தரத்தேவையில்லை என்று மணமகன் கூறியிருந்தார். ஆனால்திருமண நாள் அன்று கிட்டத்தட்ட 25,000 டொலர்கள் சீதனமாக தராவிட்டால் தாலி கட்டமாட்டேன் என்று கூறிவிட்டான்.

இந்தியாவில் இது சர்வசாதாரணமானதுதான். நான்கு வருடங்களுக்கு முன் இந்தியாவில் சீதனம் கொடுப்பதும் பெறுவதும் சட்டமூலமாக தடைசெய்யப்பட்டுள்ளது எனினும் நடைமுறையில் சீதனம் கொடுப்பதும் பெறுவதும் இடம் பெற்றுக்கொண்டுதான் இருக்கிறது.

சீதனத்தின் அளவுகளும் வானத்தைத்தொடும் அளவுக்கு உயர்ந்து கொண்டுதான் போகின்றது. சீதன அரக்கனின் கொடுமையால் பெண் பிள்ளைகளை பெறுவதே பெரும் சாபக்கேடு என்ற நிலைமை இந்தியாவில் உருவாகியிருக்கிறது. பெண்களைப்பெற்றால் சீதனம் தேட வேண்டுமே! ஸ்கானிங் முறையில் கருவிலிருப் பது பெண் என்று தெரிந்தால் கரு விலேயே வைத்தே அதனை அழித்து விடும் கொடுமை அங்கே நடக் கிறது. பெண் குழந்தை பிறந்தால் தாயே அதன் கழுத்தைத் திருகி, யாரும் அறியாமல் புதைத்துவிடும் கொடுமை அங்கே நிகழ்கிறது.

சீதனம் கொண்டுவரத் தவறும் மனைவியர் கொல்லப்படுவதும் அங்கேதான் அரங்கேறுகிறது. அநேகமான சந்தர்ப்பங்களில் மணமகனின் பெற்றோர், சகோதர சகோதரிகளே அக் கொலைகளை புரிகிறார்கள். பல சந்தர்ப்பங்களில் இக்கொலைகள். சமையலறையிலேயே நிகழும். மண்ணெண்ணை ஊற்றிக் கொழுத்திவிட்டு மண்ணெண்ணை அடுப்பு வெடித்து விட்டதாகக் "கதை" செய்வார்கள்.

வறுமையும் இலஞ்சமும் தலை விரித்தாடும் இந்தியாவில் இந்தக் கொலைகளும் சர்வசாதாரணமாக "அமுக்கப்"பட்டுவிடும். ஆனால் .நிஷா ஷர்மாவின் விடயத்தில் இது நடக்கவில்லை. புதிய வரலாறு ஒன்றை அவள் படைத்திருக்கிறாள்.

மணமேடையில் அமர்ந்திருந்த அவளது காதில், அவளது சகோதரன் வந்து மணமகன் சீதனம் கேட்டதையும் அது இல்லாமல் தாலிகட்ட மறுப்பதையும், நியாயம் கேட்ட அவளது தந்தையை மணமகனும் உறவினருமாக தாக்கியதையும் கூறி விட்டான்.

நிஷா பத்திரகாளியாக எழுந்தாள். திருமணத்துக்கென மருதாணி இட்டிருந்த அவளது விரல் தொலைபேசி இலக்கங்களை அழுத்தியது. பொலிசார் வந்தனர். சீதனம் கேட்ட மணமகன் பொலிஸ் விருந்தாளியானார். முதலிரவாக இருக்க வேண்டிய பொழுதை பொலிஸ் நிலைய மொன்றின் சிறை அறையொன்றில் தனியாகக் கழித்தார். அவர் மீது சீதனம் கேட்டதற்கும் மணமகளின் தந்தையை தாக்கியதற்குமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படப் போகின்றது.



நீங்கள் இப்படி முடிவு எடுத்து நடவடிக்கை எடுத்தது குறித்து ஏதாவது கவலைப் படுகிறீர்களா என்று பேட்டியாளர்கள் நிஷாவைக் கேட்டிருக்கிறார்கள்.

சம்பவம் இடம் பெற்ற ஒவ்வொரு கணத்தையும் மகிழ்ச்சியுடன் அனுபவித்ததாகவும் தனது செயல் குறித்து தான் பெருமையே கொள்வதாகவும் அவள் கூறியிருக்கிறாள். சம்பவத் துக்கு பின்பு, தொலைபேசியிலும் கடிதங்களிலும் தொடர்பு கொண்ட பல ஆண்கள், அவளது துணிகரத்தை மதித்து அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாக இசைவுக்குறிப்புகளையும் தெரிவித்திருக்கிறார்கள்.

"திறம் வேலை...." என்று உங்களில் பலர் நிஷா ஷர்மாவை மனதுக்குள் பாராட்டிக்கொண்டிருப்பீர்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

ஆனால் அதீத துணிவு கொண்ட நிஷா ஷர்மா என்ற பெண்ணையோ அவளது துணிகரச்செயலையோ உங்களுக்கு அறியத் தரும் நோக்கிலான கட்டுரையாக இது இல்லை.

எங்கள் மண்ணிலும் சீதனம் கொடுப்பதும் வாங்குவதும் நிகழ்ந்து கொண்டு தான் இருக் கிறது. ஆனால் இங்கே ஒரு புதிய கலாச்சாரம் உருவாகிக் கொண்டிருக்கின்றது. "வெளிநாட்டு மாப் பிள்ளை" கலாச்சாரம் தான் அது. இங்கேயிருந்து கிட்டத்தட்ட 3500 மைல் தூரத்தில் இருக்கும் ஏதாவதொரு ஐரோப்பிய அல்லது அமெரிக்கக் நாட்டிலே ஒரு மாப்பிள்ளை இருப்பார்.... இங்கிருக்கும் பெண் ஒருத்தி வேண்டும் என்று ஒற்றைக்காலில் அவர் நிற்பார். வெளிநாட்டில் பல பெண்களை "அனுபவித்து" இருக்கக் கூடிய அவருக்கு, இங்கிருந்து வரும் 'பவித்திரமான' பெண் தேவை. அதுதான் அந்த ஒற்றைக்காலில் நிற்பதன் இரகசியம்.

அத்தோடு சீதனமும் பேசுவார். இங்கு ஒரு காலத்தில் பத்தாயிரங்களிலிருந்த சீதனத்தொகை பல பத்து லட்சங்களாக உயர்ந்து விட்டது. "வெளிநாட்டு மாப்பிளை" வேணுமென்றால் அதற்கேற்ப சீதனமும் கொடுக்கத்தானே வேண்டும்.? தற்சமயம் வெளிநாட்டு மாப்பிள்ளைகளின் விலைகள் கோடி ரூபாய்களையும் தாண்டிவிட்டதாக தெரிய வருகிறது.

இங்கிருக்கும் பெண்ணின் யாராவது ஒரு பாவப்பட்ட சகோதரன் நெஞ்சால் இரத்தம் சிந்தி, அந்தத்தொகையை உழைத்துக் கொடுப்பான் சிலவேளை புகைப் படத்தில் மட்டும் கண்ட அந்த முன் பின் அறிமுக மில்லாத மாப்பிள் ளையைத் தேடி இங்கிருக்கும் மணப் பெண் அனுப்பிவைக்கப்படுவாள். வெளிநாட்டுக்குப் போகும் ஆசை யோடு அவளும் இங்கிருந்து போவாள். அங்கே போனதும் சில வேளை புகைப்படத்தில் பார்த்த உருவத்துக்கும் மாப்பிள்ளையாக வந்து நிற்பவருக்கும் பாரிய "கால் வேறுபாட்டு" வித்தியாசங்கள் இருக்கும். மனத்துக்குப் பிடிக்காவிட்டாலும் "தலைவிதியே" என்று கிடைத்தவாழ்க்கையை ஏற்றுக் கொண்டு விடுவார்கள். வேறுவேறு பரிதாபங்கள் நிகழ்வதும் உண்டு. அவற்றை ஆராய்வது எமது நோக்கமல்ல.

நிஷா ஷர்மாவின் துணிவு எங்கள் சகோதரிகளுக்கு வராதா என்ற ஏக்கமே இக்கட்டுரையின் பின்னணியாகும். எங்கள் மண்ணிலும் சீதனத்தை சட்டம் போட்டு தடுக்கும் முயற்சி நடந்தது. ஆனாலும் அதுவெற்றி பெறவில்லை. என்னதான் பெண் விடுதலை என்று பேசினாலும் சீதனம் கொடுக்கும் பெண்களும் வாங்க நினைக்கும் ஆண்களும் தாமாக முன்வந்தால் ஒழிய, இதனை ஒழிக்கமுடியாது.

இதில் ஆணாதிக்கம் பெண் ஒடுக்குமுறை என்று சித்தாந்தங்கள் கதைப்பதில் பயன் இல்லை, ஏனென்றால் சீதனத்தை வலியுறுத்துவதில் பெரும்பாலும் பெண்களே அதிக முனைப்பாக இருக்கிறார்கள்.

சீதனம் என்பது முன்பு மணமக்களுக்கான பொருண்மிய ஆதரவை ஏற்படுத்தும் நோக்கத்தையே கொண்டிருந்தது. பெண்ணின் பெற்றோர் விரும்பித்தருவது என்பது வேறு விடயம். ஆனால் சகோதரிக்கு டொணேசன், தாலி, கூறைச் செலவு கல்யாணச் செலவு என்று பட்டியல் போட்டுக்கேட்பது அதியுச்ச "பேடி"த்தனம்.

எமது அன்புக்குரிய சகோதரிகளே இன்று ஆண்களுக்கு நிகராக கல்வி கற்று பல்வேறு தொழில் துறைகளிலும் பிரகாசிக்கும் நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிஷா ஷர்மாவாக மாறவேண்டும் என்பதே எமது ஆசை •

## ஊக்க மாத்திரை

# துணிந்து நில்...துணிந்து செல்...

ச.முருகானந்தன்



**ஒரு மனிதனின் நம்பிக்கையும் துணிந்த செயற்பாடும் வாழ்வில் வெற்றி யைத் தரும் என்பதில் சந்தே கமில்லை. எந்த ஒரு விடயத்திலும் இறங்கும் போது முதலில் தேவையானது தன்னம்பிக்கையாகும். எவ்வளவு கடினமான பெரிய காரிய மானாலும் நம்பிக்கையோடு காலடி எடுத்து வைத்தால் தான் வெற்றிக் கனியைப் பறிக்கமுடியும். அதேவேளை எவ்வளவு இலகுவான சிறியகாரியத்தைக் கூட தன்னம்பிக்கையோடு இறங்காவிட்டால் சாதிக்க முடியாது.**

**எவரஸ்ற் மலைச் சிகரத்தைப் பார்த்து 'அடேயப்பா இது எவ்வளவு உயரமானது இதில் யாருமே ஏற முடியாது, என்று டென்சிங்கு,கிளாறியும் நினைத்திருந்தால் அவர்களால் அந்தச்சாதனையை எட்டியிருக்க முடியுமா? தமிழீழம் என்பது சாத்தியமில்லாத ஒன்று என்று எமது தலைவர் நினைத்திருந்தால் இன்று இவ்வளவு அளப்பரிய வெற்றிக் கனிகளை நாம் சுவைத்திருக்க முடியாமல் போயிருக்கும். ஒரு சில இளைஞர்கள் ஒன்று சேர்ந்து ஒரு நாட்டு இராணுவத்தையே எதிர்த்து வெற்றி கொள்ளும் இலட்சிய வேட்கையுடன் களம் இறங்கிய எழுபதுகளின் பிற் பகுதியில் 'பொடியளின் விசர் வேலை... வீணாக அழியப் போறாங்கள், என்று தான் பலரும் முணுமுணுத்தார்கள். ஏன் பகிரங்க மாகவே புத்தி கூறினார்கள். ஆனால் நம்பிக்கையுடன் செயற்பட்ட இளைஞர்கள் இன்று தமது இலட்சியப் பயணத்தின் உச்சிக்கு வந்து விட்டார்கள்.**

**கையிலே ஒரு எறி குண்டுடன் களமிறங்கிய பதினேழு வயதுச்சிறுவன் தான் இன்று நவீனரக ஆயுதங்களுடன் ஒரு நாட்டின் பலம் பொருந்திய படைக்கே சவால் விடுமளவுக்கு வளர்ந்துள்ளான் என்பதை நினைக் கும் போது வியப்பாக இருக்கிறதல்லவா?**

**இதிலே வியப்படைய ஏதுமில்லை. கொண்ட கொள்கை நியாயமானதாக இருந்தது. மனதில் நம்பிக்கை இருந்தது. உறுதி இருந்தது. வெறும் நம்பிக்கையோடும் உறுதியுடனும் மட்டும் நின்றுவிடாமல் துணிவு இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக செயற்திறன் இருந்தது. மனதில் உறுதி வேண்டும் என்று கவி பாரதி சொன்னது போல் 'தமிழீழம்,ஒன்று தமிழருக்கு முழுமையானதும் இறுதியானதுமான தீர்வு என்று உறுதியாகப்பற்றி நின்றார். அதற்கான வழி முறைகளைத் தெளிவோடு சிந்தித்து துணிவோடு செயற்படுத்தினார். எனவே இளைஞ ர்கள் பெரும் எண்ணிக் கையில் அவர் பின் அணிதிரண்டனர்.**

**எமது வாழ்வில் ஏற்படுகின்ற எந்த விடயத்திலும் வெற்றிகாண துணிவும் நம்பிக்கையும் தான் முக்கிய மூலதனம். கல்வி தொழில் எதுவாயினும் சரி நாம் முன்னேற நம்பிக்கை உறுதி துணிந்த செயற்பாடு - விடாமுயற்சி என்ற தடத்தில் சென்று வெற்றி காண்போம்.**

**துணிவு என்று குறிப்பிடும் போது அசட்டுத் தனமான துணிவையும் சண்டித் தனங்களையும் நாம் இதில் சேர்த்துக் கொள்ளக் கூடாது. புலி பதுங் குவதற்கு காரணம் நிதா னமே. சமயம் பார்த்துப் பாய் கிறது. அது போலவே நமது துணிவும் இருக்க வேண்டும்.**

**நாம் நல்ல விடயங்களைத் தேர்ந்தெடுப்போம். பின்னர் அதில் துணிவுடன் இறங்குவோம். இதையே திருவள்ளுவர்**

**"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுதல் என்பது இழுக்கு"**

**என்று கூறியிருக்கிறார். இதையே 'முன் வைத்த காலைப்பின் வைக்காதே, என்று சான்றோர் சொன்னார்கள் சிறுமைகளைக் கண்டு சீற்றம் கொள்கின்ற துணிவு இளைஞர்களுக்கு இருக்க வேண்டும். இதனாலேயே ஒரு நாடு உருப்பெறும்! •**

இணைந்து வாழும் கலையே, கலைகள் அனைத்திலும் சிறந்தது. - வில்லியம் லையான்ஃபெல்ப்ஸ்

# முதுகெலும்பு ஒடிக்கப்பட்ட யாழ் ஊடகங்கள்

## ஒடித்தது - அரச அதிகாரிகள்

யாழ் மாவட்டத்தில் சிறிலங்கா அரச அதிகாரிகளால் ஊடக ஜனநாயகம் - சுதந்திரம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது. இதில் முன்னின்று செயற்படுபவர்கள் - யாழ்மாவட்ட சிறிலங்கா அரச நிர்வாகங்களின் தலையில் உள்ள தமிழ் அதிகாரிகள் என்பது தான் அவலம்.

போர்க்காலத்தில் சிறிலங்கா படையாதிகாரிகளும் அரசுத் தலைமையும் குடாநாட்டில் ஊடக ஜனநாயகத்தை - சுதந்திரத்தை மறுத்தன - புதைத்தன. இப்பொழுது இதனை கையிலெடுத்திருப்பவர்கள் அரச அதிகாரிகளும் தமிழ் அரசியல் வாதிகள் சிலருமாவர். யாழ்ப்பாண அரச செயலகம் அதாவது கச்சேரி, யாழ் போதனா மருத்துவமனை கல்வித்திணைக்களம் அல்லது வலயக்கல்விப் பணிமனை, பாடசாலைகள், ரெலிக்கொம், யாழ்மாநகரசபை, பிரதேச சபை,நீதிமன்றம் உட்பட்ட சகல அரச நிறுவனங்களும் யாழ்ப்பாண இயல்புச்செயற்பாடுகளை மக்களுக்கு செய்திகளாகச் சொல்ல வேண்டியதை தடுத்து நிற்கின்றனர்.

யாழ் போதனா மருத்துவமனையில் இருந்த சுத்தக்கேடுபற்றி நாளேடு ஒன்று ஆதாரங்களுடன் செய்தி வெளியிட்டது. மறுநாள் போதனா மருத்துவமனை நிர்வாகத்தால் நாளேட்டிற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நாளேட்டின் ஆசிரியர் நீதிமன்ற கூண்டில் ஏற்றப்பட்டார். அவர் உண்மைகளை ஆதாரங்களுடன் விளக்கினார். இனி எதனையும் தம்மை கேட்டே போட வேண்டும் என மருத்துவமனை நிர்வாகம் வற்புறுத்தியது.

ஒரு ஊடகம் இப்படிச் செய்யமுடியாது. ஊடகவியல் இப்படிப்பட்டது இல்லை. அப்படியானால் ஒரு ஊடகத்தின் பணி தான் என்ன. அப்படியானால் நிறுவனங்களின் மோச்டிகளை ஊடகங்கள் பேசப்பட்டதா ஊடகங்கள் தமது ஆணிவேரான முதுகெலும்புகளை கழற்றிவைக்க வேண்டுமா.

இப்பொழுது அந்த நாளேட்டிற்கு செய்திகளை வழங்க முடியாது என யாழ் போதனா மருத்துவமனை கூறிவிட்டது. அரச பணிகள் - நிர்மாணப்பணிகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல் விளம்பரங்களும் அந்த நாளேட்டுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

மற்றொரு விடயம் - இது அடுத்த நாளேட்டிற்கானது அரச செயலகத்தில் மோசடிகள் அமளி துமளியாக நடக்கின்றன. இதில் அரச அதிபர் தொடர்புபட்ட மோசடி ஒன்று ஆதாரங்களுடன் நாளேட்டில் வெளியிடப்பட்டது. அந்த நாளேட்டிற்கான செய்திகளுக்கும் விளம்பரங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அடுத்தது யாழ் மாநகர சபை, யாழ்நகரசபையின் முன்னாள் மேயரின் நாற்காலி மோசடிபற்றி

**திருநிலவன்**

ஊடுருவித் தகவலெடுத்து நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. நாளேடு வெளியான சில நிமிடங்களில் மேயருடன் தொடர்புடைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாளேட்டின் பிரதம ஆசிரியருக்கு தொலைபேசி வழியாக கேட்கத்தகாத வார்த்தைகளால் பேசியுள்ளார். இவை சில எடுகோள்கள் தான். இவை போல சிறிலங்கா அரச நிறுவனங்களதும், அரச சார்பற்ற நிறுவனங்களதும் மோசடிகளை ஆதாரபூர்வமாக தெரிந்தும் வெளியிட முடியாத நிலை யாழ்ப்பாண ஊடகங்களுக்கு உள்ளது. மக்களுக்கு நன்மை தரக்கூடிய செய்திகளை தருவதற்கு வேண்டிய நாளேடுகளின் சுதந்திரத்தை மோசடி மலிந்திருக்கும் யாழ்ப்பாண அரச நிறுவனங்கள் இதனால் மோசடிகளை அம்பலப்படுத்த அங்குள்ள நாளேடுகள் பயப்படுகின்றன.

ஊடக சுதந்திரத்தை குழிதோண்டிப் புதைக்க யாழ் அரச நிர்வாகங்களுக்கு துணை போவதாக சிறிலங்கா நீதிமன்றங்கள் உள்ளன.

ஊடகவியலாளர்கள் படையினரால் தாக்கப்பட்ட விவகாரங்களுக்கு தீர்வளிக்க வக்கற்ற அரச நீதிமன்றங்கள் ஊடகங்கள் உண்மைகளை வெளியிடுவதை தடுப்பதில் சட்டங்களை முறையாகப் பயன்படுத்துகின்றன.

அண்மையில் வன்னியிலிருந்து செல்லும் ஊர்திகளுக்கு அரச அனுமதிப்பத்திரம் காப்புறுதி, ஓட்டுநர் அனுமதிப்பத்திரம், என்பன இல்லாதவற்றை யாழ்ப்பாணத்துக்கு அனுமதிக்கவேண்டாம் எனவும் - அவர்களைப்பிடித்து தண்டமிட வேண்டும் எனவும் - யாழ் நீதிமன்றம் சிறிலங்கா பொலிசாருக்கு உத்தரவிட்டது. இதன் பின்பு போராளிகள், மக்கள் முகமாலையில் வைத்து சிறிலங்கா பொலிசாரால் திருப்பி அனுப்பப்படுகின்றனர். இந்த அவலத்தை வெளிப்படுத்த முடியாதபடி நீதிமன்றம் ஊடகத்துறையை அடக்கி வைத்திருக்கிறது.

யாழ்ப்பாண ஊடகங்கள் அரச நிறுவனங்கள் நீதிமன்றங்கள் இதனை எமக்கு தெரிவித்ததற்காக கூட இந்த நிறுவனங்களால் பழிவாங்கக்கூடும்.

சிங்கள நாளேடுகள் சிறிலங்காவில் துணிச்சலாக யாருக்கெதிராகவும் செய்தி வெளி யிடுவது போன்ற நிலைமை யாழ்ப்பாணத்தில் இல்லை என யாழ் ஊடகவியலாளர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

மோசடிகள் மலிந்துள்ள யாழ் அரச நிர்வாகங்கள் உண்மையில் தம்மை மாற்றத்தயாராக இல்லாததன் விளைவே ஊடகத்துறையின் சுதந்திரத்தை குழிதோண்டிப்புதைத்துள்ளமையாகும்.

---

(2ம்பக்கம் பார்க்க)

நிரந்தரமாக வைத்திருப்பதைக் கருத்தில் கொண்டதாகவே வரையறுக்கப்பட்டுள்ளன.

ஆகவே இந்த அரசியல் யாப்பு முற்றிலும் மாற்றியெழுதப்படாதவரை சமாதான நகர்வுகள் வெறும் நத்தை வேக நகர்வுகளாக மட்டுமே இருக்கும்.

அரசியல் யாப்பை மாற்றி எழுதும் பெரும்பான்மை பலம் ரணிலிடம் இல்லை... இப்போதைக்கு அப்படியொரு பலம் அவருக்குக் கிடைப்பதற்கான சாத்தியம் எதனையும் சந்திரிகா அனுமதிக்கவும் போவதில்லை. இது இன்றைய சிறிலங்காவின் அரசியல் யதார்த்தமாகும்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை அரசியலமைப்புக்கு வெளியே நின்று, தேசிய நலன் கருதி, சமாதானதத்தின் ஸ்திரத்தன்மைக்கு வலுவூட்டும் நோக்குடன், அமைக்கவே தயங்கும் ரணிலின் அரசு....

-அது குறித்து உத்தரவாதம் அளிக்கக் கூடப்பின்னடிக்கும் அரசு... நிரந்தர சமாதானத்தை, உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வொன்றை முன்வைப்பதன் மூலம் ஏற்படுத்தும் என்பதை எவரால் தான் நம்ப முடியும்.

-இன்று ரோக்கியோ மாநாட்டில் ரணிலுக்குப்பக்கபலமாக நின்று சமாதானத்தின் பேரால் நிதியைப் பெற்றுக் கொள்ள அரும்பாடுபட்ட இதே பேராசிரியர்-அமைச்சர்-ஜி.எல்.பீரிஸ் முன்னர் சமாதானதற்கான யுத்தத்தை நியாயப்படுத்திக் கொண்டு சந்திரிகாவின் கோட்பாட்டை முன்வைத்தபடி நாடுநாடாகச் சென்று போருக்கான 'மடிப்பிச்சை' நிதி கேட்டும் அலைந்தவர் என்பதை தமிழ் மக்கள் நன்கு நினைவில் கொள்பவர்களாகவே உள்ளனர்.

இப்பொழுது சர்வதேசம் வழங்கும் நிதியானது, அரச சட்டவிதி முறைக்குள் நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் என்று ரணிலின் பொருளாதார ஆலோசகரும்-வலதுகை போன்றவருமான மிலிந்த மொறகொட கூறியிருப்பதையும் இப்பொது கருத்தில் கொண்டேயாக வேண்டும்...

ஆக... கிடைக்கப் போகும் பெருமளவு நிதியானது சிறிலங்காவை வளப்படுத்தும்- தென்பகுதியை மேம்படுத்தும்-அதன் மூலம் அரசை ஸ்திரப்படுத்தும் நோக்குடன் பயன்படுத்தப்போகின்றது என்பதையே மொறகொடவின் பேச்சு தெளிவுபடுத்துகிறது.

நெல்லுக்கு இறைக்கப்படப்போகும் நீர்... வடகிழக்குப் பகுதிகளுக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு என்ற பெயரில்... புல்லுக்கு ஆங்கே பொசியப் போகிறது....! அவ்வளவு தான்...

இதற்காகவா விடுதலைப்புலிகளை ரோக்கியோவுக்கு வாருங்கள் என அழைத்தீர்கள்?


அவர்கள் அதை நிராகரித்ததன் அர்த்தம் புரிகிறதல்லவா? விடுதலைப் புலிகள் அதனை நிராகரித்ததன் நியாயத் தன்மையை சர்வதேச சமூகம் மாநாட்டில் ஓரளவு பிரதிபலிப்பதாகவே செய்துள்ளது. அது சமாதானத்தை நிதியுதவிகட்கு நிபந்தனையாக முன்வைத்துள்ளது. அதன் முன்னேற்றம் குறித்த மதிப்பீட்டிலேயே நிதியை வழங்க முன்வந்துள்ளது.

சமஷ்டி முறையிலான தீர்வை நோக்கிப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. அனைத்திலும் மேலாக வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பைப் பற்றி ரணிலைப் பேசவும் வைத்துள்ளது. இது விடுதலைப்புலிகளுக்கு அரசியல் ரீதியில் கிடைத்துள்ள ஒரு வெற்றியாகும்.

இங்குள்ளது பயங்கரவாதப் பிரச்சினையல்ல... போரினால் தீர்க்கப்பட முடியாத 'சமஷ்டி' அமைப்பு ரீதியில் தீர்க்கப்பட வேண்டிய அரசியல் பிரச்சினை தான் என்பதையே ரோக்கியோ மாநாடு சர்வதேச சமூகத்திற்குப் பிரகடனம் செய்துள்ளது. இது விடுதலைப்புலிகளதும் தமிழ்மக்களினதும் விடுதலைப் போராட்டத்திற்குக் கிடைத்துள்ள மறைமுகமான சர்வதேச அங்கீகாரமுமாகும்.

---

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –22



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள் –22**

.............................................................

.............................................................

.............................................................

.............................................................

பெயர் : .............................................

முகவரி : .............................................

.............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் 21



ம. அருள்யோண்சன்,
த.போ.கழகம்.நடுவகம்,
விசுவமடு.

### பரிசுக்குரிய வரிகள்

பாதையதில் போகுமுயிர் பறிக்கும் இதன் செயல்கள் - அன்று
பதைபதைக்க பல உயிர்கள் துடித்த கதை தெரியுமிதன் முகத்தில்
இருந்தும், சீரழிந்த வீதி வகை செய்யும் திறன்கள் - என்றும்
அதனால் தான் எம்மனதில் நிஜமாக தோன்று மிதன் குணங்கள்.

### பாராட்டுக்குரிய வரிகள்

*பாதிழி வந்த உன்னை மோதிவிட்டுப் போனவர் யார்?*
*மீதிவழி போகு முன்னே நிர்க்கதியாய் விட்டவர் யார்?*
*வீதிவழி வந்தவற்றை விலத்திநியும் வந்திருப்பாய்*
*மூடிவிழி வந்த யாரோ முட்டிவிட்டார் உன் முகத்தை*

காரை - விசாகன்,
கனகா ஸ்ரூடியோ,
ஆலடி, காரைநகர்.

*வீதியைச் செப்பனிட நீ எம் வாசல் வந்தாய்*
*விவேகமற்ற செயலால் முட்டி மோதிக்கொண்டாய்*
*வீதியைச் செப்பனிடுவ்தா - இப்போ*
*உன் முகத்தைச் சீர்படுத்துவதா?*

இ.ராஜன்,
இல.249,சிவசுந்தரம்வீதி,
வட்டக்கச்சி - கிளி

*வீதி திருத்த வந்தாயா?*
*வீதி விபத்தை தந்தாயா?*
*எமது வளம் (மண்) அள்ளவந்தாயா?*
*இதில் எது உன் பணி.*

கா.விக்கினேஸ்வரன்,
கடை வீதி.
முல்லைத்தீவு,

*முற் திட்டமிட்டு - பழைய*
*முறிண்டியானை தொழுது*
*முகூர்த்த நிகழ்வுக்குச்சென்ற*
*மூவரைப் பலரைப் பலி எடுத்தனையோ.*

ரி.ஜீவா,
276,ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.





தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மனித நேய கண்ணிவெடியகற்றும் பிரிவின் புதிய அணி ஒன்று கடந்த வாரம் பயிற்சி முடித்து வெளியேறியுள்ளது. 39 பேர் கொண்ட இப்புதிய அணிக்கான பயிற்சி பரந்தனில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சிநகரிற்கு அண்மையிலமைந்துள்ள பிரதான பாலம் ஒன்றின் நிலையே இது. அதிகம் போக்குவரத்திற்கு பயன்படும் இப்பாலம் இரண்டு தென்னங்குற்றிகளினாலே இணைந்திருக்கிறது. தற்போது இது திருத்தப்பட்டு வருகிறது.





கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி நகரில் ஆரம்பித்த திருக்குறள் மாநாட்டின் இரண்டாம் நாள் நிறைவு நிகழ்வின் இடம்பெற்ற ஊர்வலக்காட்சிகள். இம் மாநாட்டு இறுதி நிகழ்வு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இம்பெற்றது.

## வெள்ளிநாதம் விளம்பரக் கட்டணம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| 1 பக்கம் | 12000/= | 20000/= |
| அரைப்பக்கம் | 6000/= | 10000/= |
| கால் பக்கம் | 3000/= | 5000/= |
| ஒரு கொலம் 1cm | 60/= | 100/= |

## வெள்ளிநாதத்தை

இலங்கை எங்கிலும் பெற

வெள்ளிநாதத்தின் சந்தாதாரராகுங்கள்

| | |
|---|---|
| ஆண்டுச்சந்தா | 750/= |
| அரையாண்டுச்சந்தா | 400/= |

தபால் மூலம் எல்லா இடங்களிற்கும்அனுப்பி வைக்கப்படும்.







இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜுன் மாதம் 13 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.